பெப்ரவரி 04, 2001 ரூபா 14.00 அறிமுக விலை ரூபா 12.00
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



# அரசு-புலிகள் பிரச்சினை மேலும் இறுகிவருகிறது

# அவதூறு செய்தவர்களுக்கு சாயிபாபா அளித்த பதில்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் படிப்பகம்

# தமிழ்ப் பாடசாலைகளை இப்படி பட்டினி போடுவதா?

## இரத்தினபுரி மாவட்டத்தில் பாடசாலைகளை மூடுமளவுக்கு ஆசிரியர் பற்றாக்குறை

இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழ்ப் பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாமை கல்வி நிலையில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தி வருகிறது.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள 96 தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் ஐந்து முஸ்லிம் பாடசாலைகள் இருக்கின்றன. இவற்றில் ஒரேயொரு தேசியப் பாடசாலையாக பலாங்கொடையில் அமைந்துள்ள ஒரு முஸ்லிம் கல்லூரி விளங்குகிறது. ஏனைய பாடசாலைகள் மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்றன. இப்பாடசாலைகள் அனைத்திலும் பெருமளவு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதை இப்பகுதிப் பாடசாலை அதிபர்கள் முதல் கல்விப் பணிப்பாளர்கள் வரை ஏற்றுக் கொள்கின்றனர்.

இம்மாவட்டத்தின் நகர்ப்பகுதிகளில் சுமார் 15 மகா வித்தியாலயங்கள் அமைந்துள்ளன. இவற்றில் மத்திய அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் ஒரே தேசியப் பாடசாலையில் ஆசிரியர்கள் இல்லாமையால் உயர்தர விஞ்ஞானப் பிரிவு மூடு விழா கண்டு விட்டது.

ஏனைய கலை, வர்த்தகப் பிரிவுகளிலும் போதிய ஆசிரியர்கள் இல்லை. வெளியூர் ஆசிரியர்களின் துணையினால் வகுப்புக்கள் நடை பெறுகின்றன.

க.பொ.த சாதாரண, உயர்தர வகுப்புக்கள் நடைபெறும் பாடசாலைகளில் ஒரு சில ஆசிரியர்களை வைத்து ''சமாளிப்பு'' முறையிலேயே பாடத்திட்டங்களைப் பூர்த்தி செய்ய முயற்சி மேற் கொள்ளப்படுகின்றது.

மோசமான ஆசிரியப் பற்றாக்குறையை உணர்ந்து வசதி படைத்த பெற்றோர் வெளி மாவட்டங்களுக்குத் தமது பிள்ளைகளை அனுப்பி வைக்கின்றனர். ஆனால் ஏழைப் பெற்றோர்களும் மாணவர்களும் என்ன செய்வார்கள்? பெருந்தோட்டப் பிள்ளைகள் தேயிலைக் காட்டுக்கும் முஸ்லிம் மாணவர்கள் இதைவிட மோசமான நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

நகர்ப்புறப் பாடசாலைகளில் நிலைமை இப்படியென்றால் பெருந்தோட்டப் பாடசாலைளைப் பற்றிச் சொல்லத்தேவையில்லை. என்ன பரிதாபம்! இவற்றில் 5ஆம் தரம் வரை உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கையே அதிகம். ஒருவர் அல்லது இருவர் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் பாடசாலைகளுக்குக் குறைவே இல்லை. ஆனால் 5 வகுப்புக்கள் வரையுள்ள பாடசாலைகளில் குறைந்தது 5 ஆசிரியர்களாவது தேவை. ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் தவிர விசேட பாடங்களுக்கெனப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் தேவை.

அரசாங்கம் புதிய கல்விச் சீர்திருத்தத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி கல்விக்காகக் கோடிக் கணக்கில் பணத்தைச் செலவழிக்கிறது. தரம் 1,2,3 களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

ஆனால் பெரும்பாலான பாடசாலைகளில் இவ்வகுப்புக்களில் கற்பிக்க ஆசிரியர்கள் இன்மையால் அதிபர்கள் திண்டாடுகின்றனர். அதே போன்று ஏனைய சில வகுப்புக்களுக்கும் சில விசேட பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் இவ்விடயத்திலும் புறக்கணிக்கப் படுகின்றார்கள்.

கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அவசியம் எனக் கருதுவோர், மாணவர் களுக்குக் கற்பிக்கப் போதிய ஆசிரியர்கள் தேவை என உணராமலிருப்பது ஏன்?

மலையகப் பாடசாலைகளின் முன்னேற்றத்திற்குப் பிரதான தடைக்கல்லாக விளங்கும் ஆசிரிய தட்டுபாட்டினை நீக்க சமாளிப்புக்காக ஆசிரிய நியமனங்களை வழங்காது போதுமான அளவில் நியமனங்களை வழங்கினால் மட்டுமே இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

—ஏ.ஏ.எம். பாயிஸ்

# வவுனியாவில் மீன் விலை: புளொட் இயக்கம் விளக்கம்

வவுனியாவில் மீன் விலை அதிகரித்திருக்கிறது என்று கடந்த வாரம் 'சுடர் ஒளி' 'அரசியல் அம்பலம்' பகுதியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

உண்மை நிலை அதுவல்ல. மீன் விலை 20.01.2001 க்கு முன்னர் இருந்ததை விட இப்போது குறைந்திருகிறது. என்று வவுனியாவிலிருந்து புளொட் இயக்கம் தெரிவித்திருக்கிறது.

ஒவ்வொரு மீன் இனத்தின் முந்திய விலையையும் தற்போதைய விலையையும் ஒப்பீட்டு முறையில் பட்டியலிட்டும் காட்டி இருக்கிறது.

புளொட் இயக்கம் வவுனியாவில் மீன் விற்பனைக்குப் பொறுப்பாக உள்ள இயக்கம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மீன் விலை பற்றிக் கடந்தவாரம் 'சுடர் ஒளி' யில் ''அரசியல் அம்பலம்'' பகுதியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:—

''இப்போது வன்னியில் மீனின் விலை ஆனைவிலை குதிரை விலையாக அதிகரித்திருப்பதற்கு மீன் வியாபாரத்தில் ஏகபோக உரிமையை நிலைநாட்டியுள்ள ஓர் இயக்கத்தின் நடவடிக்கைகள் தானாம் காரணம்.

மன்னார், திருகோணமலைப் பகுதிகளிலிருந்து குறைந்த விலைக்கு மீனைக் கொண்டு வரும் இந்த இயக்கத்தின் உறுப்பினர்கள் அதிக இலாபம் உழைக்கும் நோக்கில் அநியாய விலையில் மீனை விற்கிறார்களாம்........... ஆத்திரம் கொண்டுள்ள நுகர்வோர் இதற்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கியிருப்பதோடு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசு அதிகாரிகளையும் நெருக்கத் தொடங்கியிருக் கிறார்களாம்.''

இப்படி 'சுடர் ஒளி' யின் 'அரசியல் அம்பலம்' பகுதியில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

புளொட் இயக்கம் மீன் விலை தொடர்பான விளக் கத்தை ஒரு துண்டுப் பிரசுரம் மூலம் வழங்கியிருக்கிறது. துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டு இருப்பதாவது.

கீழே குறிக்கப்பட்டுள்ள மீன் விலையைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

| | 20.01.2001. க்கு முன் | 20.01.2001. க்கு பின் |
|---|---|---|
| விளைமீன் | 160/— | 120/— |
| கணவாய் | 180/— | 150/— |
| பாரை | 180/— | 150/— |
| சீலா | 180/— | 150/— |
| சாளை | 80/— | 50/— |
| நண்டு | 120/— | 110/— |
| முரல் | 140/— | 120/— |

நாமே கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக மீன் குத்தகையை வவுனியா நகரசபையில் சட்டப்படி எடுத்து வியாபாரம் செய்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.

நாம் மீன் மொத்த வியாபாரியாக இருந்தும் குறிப்பிட்ட சில வியாபாரிகளுக்கே அந்த உரிமையை வழங்கியிருந்தோம்.

இவ் வியாபாரிகளால் மக்கள் வெகுவாக பாதிப்படைந்ததோடு, இயக்கமும் மிகப்பாரிய அவப்பெயரைச் சுமக்க வேண்டியிருந்தது.

மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் நாம் கடந்த காலங்களில் இந் நிர்வாகத்தை செம்மைப்படுத்த முயன்றும் எமது சக்திக்கு அப்பாற்பட்ட சில காரணங்களால் அதை நடைமுறைப்படுத்தும் சாத்தியப்பாடு இல்லாமல் போய்விட்டது.

இதனடிப்படையில் எமது அமைப்பு கீழ்க்காணும் சில நடவடிக்கைகளை 20.01.2001 முதல் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

(01) எமது அமைப்பின் பெயரைப்பயன் படுத்தித் தனிமனிதர்கள் கொள்ளை இலாபம் ஈட்டுவதைத் தடைசெய்வது.

(02) ''போர்மலின்'' அடிக்காத சுகாதாரமான மீனை மக்களுக்கு வழங்குவது.

(03) குறைந்த விலையில் மீன் சகலருக்கும் கிடைக்க வழிசெய்வது.

(04) மீன் பிடி படுமிடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட வியாபாரிகள் போட்டிக் கொள்முதலை ஏற்படுத்தி செயற்கையான மீன் விலையேற்றத்தை ஏற்படுத்தாது தடுத்து நிறுத்துவது.

(05) இதர மீன் விற்பனை செய்யும் சில்லறை வியாபாரிகள் பாதிப்படையாமல் அவர்களையே தொடர்ந்து சில்லறை வியாபாரத்தை மேற்கொள்ள வழி செய்வது.

(06) 1999 ஆம் ஆண்டு எம்மால் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டிருந்த ''மீன்'' விற்பனை விலைப்பட்டியலின் அடிப்படையில் மீன் விற்பனை விலையை தீர்மானம் செய்வது.

புளொட் வரி அறவிடுகிறது என்று எமது அமைப்பின் பெயரைப் பயன்படுத்தி பிழைப்பு நடத்தியவர்களை இனங்காட்ட வேண்டிய தேவை ஏற்பட்டதனால் மேற்குறிப்பிட்டநடைமுறைகளைச் செயற்படுத்துமுகமாக கடந்த 20.01.2001 முதல் நாமே மொத்த வியாபாரத்தை நடத்துவது எனத் தீர்மானித்தோம்.

இந் நடவடிக்கையால் மேலே குறிக்கப்பட்டுள்ள விலைக்கு மீன் விற்பனை செய்வது சாத்தியப்பட்டுள்ளது.

மழை, காற்று போன்ற ஒழுங்கற்ற கடற் சூழலின் மத்தியிலும் ஒரு சில தினங்களிலேயே இதை நடைமுறைப்படுத்த எம்மால் முடிந்துள்ளது.

சீரான காலச் சூழ்நிலையில் தினசரி 4000 கிலோ மீனை நாம் சந்தைக்குக் கொண்டுவரும் போது மீன் தட்டுப்பாடு இல்லாமல் போய்விடும்.

வவுனியாவில் மொத்த வியாபாரிகள் என்று சொல்லும் ஓரிரு நபர்கள் இதில் பாதிக்கப்படலாம். லட்சக்கணக்கான மக்கள் நன்மையடையும் போது ஓரிருவர் பாதிப்படைவது இயல்பே.

மக்கள் எமது நடவடிக்கைக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டு மெனக் கேட்டுக்கொள்வதோடு ''ஹர்த்தால்'' செய்வோம் என மிரட்டுவதும், ''மீன் வியாபாரிகள் சங்கம்'' என்று பதியப்படாத ஒரு பொய்யான சங்கத்தினை ஏற்படுத்திப் பத்துப்பேர் கையொப்பமிட்டு பழைய நடைமுறையையே மேற் கொள்ளக் கேட்பதுவும் மீண்டும் பழைய வியாபாரிகளே கொள்ளை இலாபம் அடையும் வழிக்கு இட்டுச் செல்லு மென பொதுமக்களாகிய உங்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம். இப்படிப் புளொட் இயக்கத்தின் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# ஆர்ட்டிலறி, ஷெல் இன்றி யாழில் மற்றொரு யுத்தம்!

யாழ். மாவட்டத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தில் ஊழல்கள் நடப்பதாகச் சீறிப் பாய்ந்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன்.

சமாஜத்தில் நடக்கும் ஊழல்கள் குறித்து பகிரங்க விவாதத்துக்கு வருமாறு சமாஜத்தின் தலைவர் சீ.வி.கே. சிவஞானத்துக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் அவர். இந்த இரு தரப்பினரும் நீண்ட காலமாகவே மாறிமாறி குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வந்துள்ளனர்.

சீ. வி. கே. சிவஞானத்தின் தலைமைப் பொறுப்பு தொடர்பாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. அதனை அடுத்து அவர் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை சமாஜத்தில் அங்கம் வகிக்கும் சங்கங்களின் பிரதிநிதிகள் கடந்த வாரம் கூடி நிறைவேற்றி இருந்தனர்.

அதனையடுத்தே சிவஞானத்தைப் பகிரங்க விவாதத்துக்கு அழைத்திருக்கிறார் எம்.பி. மகேஸ்வரன். சுமார் 30 க்கும் மேற்பட்ட கேள்விகளை எழுப்பி அவற்றுக்குப் பகிரங்க விவாதம் மூலம் விடையளிக்க வருமாறு மகேஸ்வரன் கேட்டிருக்கிறார்.

சமாஜத்தில் இடம்பெற்ற ஊழல்கள், முறைகேடுகள் தொடர்பாகத் தான் தொடுத்துள்ள கேள்விக் கணைகளுக்கு 48 மணித்தியாலத்துக்குள் விடையளிக்க வேண்டும் இல்லையேல் பகிரங்க விவாதத்துக்குத் தயாராகுமாறும் சிவஞானத்தைக் கேட்டிருக்கிறார் மகேஸ்வரன்.

பிரபல வர்த்தகரான தி. மகேஸ்வரன் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானவர்.

முன்னாள் சிவில் சேவை அதிகாரியான சீ.வி.கே. சிவஞானம் பல பொது அமைப்புகளில் பொறுப்பான பதவிகளை வகித்தவர்; வகித்து வருபவர். யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றிணைக்கும் சமாஜத்தின் தலைவராகவும் தற்போது பதவிகளை வகிக்கிறார்.

கூட்டுறவு என்பது தனி ஒருவரின் சொத்து அல்ல. அதில் ஊழல்கள், முறைகேடுகள் இருப்பின் அது கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. அத்துடன் சம்பந்தப்பட்டோர் தண்டிக்கப்பட வேண்டியதும் அவசியம். மக்களின் சார்பில் கேள்விகளை எழுப்ப வேண்டியவர் நாடாளுமன்ற உறுப்பினர். அவ்வாறே அவர் செய்தும் உள்ளார்.

இதற்குத் தகுந்தபடி பதில் கொடுக்க வேண்டியது கூட்டுறவுத் தலைவரின் பொறுப்பும் கடமையுமாகும். ஏனெனில் அவரும் ஆயிரக் கணக்கான கூட்டுறவாளர்களின் பிரதிநிதியே.

மகேஸ்வரன் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் சமாஜத் தலைவர் சிவஞானம் பதில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அதில் அவர் சமாஜத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் பகிரங்கமானவை என்பதை வலியுறுத்தியிருக்கிறார். பகிரங்க விவாதத்துக்கு இதில் இடமில்லை என்று கூறி நாடாளுமன்ற உறுப்பினரின் பகிரங்க விவாத அழைப்பை நிராகரித்துள்ளார் சிவஞானம்.

மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற இருவரிடையே உருவாகியுள்ள 'மோதல்' குடாநாட்டு மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது. போர் நெருக்கடிகளால் இடம் பெயர்ந்து – நிவாரண விநியோகம் தாமதமடைவதால் – பெரிதும் அல்லல்பட்டு நிற்கிறார்கள் பொது மக்கள். இவர்களில் சிலர் இந்த 'மோதலை' 'சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்ப்பதுபோல்' பார்த்து நிற்கின்றனர்.

மோதலில் இறங்கியுள்ள இருவரும் வர்த்தக மற்றும் கூட்டுறவுப் பின்னணிகளைக் கொண்டவர்கள். இதனால் குடாநாட்டில் இந்த இரு துறையினரிடையேயும் நீண்டகாலமாக நிலவிவரும் வியாபாரப் போட்டியின் உச்சக்கட்டமே இது என்ற கருத்தும் பொதுமக்கள் மத்தியில் நிலவுகின்றது.


இந்த விவகாரம் எப்படித் தொடரப் போகின்றது என்ற எதிர்பார்ப்புடன் பலர் உள்ளனர்.

## கப்பலில் வந்தவர் எங்கே?

ஆட்கள் காணாமற் போவது பற்றிய தகவல்கள் யாழ்ப்பாணத்தில் பரபரப்பை ஏற்படுத்துவதில்லை. அநேகமாக அவை நாளாந்த சம்பவங்கள் போன்று மாறிவிட்ட காலம் இது.

ஆனால் கப்பலில் வந்த ஒருவர் காணாமற் போயிருக்கிறார். அவருக்கு என்ன நடந்தது என்பது கடந்த ஐந்து மாதங்கள் கடந்தும் தெரியவராததால் அவர் தொடர்பான மர்மம் நீடிக்கிறது.

திருகோணமலையில் இருந்து 30–08–2000 அன்று 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் ஏறிய சின்னையா – சிவராசா (வயது 46) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே காணாமற் போயிருக்கிறார். மறுநாள் கப்பல் பருத்தித்துறையை வந்தடைந்து பயணிகள் இறங்கிய போது அவர் மட்டும் இறங்கவில்லை.




உறவினர்களின் தகவலின் படி அவர் திருகோணமலையில் டிக்கெட் பெற்று (இலக்கம்: 003952 தொடர் இலக்கம்: 154) கப்பலில் ஏறியுள்ளார் என்பது உறுதியாகி உள்ளது.

அப்படியானால் கப்பலில் அவர் காணாமற் போனது எப்படி?

விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இந்தக் குடும்பஸ்தர் தொழில் நிமித்தம் அண்மையில் இத்தாலி சென்றிருந்தார். கடந்த ஆண்டு மத்தியில் யாழ்ப்பாணத்தில் போர் தீவிரமடைந்து அவரது மனைவியும் பிள்ளைகளும் தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சியில் தஞ்சமடைந்தனர்.

மனைவி, பிள்ளைகளின் நிர்க்கதி நிலை அறிந்து கடந்த ஆண்டு ஆகஸ்டில் அவர் இத்தாலியில் இருந்து நாடு திரும்பி உடனடியாகவே கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கப்பலில் ஏறிய கணவர் வீடு வந்து சேரவில்லை. வடமராட்சியில் தங்கி வாழும் அவரது மனைவி அதிர்ந்து போய் இருக்கிறார்.

தனது கணவனின் பெயர் விவரங்களைக் குறிப்பிட்டு தகவல் தருமாறு கேட்டு, உள்ளூர் பத்திரிகையில் விளம்பரம் பிரசுரித்தார். எவரிடமிருந்தும் எந்தத் தகவலும் இல்லை.

பருத்தித்துறை துறைமுக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு திருகோணமலைத் துறை முகத்தில் விசாரித்தபோது கணவர் கப்பலில் ஏறினார் என்பது மட்டும் அந்தப் பெண்மணிக்குத் தெரியவந்தது.

கணவர் எடுத்து வந்ததாகக் கூறப்படும் பெரிய பயணப் பை மட்டும் பருத்தித்துறை துறை முகத்தில் எஞ்சிக் கிடந்ததாம். அதனை அந்தப் பெண்ணிடம் ஒப்படைத்துள்ளனர் துறைமுக அதிகாரிகள்.

தனது கணவருக்கு என்ன நடந்தது என்பதில் குழப்பமும் பீதியும் மேலிட அப் பெண் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் (ஐ.சி.ஆர்.சி) உதவியை நாடினார்.

'கப்பலுக்கு வழித்துணை வழங்குவது மட்டுமே எமது பொறுப்பு. அதில் உள்ள பயணிகளின் பாதுகாப்புக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர்' என்று செஞ்சிலுவைச் சங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக வேதனையுடன் விம்மியவாறு கூறுகிறார் அப்பெண்.

'எனது கணவனைக் கண்டுபிடித்து தாருங்கள்' எனக் கேட்டு கடைசியாக ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார்.

அந்தக் கடிதத்தின் பிரதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட அரச அதிகாரிகளுக்கும் படை அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டு மாதங்கள் கடந்து விட்டன.

நோய் வாய்ப்பட்ட இரண்டு பிள்ளைகள் உட்பட நான்கு குழந்தைகளுடன் கணவனை இழந்து கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் சிவராஜா – செல்வராணி என்ற அந்தத் தாய்க்கு நம்பிக்கை தரும் எந்தத் தகவலையும் தெரிவிக்க எவரும் முன்வரவில்லை. காணாமற் போன சின்னையா – சிவராஜாவுக்கு என்ன நடந்தது?

## கைதாவோர் மீது தாக்குதல்

கைது செய்யப்படுவோர் கடுமையாகத் தாக்கப்பட்ட பின் விடுவிக்கப்படும் சம்பவங்கள் குடாநாட்டில் அதிகரித்து வருகின்றன.

இது தொடர்பான பல முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவோர் முகாம்களில் வைத்துக் கண்டபடி தாக்கப்பட்ட பின் விடுவிக்கப்படுகின்றனர். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது வேறு. சந்தேக நபர்கள் தண்டிக்கப்படுவது வேறு. ஆனால் யாழ்ப்பாணத்தில் நிலைமை வேறு விதமாக இருக்கிறது.

கைதான பின் தாக்கப்பட்டதால் கடும் உட்காயங்களுக்கு ஆளான பலர் யாழ். மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றபின்னரே வீடு திரும்புகின்றனர்.

கைதானபின் தங்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளியில் கூற அவர்கள் அஞ்சுவதால் உண்மைகள் வெளிவருவதே இல்லை.

கடந்த வாரம் அச்சுவேலி தம்பாலைப் பகுதியில் வீட்டில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட சிவராசா– சிவஸ்ரீ (வயது 27) என்ற இளைஞர் அப்பகுதியில் உள்ள முகாம் ஒன்றில் வைத்து இரவிரவாகத் தாக்கப்பட்டாராம். தற்போது அவர் யாழ். மருத்துவ மனையில் சிகிச்சை பெறுகிறார். இது கடைசியாக இடம் பெற்ற சம்பவம்.

**— வலிகாமத்தான்**


**மனோதத்துவ வைத்தியம்**

**GENERAL PSYCHOTHERAPY**

*நேரடியாக வரமுடியாதவர்கள் அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்கள் வெற்றிகொள்ளவும், தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தவும், மனநிலை பாதிப்பு (ஆவேச நிலை) உள்ளவர்களும், பாலியல் குறைபாடுள்ளவர்களும் கடிதம் மூலம் விளக்கம் பெற்று மனோதத்துவ வைத்தியத்தை Audio Cassette தபாலில் பெற்று சுகமாக நாடுங்கள்*

*பிரபல மனோதத்துவ நிபுணர்*

Dr. P. ஆறுமுகம் அவர்களை

கொழும்பில் பெப்ரவரி 20-25ஆம் திகதிவரை

DR. P. ARUMUGAM (S.A.M.P) REG. 9492

New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No.10, Reclamation Road, Colombo-11.

T.P 074-715547, 074-715546, செல்டெல் - 07[illegible]-06-4367

கல்முனையில் பெப்ரவரி 3-4ம் திகதிகளில்

T.M.M. பாமசி, கல்முனை. T.P: 067-29329

வவுனியாவில் பெப்ரவரி 10-11ம் திகதிகளில்

(தயவுசெய்து பதிவு செய்துகொள்ளவும்)

Vanni Inn, [illegible] T.P:- 024-21405, 072-664867

கடிதத் தொடர்பு

Residence Telephone:- 065-24019
Dr.P. Arumugam,
No.51/5, Koolavady Road, Batticaloa, Sri Lanka.

சுடர் ஒளி

4 பெப்ரவரி, 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834

# விலை உயர்வுகள்

பொருள்களின் விலைகள் நாளாந்தம் உயர்ந்து வருகின்றன.

சேவைக் கட்டணங்களும் அதிகரிக்கப் படுகின்றன.

அடுத்த மாதத்திலிருந்து மின்சாரத்துக்குக் கூடுதல் கட்டணம் அறவிடப்படும். இது கடைசியாக வந்த அறிவித்தல்.

விலை உயர்வுகளாலும் கட்டண அதிகரிப்புகளாலும் மக்களின் வாழ்க்கைச் செலவு கட்டு மீறி ஏறிக்கொண்டிருக்கிறது. மக்களிடம் தேவைக்கு ஏற்ற அளவு பணம் இல்லை. செய்வது அறியாது திண்டாடுகிறார்கள்.

உலகச் சந்தையில் பொருள்களின் விலைகள் அதிகரித்திருப்பதன் பிரதிபலிப்புத்தான் இது. காலப்போக்கில் சரியாகி விடும் என்று அரசாங்கம் சமாதானம் சொல்கிறது.

நிலைமை சரியாகும் வரை மக்கள் வாயை, வயிற்றைக் கட்டிக் கொண்டு வீட்டில் அடைந்து கிடக்க முடியுமா?

அரசாங்க, தனியார் துறை ஊழியர்களுக்குச் சம்பள உயர்வும் ஓய்வூதியக் காரர்களுக்கு மேலதிக ஓய்வூதியக் கொடுப்பனவும் கிடைக்கச் செய்தாவது கஷ்டத்தைக் குறைக்க வேண்டாமா?

தொழிற்சங்கப் போராட்டங்கள் வெடித்து எல்லாவற்றையும் சீர்குலைக்கும் வரை அரசாங்கம் காத்திருக்கிறது போலும்!

பொருளாதார வீழ்ச்சியால் அரசாங்கமே பெரும் பணத் தட்டுப்பாட்டை எதிர் கொள்கிறது. அதுதான் சோகம்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தலாம் என்ற நம்பிக்கையில் அரசாங்கம் ரூபாவின் பெறுமதியை மிதக்க விட்டிருக்கிறது.

அரசின் அந்த நடவடிக்கை இறக்குமதியாளர்களும், விற்பனையாளர்களும் பொருள்களின் விலைகளை நினைத்தபடி உயர்த்த வழி விட்டிருக்கிறது.

இன்னும் மூன்று, நான்கு மாதங்களில் நிலைமை திருந்தி எல்லாம் சீராகிவிடும் என்று அரசாங்கம் கூறுகிறது. அதுவரை மக்கள் கஷ்டங்களைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் கோருகிறது.

நாம் வெளிநாட்டு இறக்குமதிகளிலேயே பெரிதும் தங்கியிருக்கிறோம். இங்கே உணவுப் பொருள்கள், மற்றும் பாவனைப் பொருள்களின் உற்பத்தி வேண்டிய அளவில் இல்லை.

உற்பத்தியைப் பெருக்கி, வெளிநாட்டு இறக்குமதியைக் குறைக்க வேண்டும். அதற்கு அரசிடம் பணம் இல்லை.

வெளிநாட்டு முதலீட்டாளர்களாவது இங்கேவந்து உற்பத்திகளில் இறங்கமாட்டார்களா என்று ஆவலோடு காத்திருக்கிறோம்.

இலங்கை யுத்த பூமியாக இருந்தால் இங்கே வந்து பணத்தைக் கொட்டித் தொழில் செய்ய யார் வருவார்கள்?

அரசின் பணத்தையும் வடக்கு - கிழக்கு யுத்தம் தான் விழுங்குகிறது. யுத்தத்துக்குக் கோடி கோடியாகச் செலவு செய்வதால் தான் அரசிடம் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்துப் பொருள் உற்பத்தியைப் பெருக்கப் பணம் இல்லை.

போரை நிறுத்தி, பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குச் சமாதானத்தீர்வு கண்டால் ஒற்றுமையாக நாட்டைச் சுபிட்சப் பாதைக்குக் கொண்டு வரலாம்.

அதற்கு அரசின் கௌரவப் பிரச்சினையும் பிடிவாதப் போக்கும் இடம் தரவில்லை.

போர் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் கொள்ளையாகச் சம்பாதிக்கும் பெருச்சாளிகளின் துர்ப்போதனையாலும் அரசு இறுதிவரை போராட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்திருக்கிறது.

அரசையும் புலிகளையும் பேசவைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நோர்வே நாட்டு விசேஷ தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மிகக் குறுகிய இடைவெளியில் இரண்டாவது முறையாகக் கொழும்புக்குப் பறந்து வந்திருக்கிறார்.

யுத்தத்தை நிறுத்திப் பேச்சைத் தொடங்கப் புலிகள் சம்மதித்து விட்டார்கள்.

அப்படி இல்லை பேச்சைத் தொடங்கிவிட்டு யுத்த நிறுத்தம் பற்றி யோசிப்போம் என்று திரும்பத் திரும்பச் சொல்லி வரும் அரசு இம்முறையாவது நிதர்சனத்தை உணர்ந்து, மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு யுத்த நிறுத்தத்துக்குச் சம்மதிக்குமா?

சம்மதிக்காவிட்டால் ஒரு வரலாற்றுத் தவறைச் செய்த பழி அரசைச் சாரும்.

மக்களின் சாபத்துக்கும் உள்ளாக வேண்டியிருக்கும்.

சண்டை பிடித்துக் கொண்டே சமாதானம் பேசினால் எப்படி இருக்கும்? அதையும் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

# பிரச்சினை வலுத்து இழுபறி: அதற்குக் காரணம் என்ன?

புலிகள் விரும்புகிறபடி போர்நிறுத்தத்துக்குப் பின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சமாதானப்பேச்சுவார்த்தையா, அல்லது -

அரசு விரும்புகிறபடி பேச்சுவார்த்தைக்குப்பின்அவசியமானால்போர்நிறுத்தமா?

இந்தப் பிரச்சினை வலுத்து இப்போது இழுபறி நிலையில் உள்ளது. அதற்குக் காரணம் என்ன?

புலிகள் ஏமாற்றிவிடுவார்கள் என்று அரசு அஞ்சுகிறது.


சந்திரிகா

அரசு பேச்சுவார்த்தை நடத்த உண்மையில் விரும்பவில்லை. பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் எண்ணம் அரசுக்கு இல்லை. இராணுவத் தீர்விலேயே அரசு குறியாகஇருக்கிறது என்று புலிகள் சந்தேகிக்கிறார்கள்.

பயம், சந்தேகம் என்ற இந்த இரண்டு பூதங்களும்தான் இன்று பிரச்சினையைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு இருக்கின்றன.

இந்தப் பூதங்களை விரட்டி அடிக்கவே நோர்வேயில் இருந்து விசேஷ தூதர் எரிக் சொல்ஹெய்ம் லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசிவிட்டு கடந்த புதன்கிழமை கொழும்புக்குப் பறந்து வந்தார். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் மற்றும் சிலருடனும் பேச்சு நடத்துவதற்கு.

புலிகள் தாம் பலவீனமடைந்துள்ள வேளைகளில் தான் யுத்தநிறுத்தம் கோருகிறார்கள். யுத்தநிறுத்தத்தின்போது தமக்குக் கிடைக்கும் கால அவகாசத்தைப் பயன்படுத்தித் தம்மை மீண்டும் யுத்தத்துக்குத் தயார் செய்து கொள்கிறார்கள்.

ஜனாதிபதி பிரேமதாச காலத்தில் இரு முறை இப்படிச் செய்தார்கள்.

1994-95 இல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமும் இந்த விளையாட்டைக் காட்டினார்கள். அதனால் அவர்களை எப்படி நம்புவது? இது அரசின் கேள்வி.

புலிகள் கடந்த நத்தார் தினத்துக்கு முதல் நாள் ஒருதலைப்பட்சமாக ஒரு மாதகால யுத்தநிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தினார்கள். அதைப் பின்னர் இன்னொரு மாத காலத்துக்கு நீடித்திருக்கிறார்கள்.

பேச்சுவார்த்தை நடத்துவதற்கான நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தவே யுத்தநிறுத்தம். அரசும் அதைச் செய்யவேண்டும் என்றும் புலிகள் கோரினார்கள்.

புலிகள் செய்ததை அரசு கண்டுகொள்ளவும் இல்லை; அவர்கள் சொன்னதைக் கேட்கவும் இல்லை.

புலிகள் தாம் சமாதானப் பிரியர்கள் என்று சர்வதேச சமூகத்துக்குக் காட்டி நல்ல பிள்ளைப் பெயர் எடுக்கவே ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தம் செய்தனர்.

தவிரவும் பிரிட்டிஷ் அரசாங்கம் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கம் என்று பிரகடனம் செய்யப்போகிறது.

அது நடந்தால் புலிகள் லண்டனில் தலைமை அலுவலகம் வைத்து நடத்த முடியாது. அங்கிருந்து இயங்க இயலாது. பணம் திரட்டி ஆயுதங்களை வாங்கி இலங்கையில் யுத்தம் செய்யமுடியாது. எனவே புலிகள் தம்மைப் பயங்கரவாதிகள் அல்லர், நல்ல பிள்ளைகள் என்று பிரிட்டனுக்குக் காட்டி தடையிலிருந்து தப்பிக்கொள்வதற்காகவே யுத்தநிறுத்த நாடகம் ஆடுகின்றனர் என்று அரசு கூறுகிறது.

புலிகள் யுத்தநிறுத்தத்தை அனுஷ்டித்து வரும்போது அவர்களை அரச படைகள் தாக்கி வலுச்சண்டைக்கு இழுத்துவருகின்றன. புலிகளைச் சண்டையிடவைத்தால்தான் பிரிட்டன் இரண்டாவது சிந்தனை இல்லாமல் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யும் என்று அரசு நம்புகிறது.

இது புலிகளுக்கு நன்கு தெரியும். அதனால்தான் எவ்வளவு ஆத்திரமூட்டப்பட்டாலும் புலிகள் வலுத் தாக்குதல்களில் இறங்காமல் பொறுமை காத்துவருகிறார்கள்.

இதை ஒருசிலர் புலிகளின் இயலாமை, பலவீனம் என்றெல்லாம் வர்ணித்தபோதும் புலிகள் சற்றும் மனம் தளராமல் தமது கொள்கை, இலட்சியம் ஆகியவற்றிலேயே குறியாக இருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் அரசு விரும்பினால் எப்பொழுதோ புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யப்பட்ட இயக்கமாகப் பிரகடனப்படுத்தியிருக்கலாம். அதற்கு வேண்டிய பயங்கரவாதத் தடைச்சட்டம் பிரிட்டனில் நிறைவேற்றப்பட்டுவிட்டது. அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை அவ்வளவுதான்.

டோனி பிளேயரின் தலைமையிலான பிரிட்டிஷ் தொழிற் கட்சி அரசாங்கம் புலிகள் இயக்கத்தை உண்மையில் தடைசெய்யுமா? சந்தேகம்தான்.

தடைசெய்யவேண்டும் என்று இலங்கை அரசு எத்தனையோ காரணங்களை அடுக்கிக் காட்டிக்கொண்டிருக்கிறது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அடிக்கடி பிரிட்டனுக்குச் சென்று சம்பந்தப்பட்டவர்களை நேரில் சந்தித்துப் புலிகளைத் தடைசெய்யுங்கள் என்று விடாப்பிடியாகக் கேட்டுவருகிறார்.

மற்ற உலக நாடுகள் மூலமும் பிரிட்டனுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்.

புலிகளை பிரிட்டன் தடைசெய்யாவிட்டால் இலங்கைக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான நீண்டகால உறவு பாதிக்கப்படலாம் என்று நைசாக ஒரு மிரட்டலையும் விட்டிருக்கிறார்.

பிளேயர் அரசாங்கத்துக்கு இவை எல்லாவற்றையும் விட அடுத்த தேர்தல் தான் முதலிடம் பெறுகிறது. பிரிட்டனில் பொதுத்தேர்தல் இவ்வருடம் மே மாதம் நடைபெற இருக்கிறது.


பிரபாகரன்

இந்தத் தேர்தலில் தொழிற் கட்சி சுமார் ஐம்பது ஆசனங்களை இழக்க நேரிடலாம் என்று அபிப்பிராய வாக்கெடுப்புகள் காட்டியிருக்கின்றன.

இதில் வினோதம் என்னவென்றால் சுமார் ஐம்பது தொகுதிகளில் யார் எம்.பியாகத் தெரிவாக வேண்டும் என்பதைத் தீர்மானிக்கக் கூடிய வாக்குப் பலத்துடன் இலங்கைத் தமிழர்கள். அவர்களிலும் புலிகளின் அனுதாபிகள் இருக்கிறார்கள்.

இந்நிலையில் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யப்போனால் தொழிற் கட்சி தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முடியுமா?

இது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கவலை.

அது தவிர, புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யக்கூடாது என்று இலங்கைத் தமிழ்க் கட்சிகள் பலவும் கூட்டாகப் பிரிட்டிஷ் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

இந்தக் கருத்துக்குச் சார்பாக உலக அபிப்பிராயத்தை உருவாக்கும் முயற்சியிலும் அவை ஈடுபட்டுள்ளன.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு இலங்கைக்கு ஆள் அனுப்பி நிலைமையை நேரில் அவதானிக்கவும் ஏற்பாடு செய்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடக்க் வேண்டும். அதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இலங்கையில் சமாதானம் நிலவ வேண்டும் என்று பிரிட்டன் விரும்புகிறது. நோர்வே அரசின் அனுசரணை முயற்சிக்குப் பூரண ஆதரவை வழங்கிவருகிறது.

இந்த நிலையில் புலிகள் இயக்கத்தை பிரிட்டன் தடைசெய்ய முன்வருமா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

# துரோகத்துக்கு எதிரான உண்ணாவிரதம் முடிந்தது

துரோகத்தை எதிர்த்தும் நீதி வழங்கக் கோரியும் கல்முனைத் தமிழ் மக்கள் மேற் கொண்ட உண்ணாவிரதப் போராட்டம் ஏழாவது நாளில் கைவிடப்பட்டது.

கல்முனை தமிழ்ப்பிரிவு உபபிரதேச செயலகத்தை முழு அளவிலான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்த வேண்டும் என்பதே கோரிக்கை.

கல்முனை தமிழ்ப் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றிய ஏற்பாட்டில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் செல்வராசா நேரில் வருகை தந்து உண்ணா விரதிகளைச் சந்தித்து, குளிர்பானம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத் தார். அவர் உரை நிகழ்த்துகையில் பின்வருமாறு கூறினார்:

கல்முனை தமிழ்ப்பிரிவு உப பிரதேச செயலகம் ஏற்படுத்தப்பட்டு பன்னிரண்டு வருடங்களுக்கு மேல் கடந்து விட்டது. இன்னும் இந்த அலுவலகம் தரமுயர்த்தப்படாமலிருப்பது வேதனைக்குரியது.

தமிழ் அரசியல் வாதிகளாகிய நாம் இதுவிடயத்தில் நடவடிக்கை எடுப்போம். சம்பந்தப்பட்ட அமைச்சரை அடுத்த வாரம் சந்தித்து அழுத்தம் கொடுப்போம்.

தவறும் பட்சத்தில் வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்காகக் குரல் கொடுப்போம். அத்துடன் நாம் அனைவரும் கல்முனைக்கு வந்து ஆர்ப்பாட்டம் நடத்தி பிரச்சினைக்கு முடிவு காண்போம்" இப்படி அவர் கூறினார்.

உண்ணாவிரதத்தை முடித்துவைக்கவென திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குணசேகரம் சங்கர் அனுப்பிவைத்த 'பெக்ஸ்' செய்தி வாசித்துக் காட்டப்பட்டது.

**(உண்ணாவிரதம் நடந்து கொண்டிருந்த போது வந்த செய்தி கடைசிப் பக்கத்தில்)**

# அம்பாறை எங்கும் பேரியலுக்கு பெருவரவேற்பு

கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு, கிராமிய வீடமைப்புத்துறை அமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இணைத் தலைவியுமான ஜனாபா பேரியல் அஷ்ரப் தமது 'இத்தா' கடமை முடிந்ததும் முதல் தடவையாக அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் செய்தார்.

தம்மை முழுமையாக அறியாத நிலையிலும் தமக்கு அமோகமாக வாக்களித்து தம் தானைத் தலைவன் அஷ்ரப்பின் அரசியல் அதிகாரக்கதிரையில் தம்மை அமர்த்திய மக்களை (திகாமடுல்ல தேர்தல் மாவட்டம்) முதலில் சந்தித்து அவர்களுக்குச் சலாம் கூறி நேரில் நன்றியைத் தெரிவித்துக்கொண்ட பின்னர் தான் நாடாளுமன்றக் கதிரையில் போய் அமர்வேன் என்ற திடசங்கற்பத்துடன் அவர் அம்பாறை விஜயத்தை மேற்கொண்டார்.

சென்ற இடமெல்லாமல் பல்லாயிரக்கணக்கில் மக்கள் மழையையும் பொருட்படுத்தாது அலை அலையாகத் திரண்டு வந்து வரவேற்பு அளித்தனர்.

மருதமுனை, நற்பிட்டிமுனை, கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர், சம்மாந்துறை, மாவடிப்பள்ளி, ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, இறக்காமம், வரிப்பத்தான்சேனை, இஸ்லாமாபாத் முதலான கிராமங்களுக்கு அவர் வருகைதந்து மக்களைச் சந்தித்தார்.

"முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் எந்தப் பிரச்சினையும் வரவும்கூடாது, வரவிடவும் கூடாது. கட்சியை நல்ல சூழ்நிலையில் முன்னெடுத்துச் சென்று மக்களுக்குப் பணிபுரியவேண்டும். மறைந்ததலைவர் அஷ்ரப்பின் பெயரால் நாமனைவரும் ஒன்றுபட வேண்டும்" - இவ்வாறு இந்த விஜயத்தின்போது மக்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் பேரியல் அஷ்ரப் வலியுறுத்தினார்.

அமைச்சரின் இந்த ஏழு நாள் விஜயம் பெருவெற்றிகரமாக அமைந்ததுடன், அரசியல் களத்தில் அவருக்குப் பெரும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறுகதையில் சிறு குழப்பம்

இந்த வாரச் சுடர் ஒளி' இதழுக்கென்று வடிவமைத்துவைக்கப்பட்டிருந்த 'காற்றோடு பேசு' என்ற சிறுகதை கடந்த வார இதழின் ஒரு சில பிரதிகளில் மட்டும் தவறுதலாக இடம்பெற்றுவிட்டது.

அந்தப் பிரதிகளில் ஒன்றைப் படித்த கண்டி நேயர் ஆ.சிவமணி கதையைப் பாராட்டிக் கடிதம் எழுதியிருந்தார்.

அவருடைய கடிதம் அடுத்த வாரம் தான் பிரசுரிக்கப்பட வேண்டும். ஆனால் எல்லாப் பிரதிகளிலும் கதை வெளிவரும் இந்தவார இதழிலேயே தவறுதலாகக் கடிதமும் பிரசுரிக்கப்பட்டு விட்டது. தவறுகளுக்கு வருந்துகிறோம்.

(ஆர்.)

# ரூபாவை மிதக்க விடுவதால் நன்மையை விட தீமை அதிகம்!

அமெரிக்காவின் நாணயம் டொலர் குறித்து கடந்த இரு வாரங்களாக அதிகம் எழுதப்படுகிறது. டொலருக்கும், ரூபாவுக்கும் இடையிலான பெறுமதி தொடர்பில் ரூபாவின் மதிப்பு அதல பாதாளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

வெளிநாட்டு நாணயங்களுக்கும், இலங்கை ரூபாவுக்கும் இடையிலான நாணய மாற்று வீதங்களை இலங்கை மத்திய வங்கியே இதுவரை தீர்மானித்து வந்தது. மத்திய வங்கி நிர்ணயிக்கும் விலைகளின்படியே டொலர் – ரூபா கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்று வந்தன. அவ்வாறு விலைகள் நிர்ணயிப்பதை மத்திய வங்கி இனிமேல் செய்யாது. அதாவது வெளிநாட்டு நாணயங்களுக்கும், இலங்கை ரூபாவுக்கும் இடையிலான பெறுமதித் தொடர்பைத் தீர்மானிக்கும் செயற்பாட்டைச் சுதந்திர சந்தைச் சக்திகளிடம் மத்திய வங்கி ஒப்படைத்துவிட்டது. வேறு விதமாகக் கூறுவதானால் இலங்கை ரூபாவின் பெறுமதியை மத்திய வங்கி மிதக்கவிட்டுள்ளது.

1949ஆம் ஆண்டுக்கும் 1967ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் டொலரின் இலங்கைப் பெறுமதி 4ரூபா 77சதத்துக்குட்பட்டதாக இருந்தது. சரியான வெளிநாட்டு நாணய மாற்றுக் கொள்கையைக் கடைபிடிக்காததினால் டொலரின் பெறுமதி 1977ஆம் ஆண்டுவரை அதிகரித்து வந்தது. 1977க்கு முன்னர் ஒரு டொலரின் பெறுமதி 8 ரூபாவாக இருந்தது.

1977இன் பின்னரே டொலரின் பெறுமதி இலங்கையில் அதிகரிப்பதற்கு எதிரான கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. அப்போது பதவிக்கு வந்திருந்த புதிய அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தி டொலரின் இலங்கைப் பெறுமதியை நூறு வீதத்தால்



அதிகரித்தது. இதன்படி டொலரின் இலங்கைப் பெறுமதி 16 ரூபா என நிர்ணயிக்கப்பட்டது. டொலரின் பெறுமதி உயர்வு என்பது இலங்கை ரூபாவின் பெறுமதி குறைகிறது என்பதே பொருளாகும்.

இலங்கை ரூபாவின் மதிப்பைத் தீர்மானிக்கும் மத்திய வங்கி அதற்காக நாட்டின் பொருளாதார நிலை, சந்தை நிலைவரம், அரசின் கொள்கைகள், நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்கள் முதலியவற்றைக் கவனத்தில் கொள்வது வழமை. நாணய மாற்று வீதங்களையும், உள்நாட்டுப் பணத்தின் பெறுமதியையும் தீர்மானிக்கும் மத்திய வங்கியின் பிடி திடீரென முழுமையாகக் கைவிடப்பட்டு அச் செயற்பாடுகள் சுதந்திர நாணயச் சந்தைச் சக்திகளிடம் சென்றதற்கான காரணம் என்ன?

வடக்கில் யுத்தம் விரிவடைந்ததையும், அதனால் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையையுமே பொருளாதார நிபுணர்கள் இதற்குக் காரணங்களாகக் காட்டுகிறார்கள்.

இலங்கை நாணயத்தின் பெறுமதியை நாணயச் சந்தையில் மிதக்கவிடும் தீர்மானத்தை மத்திய வங்கி எடுத்திருப்பது இலங்கைப் பொருளாதார வரலாற்றில் இதுவே முதற் தடவையாகும்.

> **ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைவதற்குக் காரணமாகிவிட்ட மத்திய வங்கியின் 'நாணயத்தை மிதக்கவிடும்' கொள்கையை நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமான நிலையில் இருக்கும் ஒரு கட்டத்திலேயே பின்பற்றியிருக்க வேண்டும். வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ள, தவறான ஒரு காலகட்டத்தில் எடுக்கப்பட்ட இத் தீர்மானத்தினால் விரும்பத்தகாத விளைவுகளும், சூழ்நிலைகளும் ஏற்படும்.**

இலங்கை மத்தியவங்கி இத்தகைய தீர்மானத்தை மேற்கொண்டதற்குக் கூறும் காரணம் என்ன?.

இத்தீர்மானத்தினால் பரந்தளவில், சுதந்திரமாகக் கொடுக்கல் வாங்கல்கள் செய்ய முடிவதுடன், இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி ஸ்திரமான நிலையை அடையும் என எதிர்பார்ப்பதாக மத்திய வங்கி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அத்துடன் நாணயச் சந்தையில் நிலவுகின்ற உயர் வட்டி வீதங்கள் குறைவடைவதற்கும் அவ்வாறு குறைவடைவதன் காரணமாக வெளிநாட்டு, உள்நாட்டு முதலீடுகள் அதிகரித்து நீண்ட கால இலக்கில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் மத்திய வங்கி தெரிவிக்கிறது.

வெளிநாடுகளில் இலங்கையர்கள் உழைக்கும் பணத்தை அதிகளவில் உள்நாட்டுக்குக் கொண்டு வருதல், அதற்காக அவர்களைத் தூண்டுதல், ஏற்றுமதி வருமானங்களை அதிகரித்தல் என்பனவும் இத்தீர்மானத்துக்கான நோக்கங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

இலங்கை மத்திய வங்கியின் இம் முடிவுக்கு சாதக, பாதகமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ரூபாவை மிதக்க விட்ட செயலானது இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்களை மிக மோசமாகப் பாதிக்கும். இதனால் பாவனையாளர்களும் இணைந்தே பாதிக்கப்படப் போகிறார்கள் என்று இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது. நாட்டின் பொருளாதாரம் பற்றித் தீர்மானம் எடுக்கும் உரிமையை முழுமையாக அதிகாரிகளின் கையில் வழங்கி விடாமல் வர்த்தக சம்மேளனத்துக்கும் – அரசாங்கத்திற்கும் இடையிலான தொடர்புகள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும் அது கோரிக்கை விடுத்துள்ளது.

நாணயத்தின் பெறுமதியை மிதக்க விடுவதை மேலோட்டமாகப் பார்த்தால் சரியானது தான். ஆனால் அரசாங்கத்தின் அநாவசிய செலவுகளைக் குறைத்துச் சரியான நாணயக் கொள்கையைப் பின்பற்றாவிடில் இதன் மூலம் பலன் பெற முடியாது என ஏற்றுமதியாளர் சம்மேளனத் தலைவர் பெட்ரிக் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இத்தீர்மானத்தை நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமான நிலையில் இருந்த ஒரு கட்டத்தில் எடுத்திருக்க வேண்டும். எண்ணெய், கார், பஸ் கட்டணங்கள் அதிகரித்துள்ள தவறான ஒரு காலகட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதனால் விரும்பத்தகாத விளைவுகளும், சூழ்நிலைகளும் ஏற்படும். இத்தீர்மானத்தின் மூலம் நல்ல விளைவுகள் ஏற்பட இடமுண்டென்றும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.க தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

"ஆனையிறவுத் தாக்குதலுக்குப் பின் நாடு பிளவுபடுமா? என்ற நிலை தலை தூக்கியது. நாட்டைக்காக்க உலகில் எங்கிருந்தாவது ஆயுதங்களைக் கொண்டு வாருங்கள் என நாட்டுப் பற்றுள்ளோர் அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தனர். இதனால் நவீன ஆயுதங்களை வாங்க அரசாங்கம் தீர்மானித்தது. 200 பில்லியன் (20 ஆயிரம் கோடி) ரூபா நாட்டில் இருந்து வெளியேறியது. ஆனால் வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினமாக 55 பில்லியன் (5,500 கோடி) ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. இப்படிச் சுட்டிக் காட்டிய அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான பந்துல குணவர்த்தன "இதன் விளைவுகளையே இன்று நாம் அனுபவிக்கிறோம். நாணயப் பெறுமதியை மிதக்க விட்டதன் பலனை அனுபவிக்கவும், பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கவும் சரியான கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டும்" என்றும் கோரியுள்ளார்.

வெளிநாட்டு நாணய மாற்றுக் கொள்கையில் "கட்டு" களை கடந்த 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அவிழ்த்து விடப்பட்ட உடனேயே டொலரின் பெறுமதி உயரத் தொடங்கியது. சில நாட்களில் 105 ரூபா வரை அதன் விற்பனை விலை ஏறியது. எனினும் எதிர்பார்க்கப்பட்டது போல டொலரின் கேள்விக்கும் (Demand) அதன் நிரம்பலுக்கும் (Supply) க்கும் இடையிலான விலைப் பொறிமுறை (Price Mechanism) யின் காரணமாக ஒரே நாளில் அதன் விலைகளில் ஏற்ற இறக்கங்கள் அவதானிக்கப்பட்டன.

நாணயத்தை மிதக்கவிடும் தீர்மானம் "இறக்குமதி வர்த்தகத் துறையை உடனடியாகவே பாதித்தது. பருப்பு, சீனி, மஞ்சள், வெங்காயம், கிழங்கு முதலான இறக்குமதிப் பாவனைப் பொருட்களில் கிலோவுக்கு 2 – 5 ரூபா வரை விலைகள் அதிகரித்தன. இறக்குமதி வர்த்தகர்களின் வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களில் தடுமாற்றம் அதிகமாக இருந்தது. கடைசியில் ஒட்டு மொத்தமாக இதன் சுமையினை நுகர்வாளர்களான பொதுமக்களே ஏற்க வேண்டியிருந்தது. வர்த்தகர்களின் பதுக்கல் நடவடிக்கைகளினால் வர்த்தக மந்தமும் நிலவியதோடு தங்கத்தின் விலையும் 1,500 ரூபா வினால் அதிகரித்தது.

கடந்த வருடம் அரசாங்கம் இறக்குமதியினைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உலக வங்கியின் அழுத்தத்தின் பேரில் இலங்கை ரூபாவின் பெறுமதியை 22 வீதத்தால் குறைத்தது. எனினும் இறக்குமதிகள் குறையவில்லை. உள்நாட்டில் உற்பத்தி அதிகரிக்காத நிலையில் இறக்குமதியினைத் தடை செய்ய முடியாது என்பதை அரசாங்கம் புரிந்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

கடந்த வருடம் இலங்கையின் மொத்த இறக்குமதிப் பெறுமானம் 6526 மில்லியன் டொலர்கள். அதே ஆண்டு இறக்குமதிகளின் பெறுமதி 48.86 மில்லியன் டொலர்கள்.

பொதுமக்களின் மீது வாழ்க்கைச் சுமையை அதிகரிக்கும் வகையில் அமைந்துவிட்ட மத்தியவங்கியின் தீர்மானத்தால் கடந்த வருடம் 1640 மில்லியன் டொலராக இருந்த வர்த்தகப் பற்றாக்குறை இனிவரும் வருடங்களில் அதிகரிக்கும்.

இலங்கையின் வெளிநாட்டுக் கடன்கள், மீதிகள் பல ஆயிரம் கோடிகளைத் தாண்டும் என்பது நிச்சயம்.

தற்போது 30 வீதமாக இருக்கும் வெளிநாட்டு ஒதுக்கு வைப்புக்களும் குறைவடையக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. அரசாங்கம் அபிவிருத்திக்கோ, யுத்தத்துக்கோ வெளிநாட்டு நாணயம் தேவைப்படும் போது வெளிநாட்டு ஒதுக்கு வைப்புக்களைத் தவிர்ந்த வேறு மார்க்கங்களைத் தேட வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.


எண்ணெய், யுத்தச் செலவுகளுக்காக 890 மில்லியன் டொலர் (65 பில்லியன் ரூபா) மேலதிகமாக செலவழித்து அதனை சாதாரண மக்கள் மீது ஏற்றிவிட்ட அரசாங்கத்தின் புதிய நிதிக் கொள்கை உலக வங்கியை நிச்சயம் மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கும்.

ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள், கைத்தொழிலாளர்கள், சாதாரண வியாபாரிகள் ஆகியோர் மீது அதிர்ச்சியைப் பிரயோகித்துவிட்ட அரசாங்கத்தின் நாணயக் கொள்கையின் விளைவான வாழ்க்கைச் சுமைகளைப் பொதுமக்கள் தாங்கிக் கொள்ளமாட்டார்கள்.

எதிர்வரும் மாதங்களில் மேலும் விலைகள் அதிகரிக்கும். தொழிலாளர்கள் குரல் எழுப்பத் தொடங்கி வேலை நிறுத்தங்களையும் மேற்கொள்வார்கள். அரசாங்கமும் சில நூறு ரூபாக்களை சம்பள உயர்வாக அறிவித்துத் தப்பிக் கொள்ளும். கூடவே வடக்குப் போரும் தொடரும்.

நாட்டுக்கு விமோசனம் கிடையாது என்பதற்கு இன்னும் விளக்கங்கள் தேவையா?

– எட்வேர்ட்



பெரிய அளவில் உருவாகி வரும் படங்கள் தயாரிப்பின்போது தாமதமாவது சகஜம். அப்போது அது பற்றி பலவித செய்திகள் வெளிவருவது இயற்கை. இதற்கு

# அஜீத் ஒரே படத்தில் ஒன்பது வேடங்களில்

'சிட்டிசன்' படமும் விதிவிலக்கு அல்ல. ஆனால் அண்மையில் இதன் நாயகன் அஜித்குமாரும் இயக்குனர் சரவண சுப்பையாவும் படத்தைப்பற்றிய உண்மைச் செய்திகளை வெளியிட்டுத் தவறான எல்லாச் செய்திகளையும் பொய்யாக்கி விட்டனர்.

இந்தப்படத்தில் அஜித்துக்கு 9 வேடங்கள். இவற்றில் 4 வேடங்கள் வரும் காட்சிகள் படமாக்கப்பட்டு விட்டன. படத்தின் நாயகன் அஜித் கூறுகையில்,

"இந்த சமுதாயத்தில் அன்றாட வாழ்வில் ஒவ்வொரு தனிமனிதனும் சந்திக்கும் பிரச்சினைகளை வைத்துப் படமாக்கியிருக்கிறோம். பொதுவாக படத்தில் பிரச்சினையை மட்டும் சொல்வார்கள். நாங்கள் இதில் தீர்வையும் சொல்லியிருக்கிறோம்.

இந்தியன் படத்தில் வித்தியாசமான மேக்கப் மூலம் முகத்தையே முற்றிலுமாக மாற்றிக் கொண்டு யார் இவர்? என்று கேள்வி கேட்க வைத்தவர் கமல் ஸார்.

வித்தியாசமான கெட்டப்களில் நடிக்க வேண்டும் என்ற என்னுடைய உந்துதலுக்கு கமல் ஸார் தான் இன்ஸ்பிரேஷன். 6மணி நேரம் உட்கார்ந்து மேக்கப் போடுவது சாதாரணமானதல்ல.

அதை அனுபவத்தில் உணரும் போது சிரமம் புரியும். ஆனாலும் அந்த வலியும் சுகமானதே.

கமல் ஸாரிடம் எனது திருமண அழைப்பிதழைக் கொடுக்க அவரை நான் சந்திக்கச் சென்ற போது, இந்தியன் படத்தில் அவர் ஏற்று நடித்த தாத்தா வேடத்தை நான் பெரிதும் வியந்து பாராட்டினேன். அதுபோல எனக்கு 'சிட்டிசன்' என்ற படத்தில் ஒரு வேடத்திற்கு மேக்கப் போட வேண்டி இருந்ததை அவரிடம் தெரிவித்தேன்.

'அவ்வை சண்முகி', 'இந்தியன்' போன்ற படங்களில் அவருக்கு மேக்கப் போட்ட மைக்கல் வெஸ்ட்மோர் பற்றி அவரிடம் விசாரித்தேன். எனது ஆர்வத்தை மெச்சிய அவர் வெளிநாட்டிலிருந்து வந்து மேக்கப் போடுவதென்றால் அதிக செலவாகும். இங்கேயே திறமையான மேக்கப் மேன்கள் இருக்கிறார்கள் என்று அனில் பெம்கிரிகர் என்பவரை கமல் ஸார் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவர் தான் 'சிட்டிசன்' படத்தில் மேக்கப் போடுகிறார்."

**"70 வயது முதியவர் போன்று மேக்கப் போட்டிருக்கிறீர்களே அதற்கு மேக்கப் போட எத்தனை மணிநேரம் செலவாகியது?"**

"கிட்டத்தட்ட 6 மணிநேரம். 7 மணிக்கு படப்பிடிப்பு தொடங்குவதென்றால் நான் அதிகாலை 1.30 மணிக்கே படப்பிடிப்புத் தளத்திற்குச் சென்று விடுவேன்.

அப்போதிலிருந்து மேக்கப் போடத் தொடங்கினால் முடிவதற்கு 6 மணிநேரம் ஆகி விடும்."



70 வயது முதியவர் வேடத்தில் அஜித்

**"9 வேடங்களில் நடிப்பதாகச் சொல்கிறீர்கள்? ஒரு கரெக்டரே போடும் 9 கெட்டப்புகளா? அல்லது 9 கரெக்டர்களா எப்படி?"**


"அதை உங்கள் ஊகத்துக்கே விட்டு விடுகிறேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்,

இந்தப் படத்துக்கு தேசிய விருதாவது கிடைக்கும். இது எனது அசைக்க முடியாத நம்பிக்கை"


**" 'தீனா'வில் தாதா, "சிட்டிசன்"இல் தாத்தாவா?"**

"ஒரே மாதிரியான அஜித்தை எத்தனை காலம் தான் மக்கள் ரசிப்பார்கள். எதிலும் ஒரு வெரைட்டி வேண்டும் தானே!

ஒல்ட் கெட்டப்பில் நடித்துக் கொண்டிருந்த போது அப்பாவால் கூட என்னை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. இதுவே எனது கெட்டப்புக்குக் கிடைத்த வெற்றி என்று சொல்வேன்.



சிட்டிசன் படத்தில் அஜித்தின் இன்னொரு மாறுபட்ட தோற்றம்



**'சிட்டிசன்' அரசியல் படம் என்று சொல்லப்படுகிறதே?**

அரசியல் இதில் துளியும் கிடையாது. அரசுக்கு எதிரான படமும் இல்லை. இதில் எனக்கு சவாலான கரெக்டர் அனைத்துத் தரப்பினரும் ரசிக்கக்கூடியதான கமர்ஷியல் படம்."

**" 'சிட்டிசன்' இவ்வருடம் மே 1ஆம் திகதி உங்கள் பிறந்த நாளன்று வெளிவரும் என்று செய்திகள் வெளிவந்ததே?"**

"ஆமாம். இனி ஒவ்வொரு ஆண்டும் எனது பிறந்த நாளின் போதும் நிச்சயம் ஒரு படம் வெளிவரும். அது நிக் ஆர்ட்ஸ் நிறுவனத்தினின் படமாக இருக்கும்"

**"படத்தில் உங்களுடன் இணையும் சக கலைஞர்கள் பற்றி...?"**

"நாயகி வசுந்தரா தாஸ். மீனா, நக்மா முக்கிய பாத்திரங்களில் நடிக்கிறார்கள். இவர்களுடன் விஜயகுமார், மோகன், நடராஜன், அஜய்ரத்னம், டாக்டர் ஷர்மிளா ஆகியோரும் நடிக்கிறார்கள். இசை – தேவா, பாடல்கள் – வைரமுத்து, வசனம் – பாலகுமாரன், சண்டைப் பயிற்சி – கனல் கண்ணன், எடிட்டிங் – ஸ்ரீதர் பிரசாத், கதை, திரைக்கதை எழுதி சரவணன் சுப்பையா இயக்குகிறார்"

ஷாம்

# குறி சொல்கிறார் மீனா



மும்பைக் கிளிகளின் முழுமூச்சான படையெடுப்பினால் நொந்து போய் இருக்கும் மீனாவுக்கு ஒரே ஒரு ஆறுதல் **'சிவகாமி'** படம் தான்.

இதில் மீனா குறி சொல்லும் பெண்ணாக நடித்து வருகின்றார்.

இதற்காக சைதாப்பேட்டையில் முகாம் போட்டிருக்கும் நரிக்குறவர்களைச் சந்தித்து அவர்களுடன் பேசிப் பழகியுள்ளார்.

அவர்களுக்கு பிரியாணிப் பொதிகளையும் வழங்கினார்.

"மவராசியா நல்லா இருக்கணும் சாமியோவ்" என்று குறவர்கள் மீனாவை வாழ்த்தி அனுப்பியுள்ளனர்.

# ரோஜாவுக்கு ராஜா போட்ட அடையாளம்

பொட்டு அம்மனுடன் தனது 100ஆவது படத்தை முடித்துள்ளார் ரோஜா.

இதனை முன்னிட்டு அவருக்கு 'ரோஜா 100' என்ற பெயரில் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவில் உரையாற்ற வந்த பாரதிராஜா நீண்ட நாள் காதலர்களான ரோஜாவினதும் செல்வமணியினதும் கைகளை இணைத்து மஞ்சள் துணியினால் கட்டினார்.

ரோஜாவுக்கு ராஜா அடையாளம் போட்டதை விழாவுக்கு வந்திருந்தவர்கள் ஆர்வத்துடன் ரசித்தனர்.



# கமல் ஜோடியாகிறார் சிம்ரன்



'காதலா காதலா' படத்தைத் தயாரித்த தேனப்பன் கமலை வைத்து ஒரு புதிய படத்தைத் தயாரிக்கிறார்.

இதில் கமலுக்கு ஜோடியாக சிம்ரன் நடிக்கப் போகிறார்.

முயற்சி திருவினை யாக்கும் என்ற பழமொழிக்கு ஏற்ப இந்த வாய்ப்பு சிம்ரனுக்கு கிடைத்திருக்கிறது.

தேனப்பனின் அலுவலகத்திற்குத் தானே நேரில் சென்று வாய்ப்புக் கேட்டிருந்தாராம். தேனப்பனும் அடுத்த படத்தில் பார்க்கலாம் என்று கூறியிருக்கின்றார்.

கமலின் கால்ஷீட் கிடைத்தவுடன் சிம்ரனின் ஞாபகம் வர, அவருக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்.

# இசைஞானியின் தேர்வு

'பாரதி' படத்தில் பாரதியாராக நடித்திருக்கும் மராட்டிய நாடக நடிகர் ஷாயாஜி ஷிண்டே. இவருக்குப் பின்னணிக் குரல் கொடுத்திருப்பவர் ராஜீவ்.

ராஜீவின் குரல்தான் ஷிண்டேயின் நடிப்பிற்குப் பொருத்தமாக இருக்கும் என்று தெரிவு செய்தவர் வேறு யாருமல்ல இசைஞானி இளையராஜாதானாம்.



# எகிறுகிறது அமீஷா ஹோட்டல் செலவு



'என்ன விலை அழகே' படத்தில் பிரசாந்துடன் நடித்து வருகிறார் மும்பை நடிகை அமீஷா பட்டேல்.

படம் முடிகிறதோ இல்லையோ அம்மணி தங்கும் ஹோட்டல் செலவு எகிறிவிட்டதாம்.

''அமீஷா ரசிகர்களின் மனதைக் கொள்ளை அடிக்கிறாரோ இல்லையோ அவர் தங்கும் செலவில் என்னைக் கொள்ளை யடித்துவிட்டார்'' என்று புலம்புகிறார் தயாரிப்பாளர்.

அமீஷாவை தன் மகனுக்கு (பிரசாந்த்) ஜோடி சேர்க்க வடக்கிலிருந்து அழைத்து வந்தவர் தியாகராஜன்.

செலவழிப்பது தயாரிப்பாளர் என்பதால் தியாகராஜன் தரப்பில் மௌனம் தான் பதிலாக இருக்கிறது.

எது எப்படியோ துணிந்து இறங்கி விட்டோம் இனி கொள்ளை போன பணம் கைக்கு வந்தால் சரி என்று தனக்குத்தானே தேற்றிக் கொண்டிருக்கிறார் தயாரிப்பாளர்.

# சரத் தீவிரம்!



கோடீஸ்வரன் நிகழ்ச்சியில் பிஸியாக இருந்தாலும் பெரிய திரையில் வெற்றிக் கொடி நாட்ட வேண்டும் என்பதில் சரத்குமார் தீவிரமாக இருக்கிறார்.

''மக்கள் மனசில பதியிற மாதிரி நல்லகதையா சொல்லுங்க'' என்று இளம் இயக்குனர்களை உசுப்பேற்றிக் கொண்டி ருக்கிறார்.

# ரம்பாவுக்கு சிபாரிசு முரளி மும்முரம்

''இந்தப் பொண்ணு நல்லா நடிக்கும் இவங்களையே ஜோடியா போட்டிடுங்களேன்'' என்று ஒரு காலத்தில் கார்த்திக் ரம்பாவுக்கு சிபாரிசு செய்து கொண்டிருந்தார். இப்போது அந்த வேலையை முரளி செய்து கொண்டிருக்கிறார்.

'ஆனந்தம்' படத்தில் இருவரும் இணைந்து நடித்திருக்கிறார்கள். ரம்பாவுக்கு புதிய வாய்ப்புத் தேடும் பணியில் முரளி மும்முரமாகி யிருக்கிறார்.



# இங்கிலீஸ் பொண்டாட்டி ரம்யா



'அம்மன்' வேடத்தில் அம்சமாக நடித்தாலும் அவ்வப்போது ஆடை குறைத்து கவர்ச்சி வேடங்களில் நடிக்க ரம்யா கிருஷ்ணன் தவறுவதில்லை.

'வாஞ்சிநாதன்' வந்த வேகயோடு வரும் ரம்யா கிருஷ்ணனின் அடுத்த படம் 'இங்கிலீஸ் பொண்டாட்டி'. இவருக்கு ஜோடியாக ஸ்ரீகாந்த் நடித்திருக்கிறார்.

இந்தப் படத்தில் மும்பை நடிகைகளுக்கு ஜுரம் வரும் விதத்தில் ரம்யா கிருஷ்ணன் அதிக கவர்ச்சியாக நடித்திருக்கிறாராம்.

# திரை மறைவில்



சொந்த மச்சானைக் காதலிக்கிறார் என்று குற்றஞ்சாட்டிய நளின மனைவி இப்போது பசு நேசனைப்பிரிந்து 'கிருஷ்ணதாசி'யில் கலக்கிக் கொண்டிருக்கிறார்.

அவர் முந்தானையை உதறும் ஸ்டைலை தமிழ்நாட்டுத்தாய்க்குலங்களும் பின் பற்றி உதறிக்கொண்டிருக்கின்றனர்.

பசுநேசனோ காய்ந்தமாடு கம்பில் பாய்ந்த கதையாக அபிதகுசலாம்பாளைத் தன் கஸ்டடியில் வைத்திருக் கிறாராம். 'சீறிவரும் காளையில்' இருவரும் சேர்ந்து வேறு நடித்துக் கொண்டிருக் கிறார்கள்.

இது இப்படி இருக்க, 'சீறிவரும் காளை'படத் தயாரிப்பாளரின் மகனுக்கும் அபித குசலாம்பாளுக்கும் இடையே நட்பு நாளுக்கு நாள் பலப்பட்டு வருகிறதாம்.

**

நவரசநாயகன் என்று பெயரெடுத்த வாரிசு நடிகர் எந்த வீட்டில் யாருடன் வாழுகிறார் என்றே யாருக்கும் தெரியாத நிலை இப்போது.

தாரத்தின் தங்கையையும் இரண்டாம் தாரமாக்கிக் கொண்டு இரட்டை வால் குருவியானார். தாலிகட்டிய மனைவி கொதித்தெழ, குடும்பத்தில் குழப்பம் ஏற்பட்டது.

அந்த மன உளைச்சலில் தொழிலையும் கவனிக்க மறந்து விட்டார். நடிகர் எங்கு போகிறார், யாருடன் இருக்கிறார், எந்த வீட்டில் இருக்கிறார் என்று அவரது மனேஜருக்குக் கூடத் தெரியாதாம்.

* *

திருமணம் செய்து கொண்டு கணவரைப் பிரிந்து வாழும் ரயில் நடிகையும், மனைவியைப் பிரிந்து வாழும் 'கோடீஸ்வர' நடிகரும் ரகசிய மணம் செய்து விட்டார்களாம்.

**

கம கம என்று வாசம் வீசும் மான் நடிகையும் காதலில் சிக்கிக்கொண்டு விட்டார். இவர் அடிக்கடி வெளிநாட்டுக்கு விமானமேறுவது அன்புக்காதலரைக்கண்டு வரத்தானாம்.

# மும்தாஜ் கழுத்தில் அப்பாஸ் ஓவியம்

ஓவியம் வரைவது போன்ற ஒரு காட்சி என்று டைரக்டர் சொன்னதும் ஐயையோ....! என்று பதறிவிட்டார் அப்பாஸ்.

''ஓவியத்தை நீங்க தாளில வரைய வேண்டாம். மும்தாஜோட கழுத்தில்...'' டைரக்டர் சொல்லி முடிக்கவில்லை.

''எனக்குத்தான் ஓவியம் நல்லா வரையத் தெரியுமே'' என்று உற்சாகமாகி விட்டாராம் அப்பாஸ்.

இதில் அதிக ஒத்துழைப்புத்தந்தவர் மும்தாஜ் தானாம்.

கவர்ச்சி வேடங்களில் அம்மணி வழங்கும் ஒத்துழைப்பைப் பார்த்து தயாரிப்பாளர்களே வியந்து போகிறார்களாம்.



# அவதூறு செய்தவர்களுக்கு சாயிபாபா அளித்த பதில்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா தமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அவதூறுப் பிரசாரத்துக்குப் பதில் அளித்திருக்கிறார்.

அவதார புருஷர், ஆத்மிகக் குரு, வழிகாட்டி என்று பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டவர் ஸ்ரீ சத்ய சாயி பாபா. உலகெங்கும் லட்சக்கணக்கான பக்தர்கள் அவருக்கு இருக்கிறார்கள்.

ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள புட்டபர்த்தியிலும் பெங்களூரில் உள்ள வைட்பீல்ட்டிலும் ஆசிரமங்கள் அமைத்து அளப்பரிய ஆத்மிக பணியாற்றி வருகிறார். இலவசக் கல்வி, சுகாதார, சமூக சேவைகளையும் மேற்கொண்டு வருபவர் ஸ்ரீ சத்ய சாயிபாபா.

அவர் மீது அசிங்கமான குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டன. அவரை அவதூறு செய்து பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தியாவின் பிரபல பத்திரிகை ஒன்று இந்த அவதூறுப் பிரசாரத்தைத் தீவிரமாக நடத்தியது. அதைச் "சுடர் ஒளி" தனது 27.12.2000 இதழில் சுட்டிக்காட்டிப் பலத்த கண்டனம் தெரிவித்தது. அது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவே தமக்கு எதிரான அவதூறுப் பிரசாரத்துக்குப் பதில் அளித்து விட்டார்.

சமீபத்தில் வைட் பீல்ட்டில் உள்ள பிருந்தாவனம் ஆசிரமத்தில் நடைபெற்ற விழா ஒன்றில் அருள் உரை நிகழ்த்து கையிலேயே ஸ்ரீ சத்ய சாயி பாபா தமக்கு எதிரான அவதூறுப் பிரசாரத்துக்குப் பதிலளித்தார். அதன்மூலம் சம்பந்தப் பட்டவர்கள் உண்மையை உணர்ந்து நேர்வழி செல்ல வைத்தார்.

பகவான் சத்ய சாயி பாபா அளித்த பதில் வருமாறு:-

'மக்களின் நன்மைக்காக நான் செய்துள்ள பணிகளில் ஆயிரத்தில் ஒரு சிறு துளியாவது அவதூறு சொல்பவர்களால் செய்ய முடியுமா?

புட்டபர்த்தியில் உள்ள ராயலசீமா பகுதி மக்கள் பிரிட்டிஷ் ஆட்சி இருந்த காலத்தில் இருந்தே குடிதண்ணீர் கிடைக்காமல் திண்டாடி வந்தனர். சத்யசாயி குடிதண்ணீர் திட்டத்தின் மூலம் இந்தப் பகுதியின் தண்ணீர்க் கஷ்டம் நீங்கியது.

இந்தப் பகுதிக்கும்தான் நிறையப் பேர் எம்.பி., எம்.எல்.ஏக்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களால் தண்ணீர்க் கஷ்டத்தைப் போக்க முடிந்ததா?

சத்யசாயி அறநிலையங்கள் மூலம் எண்ணற்ற மக்கள் சேவைப் பணிகள் செய்யப்படுகின்றன. இதன் மூலம் லட்சக்கணக்கான மக்கள் பயன் பெறுகின்றனர்.

எனது புகழையும், எனக்குப் பக்தர்கள் குவிவதையும் பார்த்துப் பொறாமை கொண்ட சிலர் இது போல அவதூறுப் பிரசாரங்களை

## எங்கள் குலதெய்வம்

என்னிறைவன் சாயீசன்
எவ்வுயிர்க்கும் இறைவன்!
ஏழை எளியார்தமையும்
வாழ வைக்கும் இனியன்!
பொன்னிதயந்தோறும் நடம்
புரிகின்ற புனிதன்!
புவியையொளிப் படுத்த வந்த
அவதார புருஷன்!
அன்னையினும் கருணைமிகு
அன்பு தரும் தெய்வம்!
அடியவர்தம் துயர்போக்கி
அருள்பொழியும் தெய்வம்!
மண்ணிலறப் பயிர்வளர
நல்லமைதி பூக்க
மனிதவுருத் தாங்கி வந்த
எங்கள் குலதெய்வம்!

- பாலபாரதி



செய்து வருகின்றனர். இதற்காக அவர்களுக்குப் பணம் கிடைக்கிறது.

அரசியல்வாதிகள் விளம்பரம் தேடுவதில்தான் குறியாக உள்ளனர். ஏழை மக்களுக்கு அவர்கள் என்ன வசதிகளைச் செய்து கொடுத்துள்ளனர்? நான் செய்துள்ள பல பொது நலப் பணிகளில் ஆயிரத்தில் ஒரு சிறு துளியாவது என் மீது அவதூறு சொல்பவர்களால் செய்ய முடியுமா?

மேற்கத்தைய நாடுகளின் கலாசாரம் நம் நாட்டு மக்களின் மனங்களை மாற்றுகிறது. நமது மக்கள் உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இயேசுநாதரையும் இப்படித்தான் குறைகள் கூறி சிலுவையில் வைத்து அடித்தனர். அன்று இயேசுவைக் காட்டிக் கொடுத்தது ஒரே ஒரு யூதாஸ்தான். இன்று ஆயிரம் யூதாஸ்கள் உள்ளனர். தூற்றுவோர் தூற்றட்டும் உண்மையே நிலைக்கும்

இவ்வாறு பகவான் சத்ய சாயிபாபா கூறினார்.

# சாயிபாபா தன்னைப்பற்றி தானே தரும் தத்துவ விளக்கம்

ஸ்தூல கண்களால் ஒருபோதும் உண்மையைக் காணமுடியாது. அவை தப்பானதும் தெளிவற்றதுமான விபரங்களைத்தான் தரும். உதாரணமாக, எனது செயல்களை அவதானிக்கும் பலர் எனது இயல்பானது இப்படியாக உளது அப்படியாக உளது என்று விவரிக்கத் தொடங்கிவிடுகிறார்கள்.

நானாக இருக்கும் புனிதத் தன்மையை, மேன்மையை, அழியாத உண்மையை அவர்களால் மதிப்பிட முடியாது இருக்கின்றது.

சாயியினுடைய சக்தி எல்லையற்றது. அது என்றும் தெளிவாக வெளிப்படையாகவே விளங்கும். எல்லாவித சக்திகளும் சாயியினுடைய உள்ளங்கைகளிலே வீற்றிருக்கின்றன.

ஆனால் என்னை அறிந்துகொண்டதாகக் கூறிக்கொள்ளும் கல்விமான்கள், யோகிகள், பண்டிதர்கள், ஞானிகள் அனைவரும் அதிமுக்கியத்துவம் கொண்டதானதும் சக்தியின் மிகச்சிறியதுமான சாதாரண வெளிப்புற உருவாய் "அற்புதங்களை" மட்டுமே அறிந்துள்ளார்கள்.

அச்சக்திகளின் மூலத்துடன் தொடர்புறவோ அன்றி பிரசாந்தி நிலையத்தில் பெறக்கூடியதான முழு ஞானத்தையும் பற்றி அறியவோ அவர்கள் விருப்புறவில்லை.

தமது நூல் அறிவை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் கிடைத்தும் வேதங்கள் எவரிடமிருந்து உருப்பெற்றனவோ அவரே அவர்களுக்காக அவர்கள் மத்தியிலே இருக்கிறார் என்பதை உணராது தமது வேதநூல் அறிவின் திறனை வெளிப்படுத்துவதோடு திருப்தியடைகின்றனர்.

மேலும் மிகவும் பெருமிதத்துடனேயே அவர்கள் அத்தகைய சந்தர்ப்பங்களை எதிர்காலத்திலும் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

இவ்வாறுதான் எல்லாக் காலங்களிலும் நிகழ்வுகள் நடந்திருக்கின்றன. அவதாரங்களுக்கு அருகில் மிக்க நெருக்கமாக மக்கள் இருப்பார்கள். அவர்களுக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தை உணராமலே அவர்கள் வாழ்ந்து முடித்துவிடுவார்கள். அற்புதங்களின் பங்கினைப் பற்றி மட்டும் புகழ்ந்து பேசுவார்கள்.

இவையெல்லாம் எனது பெருமை எனது சிறப்புடன் ஒப்பிடும்போது கொசுவை அது அமர்ந்திருக்கும் பலம் மிக்க யானையுடன் ஒப்பிட்டவாறு மிகச்சிறியனவேயாகும்.

ஆகவே, இந்த அற்புதங்களைப் பற்றி நீங்கள் பேசும்போது எனது உண்மையான தன்மையைப் பற்றி அறியக்கூடிய மிக அருமையான சந்தர்ப்பத்தை பெருநிலை குவாகவே இழக்கின்றீர்கள் என பரிதாபங்கொண்டு என்னுள்ளே சிரித்துக்கொள்வேன்.

எனது சக்தியானது அளவிட முடியாதது. எனது உண்மையானது விவரிக்க முடியாததும், ஆழமறிய முடியாததுமாகும்.

தேவை ஏற்பட்டிருப்பதன் காரணமாக நான் என்னைப் பற்றி இதனை வெளிப்படுத்துகின்றேன். ஆனால் நான் இப்போது நடத்தும் அற்புதங்களது உருவெல்லாம் நீங்கள் என்னிடம் வரக்கூடியதாக அறிமுகப்படுத்தும் விலாச அட்டையாகிய ஒரு நன்கொடையாகும்.

அவதாரங்களது உண்மையைப் பற்றிய அழுத்தமான பிரகடனம் மிகத் தெளிவாகவும் பிழையின்றியும் கிருஷ்ண பரமாத்மாவினாலேயே கொடுக்கப்பட்டுள்ளதென்பதை நான் உங்களுக்குக் கூறுகிறேன்.

இந்தப் பிரகடனம் இருந்தபோதும் அதே கிருஷ்ணரது வாழ்விலே சில சந்தர்ப்பங்களில் அவர் தனது முயற்சிகளிலும்

**இக்கட்டுரை பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா தன்னைப் பற்றியும் தனது நிறைந்த சக்தியைப் பற்றியும் அருள் வழங்கலைப் பற்றியும் 28 ஆண்டுகளுக்கு முன்பு ஆற்றிய மிக முக்கியமான சொற்பொழிவைத் தழுவியது.**

பிரயாசைகளிலும் தோல்வியைக் கண்டார்.

தானே திட்டமிட்டு நெறிப்படுத்திய நாடகத்தின் பகுதிகளே அத்தோல்விகள் என்பதையும் நீங்கள் கவனித்துக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக, கௌரவர்களுடனான போரினைத் தடுத்துக் கொள்ளுமாறு பல மன்னர்கள் அவரைக் கேட்டுக்கொண்டபோது, கௌரவர்களது அவைக்களத்தே தான் எடுத்துச் சென்ற தூதானது வெற்றியளிக்காது போய்விட்டது என்று மெய்ப்பித்தார்.

ஆனால் அது வெற்றியுற வேண்டுமென அவர் விதிக்கவில்லை. போர் நிச்சயம் நடந்தே தீரவேண்டுமென அவர் நிர்ணயித்திருந்தார். பேராசையும் அநீதியும் கொண்ட கௌரவரை உலகறியத் தண்டிப்பதே அவரது அவதாரத்தின் நோக்கமாகும்.

சாயி அவதாரத்திலே அத்தகைய தோல்விகளுக்கும் தவறுதல்களுக்குமான நாடகக் காட்சிகளுக்குக்கூட இடமில்லை என்பதை இப்போது உங்களுக்குக் கூற வேண்டும்.

நான் நினைப்பது எதுவோ அது நிச்சயம் நடைபெற வேண்டும். நான் திட்டமிடுவது நிறைவேற வேண்டும். நானே உண்மையாகும். உண்மைக்கு எவ்வித தயக்கமோ பயமோ தாழ்ந்து போகவேண்டிய தேவையோ இல்லை.

எத்தகைய சிக்கலான பிரச்சினையாக இருந்தாலும் அதனை என்னால் தீர்த்துவைக்க முடியும். மிகவும் நுண்ணிதான ஆராய்விற்கும், அதிகமான கவனமெடுக்கப்பட்ட அளவீட்டினாலும் என்னை அளவிட முடியாது.

எனது அன்பை உணர்ந்தவர்களும் அதனை அனுபவித்தவர்களும் மட்டுமே என் உண்மை நிலையினைச் சிறிதளவே தானும் கண்டுகொண்டதாக உரிமை கோரிட முடியும்.

அன்பின் வழிதான் மனித இனத்தை என்னிடம் ஆற்றுப்படுத்தும் ராஜபாதையாகும்.

"சாயி பாபா" என்ற பெயரின் கருத்தினைச் சிந்தித்துப்பாருங்கள். "சா" என்றால் தெய்வீகம். "அயி" "அய்" என்றால் தாய், "பாபா" என்றால் தந்தை. இப்பெயர் தெய்வீகத் தாய் தந்தை என்பதை விளக்குகிறது. உங்களைப் பெற்ற தாய் தந்தையினர் சிறிதளவே சுயநலத்துடன் உங்கள்பால் அன்பை வெளிப்படுத்துகிறார்கள்.

ஆனால் இந்தத் தாய் தந்தையாகிய சாயி தன்னை உணர்தலாகிய பெருமுயற்சியிலே வெற்றியெய்துவதற்கு உங்களை இட்டுச் செல்வதற்காக மட்டும் உங்களைக் கண்டித்தும், தனது அன்பினைச் சொரிந்தும் வருகிறார்.

ஏனெனில், மனித இனம் முழுவதையும் சகோதரத்துவம் என்னும் பிணைப்பினாலே ஒரு குடும்பமாக்குவதற்கும்

இந்தப் பிரபஞ்சமனைத்தும் நிலைப்பதற்கு ஆதாரமாக, அடித்தளமாக விளங்கும் தெய்வீகத்தை உணர்ந்துகொள்வதற்கும்

ஒவ்வொருவரிலும் இருக்கும் ஆத்மீக உண்மையினைத் துலங்க வைத்து நிலை நிறுத்துவதற்கும்

மனிதன் தன்னிடமுள்ள மிருக நிலையை நீக்கி, எல்லையாக விளங்கும் தெய்வீக நிலையையடைவதற்கு மனிதனொரு மனிதனை இணைக்கும் பொதுவான தெய்வீக பாரம்பரியத்தை எல்லோரும் உணர வேண்டுமென்று வற்புறுத்துவதற்குமான மேலான சேவையை வெற்றிகரமாக ஆற்றுவதற்கே இந்த சாயி வந்துள்ளார்.

நானே அன்பின் உருவம். அன்பே எனது கருவி. அன்பில்லாது ஒரு ஜீவனுமில்லை. கீழ்நிலையிலுள்ளதும் அதனையே (தன்னையே) விரும்புகிறது. "தன்னை" என்பதும் இறைவனையேயாகும்.

எனது உண்மை நிலையைப் பற்றி இவ்வளவுதாம் நான் உங்களுக்குச் சொல்லவேண்டி இருந்தது. ஏனெனில் நீங்கள் இதுபற்றிச் சிந்திக்கவேண்டும். அதிலிருந்து இன்பம் பெறவேண்டும்.

# இந்திய குடியரசு குதூகலம் பூமி அதிர்வே அவலமாகியது



இடிபாடுகளுக்குள் சிக்குண்ட அம்மாவின் உடலை மீட்க மகன் முயற்சி

## ஒரு லட்சம் பேர் மரணம்; கட்டடங்கள் கற்குவியல்கள்; புஜ் நகரமே அழிந்தது

குஜராத் பூகம்பம் சில நொடிப் பொழுதில் பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொண்டு விட்டது. கடந்த 50 ஆண்டுகளில் இந்தியாவில் நிகழ்ந்த மிகப் பெரிய பூகம்பம் இது எனக் கூறப்படுகிறது.

இந்த மாநிலத்தின் புஜ் என்ற குட்டி நகரத்தை மையமாகக் கொண்டிருந்த பூமி அதிர்ச்சி அஹமதாபாத், சூரத், கட்ச் உட்பட மாநிலத்தின் பல பகுதிகளையும் ஆட்டி அழித்துள்ளது.

புஜ் நகரமும் கட்ச் பகுதியுமே மிக மோசமாக அழிந்துள்ளன. இடிந்து விழாத கட்டடங்களோ,வீடுகளோ இவ்விரு இடங்களிலும் இல்லை எனக் கூறும் அளவுக்கு அழிவுகள் ஏற்பட்டுள்ளன. எங்கு பார்த்தாலும் இடிபாடுகள், பிணக்குவியல்கள்.


மகாத்மா காந்தி பிறந்த மாநிலமான குஜராத்தில் கடந்த 26 ஆம் திகதி மக்கள் இந்தியக் குடியரசு தின விழாவைக் கொண்டாடத் தயாராகிக் கொண்டிருந்தனர். அப்பொழுது காலை சுமார் 8.46 மணியளவில் ஆரம்பித்த பூகம்பம் சில நிமிடங்கள் நீடித்துள்ளது.

அஹமதாபாத் நகரம் தொடக்கம் பாகிஸ்தான் எல்லையோரம் உள்ள கட்ச் பகுதிவரை கட்டடங்கள் யாவும் சடசடவென்று பூமியில் சரிந்துள்ளன. பல மாடிக் கட்டடங்கள் குண்டு வீச்சில் நொருங்குண்டது போல நொருங்கியுள்ளன. மக்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருப்பிடங்களை விட்டு வெளியே ஓடியுள்ளனர். இவ்வாறு ஓடியோர் உயிர்தப்பியுள்ளனர்.

கட்ச் மாவட்டத்தில் உள்ள புஜ் நகரையே இந்தக் கொடிய பூகம்பம் சின்னாபின்னமாக்கியுள்ளது. இங்கு 50 ஆயிரம் பேர் வரை இடிபாடுகளில் சிக்கி மாண்டுள்ளனர். ஏனைய இடங்களிலும் மேலும் பல ஆயிரக்கணக்கானோர் இடிபாடுகளில் புதையுண்டுள்ளனர். பல பகுதிகள் மண்ணோடு மண்ணாகியுள்ளன.

கிராமங்கள் அடையாளம் காண முடியாதவாறு அழிந்துள்ளன. அக்கிராமங்களுக்குச் செல்ல வீதிகள் இல்லை. தோண்டும் இடங்கள் எல்லாம் பிணங்கள். இடிபாடுகளில் பல்லாயிரக்கணக்கானோர் சிக்கியுள்ளனர்.

பூகம்பத்தால் பேரழிவைச் சந்தித்துள்ள குஜராத் மாநிலம் கடந்த ஆண்டில் இருந்தே அடிக்கடி இயற்கையின் கோரப்பசிக்கு ஆளாகி வந்துள்ளது.



ஒரு பாடசாலைச் சிதைவுகளுக்குள் புதையுண்ட ஒரு மாணவியின் சடலம்

சென்ற ஆண்டின் தொடக்கத்தில் காற்று தனது கோபத்தை வெளிப்படுத்தியது. அப்பொழுது வீசிய பெரும் சூறாவளி உயிர், உடைமை அழிவுகளை ஏற்படுத்தியது. பின்னர் வந்த வெயில் மக்களை வாட்டி வதைத்தது. ஒரே வரட்சி. இலட்சக்கணக்கான மக்கள் குடிதண்ணீர் கூட இன்றி இயற்கை இன்னலை எதிர்த்துப் போராடினர்.

சென்ற ஆண்டின் பிற்பகுதியில் தண்ணீரின் கொடூரம் வெளிப்பட்டது. மாநிலத்தின் பல பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்தனர்.

இப்பொழுது பூமி தனது கொடூரத்தைக் காட்டியுள்ளது. பஞ்சபூதங்களில் நான்கு பூதங்களான காற்று, நீர், நிலம், அக்கினி (வெயில்) என்பன குஜராத்தில் கொடூர கைவரிசையைக் காட்டியுள்ளன.

இந்தப் பெரிய பூகம்பத்தை விட குஜராத்தில் மொத்தம் 71 முறை நில நடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த நடுக்கங்கள் 3.8 முதல் 5.9 வரையான ரிக்டர் அளவுகளில் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

பூகம்பம் தாக்கியதும் அந்தத் தாக்கத்தின் அளவை ரிக்டர் அளவில் குறிப்பிடுகிறார்கள். இது எதனைக் குறிக்கின்றது?

குஜராத்தில் ஏற்பட்ட பூகம்பத்தின் அளவை அமெரிக்க பூகற்பவியல் மதிப்பீடு 7.9 ரிக்டர் அளவு எனக் கணிப்பிட்டுள்ளது. பூகம்பத்தை அளவிடும் முறை 1935 ஆம் ஆண்டிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது.

கலிபோர்னிய தொழில்நுட்ப நிலையத்தின் அமெரிக்க பௌதிகவியலாளர் சார்ள்ஸ் எப். ரிக்டர் என்பவரே இந்த முறையை அறிமுகப்படுத்தினார். ஒரு ஆண்டில் நிகழ்ந்த 200க்கு மேற்பட்ட பூகம்பங்களை ஆராய்ந்து அவர் இந்த முறையைக் கண்டுபிடித்தார்.

பூகம்பத்தின் விளைவுகளை ரிக்டர் அளவு அளவிடுவதில்லை. ஆனால் பூகம்பம் வெளியேற்றும் சக்தியின் பலத்தை அது அளவிட்டுத் தருகிறது.

பூமிக்கடியில் உள்ள பாறைப் படிவங்கள் ஒன்றோடு ஒன்று உராயும் போது உண்டாகும் மிகப் பெரிய ஆற்றல் பாறைகளில் அதிர்வுகளை உண்டாக்குகின்றது. இந்த அதிர்வு பல்லாயிரக்கணக்கான மைல்கள் தொடர முடியும். இந்த அதிர்வுகளே பூமி அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

பூகம்ப அதிர்வுகள் முதல்நிலை அலைகள் — இரண்டாம் நிலை அலைகள் — நீண்ட அலைகள் என மூன்று வகைப்படும். இந்த அலையதிர்வு இயக்கங்கள் புவிப்பாறை மேலோட்டில் வெவ்வேறு வேகங்களில் கடந்து செல்லும். அவற்றின் திசைகளும் மாறுபடும்.

இந்தப் பூகம்பத்தில் குஜராத் கட்ச் மாவட்டத்தின் அன்ஜார் என்ற நகரில் சுமார் 400 மாணவர்கள் ஒன்றாக இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்துள்ளனர். குடியரசு தின அணிவகுப்பில் இவர்கள் கலந்து கொண்டிருக்கையிலேயே இந்த துயரச் சம்பவம் நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பூகம்பம் இவ்வாறு பலி கொண்டிருக்கையில் ஒரு சிலருக்கு அது 'அதிஷ்டத்தைக்' கொடுத்துள்ளது.

புஜ் நகரத்தில் உள்ள சிறையின் சுவர் ஒன்று பூகம்ப தாக்கத்தினால் சரிந்து விழுந்துள்ளது. அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட சிறைக் கைதிகளில் 190 பேர் தப்பியோடியுள்ளனர். இவர்களில் 50 பேர் பயங்கரக் குற்றவாளிகள்.

குஜராத் பூகம்பத்தில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை எவ்வளவு? ஒரு இலட்சத்தைத் தாண்டி இருக்கலாம் என இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இறுதியாகத் தெரிவித்துள்ளார். காயமடைந்தோர் எண்ணிக்கை இரண்டு இலட்சமாக இருக்கலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

பூகம்பத்தால் சிதைந்த பாரிய கட்டடங்களுக்குள் இன்னமும் பெருந் தொகையானோர் புதையுண்டுள்ளனர். அந்தக் கட்டட இடிபாடுகளை முற்றாக அகற்ற இன்னும் ஒரு மாதம் செல்லலாம் எனக் கூறப்படுகிறது. இடிபாடுகள் அகற்றப்பட்ட பின்னரே இறந்தோரின் உண்மையான தொகை தெரியவரலாம். இடிபாடுகளில் சிக்கி போரை உயிருடன் மீட்கும் நம்பிக்கை இப்பொழுது குறைந்துள்ளது.

இடிபாடுகளில் இருந்து மீட்கப்படும் பிணங்களைத் தகனம் செய்ய சுட்டு தகன சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை இரவு பகலாக பிணங்களைத் தகனம் செய்வதில் ஈடுபட்டுள்ளன. இடிபாடுகளில் இருந்து ஒருவரோ,இருவரோ இடைக்கிடையே உயிருடன் மீட்கப்பட்டு வருகின்றனர்.

—எஸ். எட்வேர்ட்



அஹமதாபாத் பகுதியில் கட்டடத் தொகுதிகள் இடியுண்டு தகர்ந்து போயிருக்கும் கோரக் காட்சி. இந்த இடிபாடுகளுக்குள் எத்தனை சடலங்களோ!

# தி.மு.க.வின் பெரும் கவலை கருணாநிதியின் சுகயீனம்!

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி தேர்தலைச் சந்திக்கத் தயாராகி விட்டார். அவர் தமது தேர்தல் வெற்றிக்காக சகல விதத்திலும் திட்டங்களை வகுத்து விட்டார். ஆயினும் தேர்தல் பிரசாரப் பணிகளில் அவர் முழுமூச்சுடன் ஈடுபடுவதற்கு அவரது தேகநிலை இடம் கொடுக்குமா?

இந்தக் கேள்வி தி.மு.க வட்டாரத்தில் எழுப்பப்படுகிறது. காரணம் கருணாநிதி சுகயீனம் காரணமாக நான்கு தினங்கள் முக்கியமான சட்டசபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை.

அத்துடன் வரவு– செலவுத்திட்டத்தை சட்ட சபையில் சமர்ப்பித்தபோது கருணாநிதி சபையினரின் விசேஷ அனுமதியுடன் தமது இருக்கையில் அமர்ந்த படியே உரைநிகழ்த்தினார்.

தமிழக சட்டசபைக்கு ஏப்ரல் மாதத்தில் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்ட பின்னர் இரண்டு முக்கியமான திருவிழாக்களை நடத்திவிட்டார் கருணாநிதி.

ஒன்று தமிழக சட்டசபையின் புதிய கூட்டத் தொடரை நடத்தி தமிழக ஆளுநர் பாத்திமா பீபி அதனை ஆரம்பித்து உரை நிகழ்த்த வழி செய்தார். தி.மு.க ஆட்சியின் சாதனைகளை வெளிப்படுத்தி மேலும் புதிதாக மேற்கொள்ளவுள்ள பணிகள் பற்றி ஆளுநர் தெளிவு படுத்தினார்.

சட்ட சபை நடைமுறைகளுக்கு ஏற்ற விதத்தில் கருணாநிதி நடத்திய நாடகம் இது. ஆயினும் ஜெயலலிதா இந்த ஆளுநர் உரையை ஒரு தேர்தல் பிரசாரம் என்று கண்டித்திருக்கிறார். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது விவாதம் நடைபெற்றபோது நான்கு தினங்கள் சுகயீனம் காரணமாக கருணாநிதி சட்டசபைக்கு வரவில்லை.

சட்டசபைக் கூட்டத் தொடர் ஆரம்பித்த கையுடன் 2001 – 2002 ஆம் ஆண்டுக்கான மானியக்கோரிக்கை மீது இடைக்கால வரவு– செலவுத் திட்டத்தையும் கருணாநிதி சமர்ப்பித்திருக்கிறார்.

முதலமைச்சர் கருணாநிதி நிதி அமைச்சுப் பொறுப்பையும் வகிக்கிறார். வரவு–செலவுத்திட்ட உரையை 30ஆம் திகதி சட்டசபையில் சமர்ப்பித்த போதும் அவர் உடல்நலம் குன்றிய நிலையிலேயே இருந்தார்.

ஆளுநர் உரை மீதான விவாதத்தின் போது சபைக்குவராத முதலமைச்சர் வரவு–செலவுத்திட்ட உரையை நிகழ்த்த வந்தபோது உறுப்பினர்கள் கரகோஷம் எழுப்பி அவரை வரவேற்றனர். சபையின் அனுமதி பெற்று தமது இருக்கையில் விஷேச மெத்தை போட்டு அமர்ந்து 44 நிமிடங்கள் உரை நிகழ்த்தினார் கருணாநிதி.

கருணாநிதியின் வரவு–செலவுத்திட்ட உரை தொலைக் காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. வரவு செலவுத்திட்ட உரையை கருணாநிதி நிகழ்த்திய பின்னர் எதிர்க்கட்சித் தலைவர்கள் அவர் அருகில் வந்து உடல்நலம் விசாரித்தனர். அவரைப் பாராட்டினர்.

ஆளுநர் உரை, இடைக்கால பட்ஜெட் ஆகியன சீரிய முறையில் அரங்கேற்றப்பட்டிருக்கின்றன. அதன் மூலம் கருணாநிதியின் அரசியல் நிர்வாகத்திறனுக்கு மகுடம் சூட்டப்பட்டிருக்கிறது.

ஜெயலலிதா ஆட்சியில் சூறையாடப்பட்ட தமிழகத்தின் நிதி நிலைமை மீண்டும் ஸ்திரமான நிலைக்கு வந்திருக்கிறது என்று கருணாநிதி நிரூபித்திருக்கிறார். மீண்டும் ஒரு தடவை எனக்கு ஆட்சி அதிகாரத்தைத் தாருங்கள் என்று மறைமுகமாக அவர் கேட்டிருக்கிறார்.

அவருக்குச் சாதகமான நிலையில் பெரும்பான்மையான



தமிழக மக்கள் இருக்கிறார்கள் என்பதும் ஆய்வுக் கணிப்புகள் மூலம் தெரியவந்திருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் கருணாநிதியின் உடல்நலம் குன்றியிருப்பது தி.மு.க அனுதாபிகளைக் கலக்கம் அடையவைத்து விட்டது.

"கருணாநிதியை விரட்டிவிட்டு ஆட்சியைப் பிடித்துவிட வேண்டும். இல்லையேல் எனக்கு மீட்சி இல்லை" என்ற நிலையில் ஜெயலலிதா இருக்கிறார். "சிறைக்கு என்னை அனுப்ப முயலும் கருணாநிதியை நான் ஆயுட்காலம் முழுவதும் சிறையில் அடைத்து வைத்து கொடுமை செய்ய வேண்டும்" என்பது ஜெயலலிதாவின் பேராசை. இது பற்றி அவர் வெளிப்படையாகவே அறிவித்திருக்கிறார்.

இந்நிலையில் ஜெயலலிதா தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பைப் பெறுவாரா என்பது நிச்சயம் இல்லை. அப்படிப் போட்டியிட்டாலும் வெற்றி கிட்டுமா என்பதும் நிச்சயம் இல்லை.

"தி.மு.க கூட்டணி அமோக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சிக்கு வரும்" என்று ம.தி.மு.க தலைவர் வை.கோபாலசாமி அறிவித்திருக்கிறார். அவர் உள் வீட்டுப் பிள்ளை. அப்படிச் சொல்வதில் ஆச்சரியம் இல்லை.

ஆனால் வாஜ்பாய் அரசின் கூட்டாளியாகவும், ஜெயலலிதாவின் ஆபத்பாந்தவனாகவும் ஒரு விசித்திரமான வேடம் தாங்கும் "துக்ளக்" ஆசிரியர் சோ கருணாநிதிக்குத்தான் வெற்றி வாய்ப்பு இருக்கிறது என்று கூறியிருக்கிறார். அ.தி.மு.க ஆதரவாளர்களுக்கு இது ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆயினும் ராஜ்யசபை எம். பி. யான சோ. ராமசாமி கருணாநிதி மீதுள்ள பாசத்தினால் இவ்வாறு கூறவில்லை. ஜெயலலிதாவுக்கும் – மூப்பனாருக்கும் அதிர்ச்சி வைத்தியம் செய்வதற்கு அவர் கண்டு பிடித்த தந்திரம் இது.

அ.தி.மு.க கூட்டணியில் த.மா.காவும் சேர்ந்து போட்டியிட்டால் தி.மு.கவைத் தோற்கடிக்கலாம் என்று வலியுறுத்துகிறார் சோ.

ஜெயலலிதாவின் பக்கம் வெற்றிவாய்ப்பு குறைவாகவே இருக்கிறது. இருப்பினும் இறுதி நேரத்தில் ஏதாவது அதிரடி வைத்தியம் செய்து வெற்றியைத் தேடிக் கொள்ளும் வல்லமை படைத்தவர் ஜெயலலிதா என்பதை மறந்து விடக்கூடாது.

வீராப்புடன் இருக்கும் மூப்பனார் தேவை ஏற்பட்டால் ஜெயலலிதாவின் காலில் வீழ்ந்து ஆசி பெறவும்கூடும். தமிழக அரசியல் அத்தகைய தன்மை வாய்ந்தது.

ஆயினும் தேர்தல் மேடைகளில் தேனொழுகப்பேசி மக்களின் ஆதரவைப் பெற்றுவிடும் வல்லமை அதிகம் கொண்டவர் கருணாநிதி. தினமும் எண்ணற்ற கூட்டங்களில் பேசும் ஆற்றலும் அவருக்கு உண்டு. அவ்விதம் கடும் உழைப்பினைத் தரும் வல்லமை குன்றிவிட்டால் அதாவது உடல்நலம் பாதிக்கப்பட்டுவிட்டால் தி.மு.க வின் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்பட்டுவிடலாம்.

மேலும் ஐந்து வருடகாலம் தமிழகத்தை ஆளும் திடமான தேகநிலை கருணாநிதிக்கு இல்லை என்பது நிரூபிக்கப்பட்டு விட்டால் ஆபத்துத்தான்.

ஆயினும் கருணாநிதிக்கு ஆபத்தான நோய்நொடிகள் ஏற்பட்டிருப்பது போல் தெரியவில்லை. அவர் மருத்துவ நிலையங்களில் தங்கவுமில்லை. வெறும் முதுமைக் கோளாறுதான் என்று கூறக்கூடும். அவ்விதம் கூறுவதும் பாதகமான நிலையை ஏற்படுத்தக்கூடும்.

இருப்பினும் எத்தகைய தேக அசௌகரியங்களையும் எதிர்த்து நின்று வெற்றிபெறும் மனத்திடம் கருணாநிதிக்கு உண்டு. இம்முறையும் அவர் வெற்றி பெறுவார் என்று அவருடைய ஆதரவாளர்கள் திடமாக இருக்கிறார்கள்.

–கதாசி

## வாசகர் இதயம் பேசுகிறது

விபத்தில் கொல்லப்பட்ட கணவர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் நினைவாகத் தமக்கு மக்கள் தந்த பணியை நிறைவேற்ற வந்திருக்கும் பேரியல் அஷ்ரப்புக்கு "சுடர் ஒளி" தந்த கௌரவம் சிறப்பானது.

—எம்.எம்.தாஹிர், மட்டக்களப்பு.

மூடி மறைக்கப்படும் விடயங்கள்எல்லாம் "சுடர் ஒளி" மூலம் வெளிச்சத்துக்கு வருவது அபாரம். பக்கச் சார்பு இல்லாமல் பரந்த அளவில் தகவல்கள் முன்வைக்கப்படுகின்றன.

– அ. அரசரெத்தினம், சேனையூர்—06.

மசாலா மிக்ஸ் பகுதி தந்த தகவல்கள் மலைக்க வைத்து விட்டன. வர்ணப்படங்களுடன் தரப்படும் விளக்கம் அபாரம்.

—கே. எம். பாரீஸ், மன்னார்

"ஐ. தே. க. வில் பெண்களுக்கு அடித்திருக்கிறது யோகம்" என்னும் தலைப்பில் வெளியான கட்டுரை சுவையாக இருந்தது.

—எல். மரியநேசன், வத்தளை

யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொள்ளாமல் ஆனையிறவுக்குப் படை நகர்வு மேற் கொள்ளப்படுவது பற்றிய கள நிலைமை விபரம் எம்மை அதிர வைத்து விட்டது.

—தே. மதியாபரணம், தெஹிவளை.

தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு என்பது எட்டாக்கனியாகி விட்டது. இதனை "மலையகக் கண்ணோட்டம்" பகுதியில் சிறப்பாக வெளியிட்டிருந்தீர்கள்.

—எஸ். தர்மலிங்கம், மஸ்கெலியா

பல்கலைக்கழக மாணவர்களின் பொங்கு தமிழ் நிகழ்வு ஆட்சியாளர்களின் கடும் போக்குக்குத் தரப்பட்ட பதிலடியாக அமைந்து விட்டது. தமிழரின் எழுச்சியை ராணுவ பலத்தினால் அடக்க முடியாது என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

—செ. மங்கையர்க்கரசி, திருகோணமலை

மட்டக்களப்பில் பொது வீதிகளில் பிரசவம் நடக்கும் அவலம் பற்றி அறிந்து மனக்குழப்பம் அடைந்தோம்.

— சீ. எவ். மஸாஹீர், பதுளை.

வன்னிக்குப் பயணம் மேற்கொள்வதற்கு மக்கள்படும் கஷ்டம் வேதனையை ஏற்படுத்தி விட்டதே! என்று தான் தீரும் இந்த இடர்.

—வ. சுந்தரம், மட்டக்குளி.

"காற்றோடு பேசு" சிறுகதை எமது இனத்தின் இளைய தலைமுறையினர் திமர்கைது அவதிகளினால் படும் துயரத்தை நன்கு விளக்கியது.

—ஆ. சிவமணி, கண்டி

பித்தன் பதில்கள் மிகவும் சுவையாக இருக்கின்றன. அதுவும் அந்தப்பதில்களுடன் விளக்கப் படங்களும் தரப்படுவது மேலும் எழில் தருகிறது

— கே. பிரபு, மாத்தறை.

கல்யாணத்துக்கு ஜெர்மனி சென்ற பெண்ணுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி பற்றி "தேரடிஅரட்டை"யில் படித்து வயிறு குலுங்கச் சிரித்தேன்.

— ஏ.ஜோஸப், வவுனியா.

# தொழிற்சங்க வாதிகளுக்கு வயிற்றைக் கலக்குகிறது!

## தொழிலாளர்களை இனியும் ஏமாற்ற முடியாத அளவுக்கு இளைஞர்கள் பணி

மலையகத்தில் வளர்ச்சியடைந்து வரும் நற்பணி மன்றங்கள், அறநெறிப்பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள் என்பன தொழிற்சங்க வாதிகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்து விட்டன.

கிணற்றுத் தவளைகளாகக் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டிருந்த தொழிலாளர்களின் பிள்ளைகள், இந்த தொழிற் சங்கக்கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து அனைவருக்கும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றனர். இதனால் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், உள்ளூர் ஏஜன்டுகளும், தோட்டத் தலைவர்களும், சகாக்களும் இக்கழகங்கள் மற்றும் மன்றங்கள் மீது ஆத்திரம் அடைந்துள்ளனர்

விளையாட்டுத்துறை அமைச்சும், கலாசார அமைச்சும் கிராமங்கள் தோறும் தம்மபாடசாலைகளையும், விளையாட்டுக் கழகங்களையும் அமைத்துள்ளன.

இந்த அடிப்படையில் எல்லாத் தோட்டங்களிலும் அறநெறிப் பாடசாலைகளும், இந்து நற்பணி மன்றங்களும், விளையாட்டுக் கழகங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இவை யாவும் அவ்வப் பிரதேச செயலகங்களில் சட்ட ரீதியகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்பட்ட இந்த அமைப்புகளுக்கு, விளையாட்டு உபகரணங்களையும் நற்பணிமன்ற, அறநெறிப் பாடசாலைகளுக்கான கட்டடங்களையும் அரச செலவில் இலவசமாக அமைத்துக்கொடுக்கின்றன.

இப்படியான அறநெறிப் பாடசாலைகளிலும், நற்பணி மன்றங்களிலும், இப்பகுதியைச் சேர்ந்த அரசாங்க பாடசாலை ஆசிரியர்கள், கோயில் பூசகர்கள், கல்விமான்கள் பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்ட இளைஞர் யுவதிகள் எனப் பலரும் இணைந்து பணியாற்றுகின்றனர். இவர்கள் எந்த விதமான கொடுப்பனவுகளையும் பெறாமல் முற்றிலும் சமூக சேவையாகவே இதனைச் செய்கின்றனர்.

தொழிற்சங்க ரீதியாகவும், ஜாதி—மத வாரியாகவும் பிரித்து வைக்கப்பட்டிருந்தவர்கள் மத்தியில் அறியாமையைப் போக்கி, ஒற்றுமை உணர்வை ஊட்டி வருகின்றனர். சட்ட விரோத மதுபான (கசிப்பு) உற்பத்தி, சூதாட்டம், என்பனவற்றிற்கு எதிராகப் பிரசாரம் செய்கின்றனர்.

விளையாட்டுப் போட்டிகள், சமயபாட பரீட்சைகள், சமயப் பெரியார்களின் விழாக்கள், பொங்கல், தீபாவளி கொண்டாட்டங்கள், மகா சிவராத்திரி, நவராத்திரி பூஜைகள் என்பனவற்றை நடத்தியும், போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசுகளை வழங்கியும் தோட்டச் சிறார்களை ஊக்கப்படுத்தி வருகின்றனர்.

இந்த அமைப்புகளுக்கு கொடைவள்ளல்களும் சமய நிறுவனங்களும், வர்த்தகப் பிரமுகர்களும், மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மற்றும் பரிசுப்பொருட்களையும் வழங்கித் தமது ஆதரவைத் தெரிவிக்கின்றார். இதனால் சமூக உணர்வுடன் பணியாற்றும் இந்த நற்பணி மன்றங்களும் அறநெறிப் பாடசாலைகளும் சமூகத்தில் பெரும் செல்வாக்குப் பெற்று வருகின்றன.

பொதுப் பிரச்சினைகளையும், சில வேளை குடும்பங்களில் ஏற்படும் சிறு சிறு பிரச்சினைகளையும் கூட இந்த நற்பணி மன்றத்தாரின் உதவியுடன் தோட்டத் தொழிலாளர்கள் தீர்த்துக் கொள்கின்றனர். இத்தொழிலாளர்கள் தொழிற் சங்கக் காரியாலயங்களுக்குச் செல்வதைப் படிப்படியாகக் குறைத்துக் கொள்கின்றனர். பொது வைபவங்களிலும் விழாக்களிலும் சங்க வேற்றுமைகளை மறந்து ஒன்றாகக் கலந்து கொள்கின்றனர்.

மலையகக் கண்ணோட்டம்

இதுவரை காலமும் தோட்டத் தொழிலாளர்களைப் பிரித்து வைத்து ஆதாயம் அடைந்து வந்த இந்த தொழிற் சங்க வாதிகளுக்கும், சுவாமி, கோயில் என பொதுச் சொத்தை சுரண்டி வந்த ஆசாமிகளுக்கும் இந்த நற்பணிகள் பாரிய தாக்கம் ஒன்றை ஏற்படுத்தி இருக்கின்றன.

இதனால் வெறுப்படைந்த இவர்கள் சிலகுண்டர்களைத் தம் கைகள் வைத்துக் கொண்டு இந்த நற்பணியில் ஈடுபட்டிருப்பவர்களை அச்சுறுத்தியும் அவர்களது உடைமைகளைச் சேதப்படுத்தியும் வருகின்றனர். இவ்விடயம் தொடர்பாக பொலிஸுக்குப் போனால் அரசியல் வாதிகளின் துணையுடன் தப்பிக் கொள்கின்றனர்.

தோட்டத் தொழிலாளர்கள் நாளுக்கு நாள் நாகரிகம் அடைந்து வருவதையும், கல்வி கலாசாரத்துறையில் முன்னேற்றம் காண்பதையும் புத்தி ஜீவிகளும், பிறரும் வரவேற்கின்றனர். பாராட்டுகின்றனர்.

ஆனால் மலையகத்தைச் சேர்ந்தவர்களே கோடரிக் காம்பு போல் இருந்து இப்படியான நற்காரியங்களுக்கு அரசியல் சாயம் பூசி அவற்றை கொச்சைப்படுத்துகிறார்கள். இது வெறுக்கத்தக்கதும் வேதனைக்குரியதுமாகும். இவர்களை மலையக சமுதாயம் ஒரு போதும் மன்னிக்காது.

இப்படியானவர்களின் முகமூடிகளைக் கிழித்து இவர்களை வெளி உலகிற்கு அடையாளம் காட்ட வேண்டும்.

இவர்களை எண்ணித்தான் புரட்சிக் கவி பாரதி 'நெஞ்சு பொறுக்குதில்லையே – இந்த நிலை கெட்ட மனிதரை நினைத்து விட்டால்'' என்று பாடி வைத்தான். எனவே அறிவும் ஆற்றலும் செயல் ஊக்கமும் உள்ள மலையக இளைய சமுதாயம் தமது சமூக அபிவிருத்திக்காக எவரிடமிருந்து என்ன இடர்வரினும் முன் வைத்த காலைப் பின்வைக்காது.

—இரா. புத்திரசிகமணி

# நவீன கேபிள் கார் சேவை மலையகத்துக்கு வருகிறது

## 120 கார்கள்; 2000 பேருக்கு வேலை; உல்லாசப் பயணிகள் வந்து குவிவர்

மலையகத்தில் பாரிய கேபிள் கார் சேவை. 80 கோபுரங்களுடன் (டவர்) 12 1/2 கிலோ மீற்றர் தூர ஓடு பாதையில் 120 கார்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும். 2000 மலையக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு. மத்திய மாகாண சபைக்கு மேலும் பலகோடி ரூபா வருமானம் அதிகரிக்கும், என்கிறார் இத்திட்டத்தின் நாயகனான அமைச்சர் சச்சிதானந்தன்.

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளைக் கவரவும், உல்லாசப் பிரயாணத்துறையை ஊக்குவிக்கவும் மலையகத்தில் முதன் முறையாக 'கேபிள்கார்' சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு ஆஸ்திரிய அரசாங்கம் முதற் கட்டமாக 99 கோடி ரூபாவை வழங்கி இருக்கிறது.

ஊவா மாகாண சபையின் கால்நடை அபிவிருத்தி, உல்லாசப் பிரயாணத்துறை, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு, இந்து கலாசார அமைச்சர் எஸ்.சச்சிதானந்தன் இதனை சுடர்ஒளிக்குத் தெரிவித்தார்.

அப்புத்தளை தேர்தல் தொகுதியில் இதல்கஸ்ஹின்ன என்ற இடத்தில் இருந்து உடவெரிய தோட்டத்தின் ஊடாக ஒஹியா மலைக்குன்றுவரை 12 1/2 கிலோ மீற்றர் நீளமான ஒரு பாதை அமைக்கப்படவுள்ளது.

இத்திட்டம் ஒரு வருட காலத்தில் பூர்த்தி செய்யப்படும். இதனால் மலையகத்தில் குறிப்பாக அப்புத்தளை ஹல்தமுல்ல பகுதியில் இருக்கும் மலையக இளைஞர்கள் 2000 பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

திட்டம் பூர்த்தி அடைந்தபின் தகுதியும் திறமையும் உள்ள 500 இளைஞர்களுக்கு நிரந்தரமான தொழில் வாய்ப்புகள் வழங்கப்படும். இவர்களுக்கான பயிற்சிகளை ஆஸ்திரிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஆஸ்திரிய பொறியியலாளர்கள் இலவசமாகவே வழங்குவர்.


அமைச்சர் சச்சிதானந்தன்

வெளிநாட்டு உல்லாசப்பயணிகளைப் பெரிதும் கவர்வது மலையகத்தின் இயற்கை எழில் காட்சிகளும், மலைக் குன்றுகளும் நீர்வீழ்ச்சிகளும் தான்.

அப்புத்தளை ஒஹியா மலைக் குன்று இதில் முக்கியத்துவம் பெறுகிறது. உலகின் அந்தம் ("World End") என அழைக்கப்படும் சிகரம் பிரசித்தி பெற்றது. இப்போது அபாயகரமானதும் கரடுமுரடானதுமான காட்டுப் பாதைகளின் வழியாகவே மக்கள் அங்கு செல்கின்றனர். ஒருமுறை சென்று பார்த்தவர் மீண்டும் மீண்டும் போய்ப் பார்க்கத்துடிக்கும் ரம்மியமான சூழல். இதனால் ஆபத்துகளையும் பொருட்படுத்தாமல் உல்லாசப் பிரயாணிகளும் பொதுமக்களும் அங்கு படையெடுக்கின்றனர்.

மேலும் இப்பிரதேசத்துக்கு, விசேடமாக மலையகத்துக்கு உல்லாசப் பிரயாணிகளின் வருகையை அதிகரிக்கும் நோக்கிலேயே கேபிள்கார் சேவை ஆரம்பிக்கப் படவுள்ளது. உல்லாசப் பிரயாணத்துறைகள் அமைச்சின் கோரிக்கையின் பேரில் வனவள பாதுகாப்பு அமைச்சும் சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சும், திட்டமிடல் அமைச்சும் பூர்வாங்க ஆய்வுகளை மேற்கொண்டு இருந்தனர். இப்போது இத்திட்டத்துக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இப்பாரிய திட்டத்தின்படி இதல்கஸ்ஹின்ன குன்றில் இருந்து ஒஹியா மலைக் குன்றுவரை கேபிள்களை இணைக்கும் 80 கோபுரங்கள் (டவர்கள்) அமைக்கப்படும். 12 1/2 கிலோ மீற்றர் தூரமான ஓடு பாதையில் 120 கார்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும். இதன் மூலம் ஊவா மாகாண சபைக்கு மேலும் பலகோடி ரூபா மேலதிக வருமானமாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மலையகத்தில் உருவாக்கப்படும் இப்பாரிய திட்டம் வரவேற்கத்தக்கது. விடாப்பிடியாக நின்று இதற்கு அங்கீகாரம் பெற்ற ஊவா மாகாண அமைச்சர் சச்சிதானந்தன் பாராட்டப்பட வேண்டியவர் தான்.

இங்கு ஒன்றை சுட்டிக் காட்ட வேண்டியது அவசியம். மலையகத்தில் ஒரு திட்டம் (ஆடைத் தொழிற்சாலைகள் உட்பட) ஆரம்பிக்கப்படும் போது மலையகத் தவர்களுக்கும், இப்பிரதேச வாசிகளுக்குமே முன்னுரிமை வழங்கப்படும் என தம்பட்டம் அடிக்கப்படும். ஆனால் திட்டம் செயற்பட ஆரம்பிக்கும் போது எங்கிருந்தோ வந்தவர்களுக்கும், எம்.பி.மாரின் சிபார்சு பெற்றவர்க ளுக்கும் தான் வாய்ப்புகள் வழங்கப் பட்டு வருகின்றன. பல போராட்டங் களின் பின் பிச்சை போடுவது போல் சில மலையக இளைஞர் யுவதிகளுக்கு வேலை வழங்கப்படுகிறது. இது சரித்திர உண்மை. இந்த கேபிள் கார் திட்டம் முற்று முழுதாக தேயிலைத் தோட்டங்களுக்குள்ளேயே செயல் படுத்தப் படவுள்ளது. இம்முறை அமைச்சர் சச்சிதானந்தன் இந்த வாய்ப்பைக் கோட்டை விட்டு விடக் கூடாது.

# திருகோண[மலை]
# ஸ்ரீ பத்திரகாளி அ[ம்மன்]
# ராஜகோபுர கு[ம்பாபிஷேகம்]
ஏழாந்திகதி 7.2.2001 புதன்கிழ[மை]

# கும்பாபிஷேகப் பெருமாட்டி

சம்பந்தருக்கும் ஆதி சங்கரருக்கும் பால் அடிசில் ஊட்டியவள் அவள்.

தன் மறக்கருணையால் ஒரு பெண்ணின் அகங்காரத்தை அழித்தவள் அவள்.

கம்பர் இரவிரவாகப் பாடியதை மாணாக்கர்கள் எழுதிய போது தீவட்டி பிடித்தவள் அவள்.

கௌரி நோன்பு நோற்கும் கன்னியர்க்கு மாங்கல்யம் தருபவள் அவள்.

மகப் பேறு தருபவள் அவள்.

நந்திக்குக் காப்பரிசி தந்தவள் அவள்.

ஒரு ஏழைப் பெண்ணுக்கு இரங்கி தங்கம் சொரிந்தவள் அவள்.

ஊமையைப் பேச வைப்பாள் அவள்.

குரு நமசிவாயர்க்கு சோறு தந்தவள் அவள்.

இவள் தான் கும்பாபிஷேகப் பெருமாட்டி எங்கள் பத்திரகாளி.

அடியார் வேண்டுதலைச் செவி சாய்ப்பவை அவள் செவிகள்.

ஆறாம் பிறை அவள் நெற்றி.

கண்ணனின் போர்வில் அவள் புருவங்கள்.

கரு நீல மலர் அவள் விழி.

உதிரத்தின் நிறத்தைப் பட்டென்று காட்டும் அவள் செவ்விதழ். அடியவர்களின் துன்ப மலைகளைச் சுமப்பவை அவள் தோள்கள்.

தருமத்தைக் காப்பவை அவள் மென் கரங்கள்.

பாலாபிடேகத்தில் ஒளி சிந்தி பக்தர்களைக் காப்பவை அவள் இரு பாதங்கள். இதுவே பத்திரகாளியின் அருட் தோற்றம்.

அம்பாள் உகந்தேறும் ஊர்தி சிங்கம்.

சிங்க வாகனத்தில் காடும் அதிர்ந்திட கர்ச்சிக்கும் பத்திரகாளியே என்று பாடுகிறார் எமது கவிஞர் பெ.பொ.சி.சிவசேகரம். ஆம் சிங்கத்தின் கர்ச்சனைக்கு அப்படி ஒரு ஆற்றல் உண்டு. தனது கர்ச்சனையினால் அனைத்தையும் அடக்கி ஆள்வது அதன் தனித்திறம்.

தன்னை எதிர்க்காத விலங்குகளைத் தாக்காது பசியின்றி வேட்டையாடாது. இத்தகைய நன்னெறியைப் பேணுவது சிங்கம்.

சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்டு ஒரு காடே அதிர்ந்து விடுவது போல் அம்பாளின் குரல் கேட்டு அதர்மம் அழிந்து விடும். சிங்க ஊர்தியில் உலா வந்து அவள் தர்மம் காப்பாள்.

## காவல் தெய்வம் காளி

திருக்கோணமலையில் கோணேசர் ஆலயத்தைச் சூழ்ந்து எல்லைக் காளியம்மன் கோயில்கள் நிறைந்து காணப்படுகின்றன.

திருக்கோணமலை பத்திரகாளி அம்மன், உப்புவெளிக் காளி, பறையன் குளம் எல்லைக் காளி, படுக்கைப் பத்திரகாளி, சம்பூர் பத்திரகாளி, பாலம் போட்டாறு பத்திரகாளி, திருக்கோணமலை மாரியம்மன், தம்பலகாமம் முத்துமாரியம்மன், நிலாவெளி முத்துமாரியம்மன், மாங்கிணாய் மாரியம்மன், சல்லி முத்துமாரியம்மன், கிளிவெட்டி முத்து மாரியம்மன் என்பன கோணேஸ்வரத்தில் உள்ள காளி கோயில்களாகும்.


சோழ மன்னர்கள் இலங்கையில் ஆட்சி செலுத்திய காலத்தில் கோணேஸ்வரத்தில் இவ்வாறு பல எல்லைக் காளிகள் அமைந்ததாகக் கூறப்படுகிறது.

இவ்வாறாக அமைந்துள்ள காளி கோயில்களில் திருக்கோணமலைப் பத்திரகாளி கோயில் முதன்மை பெற்று விளங்குகிறது. வெள்ளம், சூறாவளி, கடல் கோள், கலாசாரப் படையெடுப்பு இன்னோரன்ன அனர்த்தங்கள் நிகழ்ந்த போதும் திருக்கோணமலை மக்கள் தமது தனித்துவம் பேணி வாழ்வதுடன் பாதுகாக்கப்பட்டுமுள்ளனர். இது உண்மையிலே அம்பாளின் அருட் கருணை என்று அவர்கள் நம்புகின்றனர். இதனாலே பத்திரகாளி அம்பாள் எங்கள் காவல் தெய்வமாகிறாள்.

## தெய்வ சங்கல்பம்

இராமேஸ்வரத்தில் வாழ்ந்த ஓர் அந்தணருக்கு ஓர் அசரீரி கேட்டது. "திருக்கோணேஸ்வரம் செல். அங்கே குறிப்பிட்ட ஓர் இடத்தில் தொங்கு செவ்வரத்தை மரம் ஒன்றின் கீழ் ஒரு விக்கிரகம் உண்டு. அதனை எடுத்துப் பூசை செய்" என்பதே அந்த அசரீரி.

அசரீரி சொன்னவாறு பிராமணர் திருக்கோணமலை வந்து கிடங்கினைத் தோண்டியபோது, அங்கே ஒரு செப்புக் கிடாரம் காணப்பட்டது. அக்கிடாரத்தினுள்



ஓர் அம்மன் விக்கிரகம் இருந்தது.

இவற்றை ஆராய்ந்த தொல்பொருளியல் அறிஞர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்.–

"செப்புக் கிடாரத்தினையும் வடிவமைப்பினையும் உலோக வார்ப்பு முறையினையும் அவதானிக்கையில் மிகப் பழைமை வாய்ந்ததொன்றாகவே இக்கிடாரம் காணப்படுகிறது.

காளி அம்மன் விக்கிரகத்துடைய வடிவமைப்பு ஏறத்தாழப் பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் தமிழகக் கோயில்களில் பேணப்பட்ட காளியம்மன் உருவங்களை ஒத்ததாக உள்ளது."

அந்த நாளில் இருந்து இன்று வரை இவ்விக்கிரகம் புனிதமாகப் பேணப்பட்டு வருகிறது. திருவிழாக் காலத்தில் இவ்விக்கிரகம் இன்றும் முதன்மை பெறுவதைக் காண்கிறோம். கிடாரத்தினுள் காணப்பட்ட அம்மன் விக்கிரகமும் அது கண்டெடுக்கப்பட்ட காட்சியும் தத்ரூபமாக கோயில் தேரில் விவரிக்கப் பட்டுள்ளன.

பத்திரகாளி அம்மன் கோயில் தோற்றமே ஒரு தெய்வ சங்கல்பம் அன்றோ!

வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ
சோ. இரவிச்சந்திரக் குருக்கள்



## திருவடிகள்

கறுத்த மேகம் காய்ந்த நிலத்தைத் தேடி, வாடிய பயிர்களை நாடிச் சென்று மழை பெய்வது போல் அம்பாள் தனது பக்தர்களைத் தேடிச் சென்று இன்னருள் புரிவாள். எனவே அவளை நாம் எழில் மாரித்தாய் என்று ஏத்தி மகிழ்கிறோம்.

பக்தர்கள் இறைவனைப் பல்வேறு வகையாகப் பாவனை செய்து வழிபடுவர். தோழனாக, தலைவனாக, ஆண்டானாக, அன்னையாக இப்படிப் பல. இவற்றுள் இறைவியைத் தாயாக வழிபடும் போது இறுக்கமான அன்பு மலர்கிறது. இறைவனிடத்து தாய்–சேய் உறவு மலர்கிறது. இறைவி, பால் நினைந்தூட்டும் தாயாகத் தோன்றுகிறாள். திருக்கோணமலை பத்திரகாளி கோயிலில் பக்தர்களிடையே பயபக்தி உணர்வு பரந்து காணப்படுகிறது.

வறுமையில் வாடும் போது, வாழ்விலே துன்பம் ஏற்படும் போது, எமது முயற்சிகள் தோல்வியைத் தழுவும் போது, நோய் பிணியினால் அவதியுறும் போது நாம் வழிபாட்டில் ஈடுபடுவோம். ஆனால் வாழ்க்கையில் ஏறு நடை போடும் போது, செல்வ வளம் செழித்துக் காணும் போது, இறைவனை மறந்து விடுவது நமது மனித இயல்பு.

துன்பத்தை இறைவனுடன் பகிர விரும்புகிறோம் இன்பத்தை மட்டும் அவனுடன் பகிர்ந்து கொள்ள எமது ஏழை மனம் நாடுவது இல்லை. நலம் பல நல்கியமைக்கு நாம் இறைவனுக்கு நன்றி கூறுகிறோமா? அதுதான் இல்லை.

உண்மையான வழிபாடு கூட சில வேளைகளில் பலனளியாது போகலாம். வழிபாட்டினால் எமது தேவைகள் நிறைவேறத் தவறும் போது நாம் மனச் சோர்வடையக் கூடாது.

அத்தகைய வேளைகளில், அதனை எமது இறை நம்பிக்கைக்கு வந்த சோதனையாக நாம் கருத வேண்டும். இதன் காரணமாக நமது வழிபாட்டில் பின்னடைவு வரக்கூடாது.

வினைப்பயன்படி அனைத்தும் நடைபெறும் என்று தெளிவு பெற வேண்டும். ஆனால் வழிபாடு அவற்றுக்கு முகம் கொடுக்கும் திராணியை நமக்குத் தரும்.

எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேற்செல்லும். அதே வேளை வழிபாட்டின் மூலம் இறையருள் பெற்று அத்துன்பத்தைக் குறைக்கலாம். ஏன் சில வேளைகளில் வழிபாடு மூலம் இறையருள் பெற்றுத் தலையெழுத்தையும் மாற்றலாம். அவன் தாள் பட்டு அழிந்தது என் தலை 'எழுத்தே' என்ற அடியின் மூலம் இதனை நாம் அறியலாம்.

என் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்ற சரணாகதி உணர்வு வழிபாட்டின்போது முதன்மை பெறவேண்டும். வழிபாடு எம்மை இறையுடன் இணைக்கும். மனவுறுதி தரும். எமது உள்ளத்து அழுக்குகளைப் போக்கும். தூய உள்ளம் மலரும். வழிபாடும் தியானமும் சாந்தியைத் தந்து எமக்கு ஆன்மீக ஈடேற்றத்தையும் நல்கும்.

## திருக்குட நீராட்டு விழா

தனி மனிதர்கள் தமது நலனுக்காகச் செய்வது சாந்தி. சமுதாய நலனுக்காக கோயிலில் செய்யப்படுவது பெருஞ்சாந்தி என்றழைக்கப்படும் மகா கும்பாபிஷேகம். இது ஆவர்த்தம், அனாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரிதம் என நான்கு வகைப்படும்.

தீ, மழை, பெருங்காற்று அல்லது புயல், பூகம்பம் ஆகியவற்றில் கோயில் பாதிப்புக்கு உள்ளாகும் வேளையில், அக்கோயிலில் உள்ள விக்கிரகங்களை பிறிதொரு கோயிலில் எழுந்தருளச் செய்வது ஆவர்த்தம்.

கோயிலே இல்லாத போது புதிய கோயில் கட்டி விக்கிரகங்களை ஸ்தாபித்தல் அனாவர்த்தம்.

பழுதடைந்த கோயிலைப் புதுப்பித்து, பூச்சுப் பூசி பெருஞ் சாந்தி செய்தல் புனராவர்த்தம்.

கோயிலில் மரணம் போன்றவை நிகழ, பிராயச்சித்தம் அல்லது கழுவாய் செய்தல் அந்தரிதம் எனப்படும்.



திருக்[…]
சக்தியி[…]
அந்தணர்[…]
மந்திரங்க[…]
சக்தியி[…]

யாகம்[…]
கோயில் மூ[…]
தருகின்ற[…]
உருவாகி[…]
பெறுகின்[…]
மூலமூர்த்[…]
வைக்கப்[…]

கல்[…]
உருவெடு[…]
யாகம், பூ[…]
இம் மூர்த்[…]
வலுவடை[…]

எ[…]
என்[…]

# ாணமலை
# அம்பாள் ஆலயம்
# தும்பாபிஷேகம்

ிழமை காலை 10.00 மணிக்கு

# டி எங்கள் காளி ஆச்சி



கைலாப்பியங்கம் என்பர். விக்கிரகம் அமைக்கப்பட்டதும் குருக்கள்மார் எண்ணெய் சாத்திய பின்னர் அடியார்கள் எண்ணெய் சாத்துவது வழக்கம். அடியார்கள் தத்தம் கரங்களால் எண்ணெய் சாத்தி இன்புறுவர். இதில் பயபக்தியுடன் ஈடுபடும் போது எமது பாவங்களுக்கு விமோசனம் கிடைக்கும்.

திருக்கோணமலை பத்திரகாளி கோயிலின் முதற் திருக்குட முழுக்கு வைபவம் 1933 ஆம் ஆண்டு நடைபெற்றது.

இரண்டாவது திருக்குடமுழுக்கு 1957 ஆம் ஆண்டிலும் மூன்றாவது பெருஞ்சாந்தி 1962 ஆம் ஆண்டிலும் நான்காவது குடமுழுக்கு 1980 இலும் (சித்தார்த்தி வருடம் தை மாதம் 23ஆம் நாள்) பிரம்மஸ்ரீ சோமஸ்கந்த குருக்களின் பெருமுயற்சியால் நடைபெற்றன.

ஐந்தாவது திருக்குட நீராட்டு விழா விக்கிரம ஆண்டு தை மாதம் 25ஆம் நாள் புதன்கிழமை தைப்பூச நன்னாளில் காலை 10 மணி முதல் 11 மணி வரையுள்ள சுப வேளையில் ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்களின் பெரு முயற்சியினால் நடைபெறுகின்றது.

இத்தகைய பெருஞ்சாந்தியைத் தரிசிப்பவர்கள் இம்மையில் சங்கநிதி, பதுமநிதி இரண்டும் பெற்றுத் தரணியை ஆள்வர். பின்னர் வானும் ஆள்வர். நித்தியானந்த பரம சுகத்தையும் பெறுவார்கள் என்பது பெரியோர்களின் துணிபாகும்.

*கும்பாபிடேகப் பெருமாட்டி*
*தென்கைலைக் கோணமலை*
*அம்பாள் திருமேனிக் கெண்ணெய்க்*
*காப்பிட்ட*
*அன்புடையார்*
*தம்பாதந் தொட்டுத்*
*தொழுதாலும்*
*போதுமே*
*தாழ்வினைகள்*
*நம்பா லணுகா*
*வகைசெய்யும் காளி*
*நயனங்களே*

— வே.வரதசுந்தரம்

## தேவி பத்திரகாளி வாழி!

காவலர்கள் கரங்கூப்பி வணங்கிப் போற்றக்
கன்னியர்கள் ஆலாத்தி கைகொண் டேற்றத்
தேவர்களன் போடு புட்ப மாரி பெய்யத்
திசைமுகனு மிந்திரனும் சேவை செய்யக்
காவல் செயு பூதகணாதிபர்கள் யாருங்
காளிபராக் கெனக் கூறிக் களிபுற்றாடப்
பாவலர்கள் புகழ் கோணைப் பதியில் வாழும்
பத்திரகாளி தாயே யாடீருஞ்சல்

அன்னபரி பூரணியே யாடீருஞ்சல்
ஆரணியே காரணியே யாடீருஞ்சல்
பொன்னின் மலர்த் தாளுடையாய் யாடீருஞ்சல்
புவனமெலா மீன்றவளே யாடீருஞ்சல்
மன்னுமட மயிலொயிலா யாடீருஞ்சல்
மயிடனைமுன் வென்றவளே யாடீருஞ்சல்
பன்னரிய திரிகோணைப் பதியில் வாழும்
பத்திரகாளித் தாயே யாடீருஞ்சல்

சீர்வாழி செந்நெல்விளை பழனம் வாழி
தேசமெங்குஞ் சிவமயம் சிறந்து வாழி
ஏர்வாழி யானினங்கள் மல்கிவாழி
எழின்முடி மன்னவர் வாழி இமையோர் வாழி
பார் வாழி திரிகோணை நகரம் வாழி
பகரரிய விபூதி பஞ்சாட்சரமும் வாழி
கார் வாழி மறைவாழி தேவி பத்ர
காளி பத மலரிணைகள் வாழி வாழி

— வே.அகிலேசபிள்ளை



## பராசக்தி பக்தன் பாரதி

பாரதியார் ஒரு விடுதலைக் கவிஞன் என்று புகழ் பூத்தவர். இருப்பினும் அவர் பாடல்களை ஊன்றிப் படிக்குங்கால் எமக்கு அவர் பராசக்தி பக்தனாகவே தோன்றுகிறார்.

அவர் பாடிய அத்தனை பாடல்களுக்கு ஊடாகவும் பராசக்தி பக்தி என்ற உணர்வு பரவக் காண்கிறோம். பராசக்தி பக்தன் என்பதே பாரதியாரின் ஆளுமை. அவர் வீராவேசத்துடன் பராசக்தியை பாடுவது கேட்டு உடல் சிலிர்க்கும் உள்ளம் தூய்மையடையும்.

நல்லதோர் வீணை செய்தே — அதை
நலங்கெடப் புழுதியி லெறிவ துண்டோ?
சொல்லடி சிவசக்தி! — எனைச்
சுடர்மிகு மறிவுடன் படைத்து விட்டாய்
வல்லமை தாராயோ — இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி சிவசக்தி! — நிலச்
சுமையென வாழ்த்திடப் புரிகுவையோ?

## அம்மையைப் பாடிய பாரதிதாசன்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் பாடல்கள் நமது இளைஞர்களைக் கவர்ந்தவை. அப்பாடல்கள் தரும் இன்பம் சொல்லொணாதது. அவரது இனிய பாடல்கள் மக்களிடத்தே புதுமை காணும் புரட்சி உணர்வை ஏற்படுத்தியது. தமிழின் இனிமையை அழகாக வடித்துத் தந்தவர், தமிழின் பால் அன்பினை எமக்கு ஊட்டியவர் புரட்சிக் கவிஞர்.

புரட்சிக் கவிஞர் பாடிய முதற் பாடலே அம்பாள் மீது என்பது எங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்?



திருக்குடமுழுக்கு கோயிலின் அருஞ்
தியினை உறுதி செய்வது.
தணர்கள் ஓதும் மறைமொழியாம்
திரங்கள் ஆலயத்துக்குத் தெய்வீக
தியினைத் தருகின்றன.

யாகங்கள், பூசைகள், கிரியைகள்
யில் மூர்த்திக்குத் தெய்வ சக்தியைத்
கின்றன. தங்கம், வெள்ளியினால்
வாகிய யந்திரத் தகடுகள் அருட் சக்தி
றுகின்றன. பின்னர் அவை
மூர்த்தியின் அடியில்
க்கப்படுகின்றன.

கல்லாய்க் கிடந்து, கலையாக
வெடுத்து, பின்னர் குடமுழுக்கு,
ம், பூசை போன்ற கிரியைகளினால்
மூர்த்தி தெய்வமாக
வடைகின்றது. அருள் சுரக்கின்றது.

### ...ண்ணெய் சாத்துதல்

எண்ணெய்க் காப்பிடுதலை

## உலக அன்னை வழிபாடு

சக்தி வழிபாடுதான் எல்லா வழிபாடுகளுக்கும் முதலில் தோன்றிய தெய்வ வழிபாடாகக் கருத இடமுண்டு. இயற்கைக்கு இறைமைத் தன்மை கற்பிக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே சக்தி வழிபாடும் ஏற்பட்டிருக்கிறது. மனிதன் தனக்கு உண்டி கொடுத்து உயிரளிக்கும் பூமியைத் தெய்வமாகப் — பூமாதேவியாக போற்றி வழிபட்டு வந்திருக்கிறான். பெற்று வளர்க்கும் அன்னையைப் போற்றிவந்த புராதன மக்களிடம் பூமாதேவி வழிபாடு தோன்றியது வியப்புக்குரிய ஒன்றல்ல. பூமாதேவி வழிபாடே சக்தி வழிபாடாக விரிந்து பரவி வந்திருக்கின்றது. அள்ளிவழங்கும் அன்னபூரணியாக — தாய்த்தெய்வமாக — அண்டங்கள் யாவையும் ஈன்று பராமரிக்கும் உலக அன்னை வழிபாடாக சக்தி வழிபாடு இன்று இருக்கிறது.



## ஆசிச் செய்தி

— பிரதிஷ்டா சிரோன்மணி
சாமி விஸ்வநாதக் குருக்கள்

*மண்ணில் புதையுண்டு கிடந்த கிடாரத்தினுள் கண்டெடுக்கப்பட்ட புராதன காளி அம்மன் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்துக்கு உரிய தனிச் சிறப்பு ஆகும்.*

*காளி அம்மனின் சிம்மவாகனமும் கோயிலுக்கு நேரே சமுத்திரக் கரையில் வந்து அடைந்ததும் தெய்வ சங்கல்பமே.*

*இத்தனை சிறப்பு மிக்க ஆலயத்தில் பூஜைகள், விழாக்கள் ஆதியவற்றை நேர்த்தியாக நடத்தியும் ஆலய அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டும் அனைவரது அன்பிற்கும் அபிமானத்துக்கும் மதிப்புக்கும் உரியவராக இருந்தவர் அந்தணர் திலகம் அமரர் பிரம்மஸ்ரீ கு. சோமாஸ்கந்தக் குருக்கள்.*

*அவரின் ஏக வாரிசான அருந்தவப் புதல்வர் பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் இன்று ஆதீன கர்த்தாவாக இருந்து ஆலய வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றி வருகிறார்.*

*அன்னையின் அருளாலும், குருக்களின் பெரு முயற்சியாலும் பக்தகோடிகளின் மனமுவந்த அன்பு ஆதரவினாலும் ஆற்றலும் அனுபவமும் மிக்க சிற்பிகளின் கைவண்ணத்தாலும் கலையம்சம் நிறைந்த கர்ப்பக்கிரகமும் இராஜகோபுரமும் கிடைத்திருக்கின்றன.*

*அன்னையின் பேரருளால் 7.2.2001 இல் தைப்பூச நன்னாளில் கும்பாபிஷேகம் பெருஞ்சாந்தி விழா நடைபெறுகிறது.*

*"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" இந்த அரும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.*

*இதற்கு மூலகாரணரான சிவாச்சாரிய வேதாகம சூடாமணி சோ. இரவிச்சந்திரக் குருக்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் அனைத்து மக்களுக்கும் நல்வாழ்வும், சாந்தி — சமாதானமும் கிடைக்க வேண்டும் என்று ஸ்ரீ பத்திரகாளி அன்னையின் பாதமலர்களைப் பணிந்து இறைஞ்சுகிறேன். அனைவருக்கும் எனது நல்லாசியும் பிரார்த்தனைகளும்.*

# காற்றோடு பேசு

**சுடர் ஒளி சிறுகதை**

பலாலி விமான நிலையத்தில் இருந்து இரத்மலானை விமான நிலையத்தை நோக்கி அந்த விமானம் புறப்படத்தயாராக இருந்தது. எல்லோருமே பரபரப்பானார்கள்.

சிலர் இடுப்புப் பட்டிகளைப் பார்த்து விழித்தார்கள். பலருக்கு "இதுதான் முதல்பயணம்" என்பது அவர்களது முகங்களிலேயே தெரிந்தது. விமானம் மண்ணுக்கு பிரியாவிடை கொடுத்துக்கொண்டது.

உலகம் பூராகவும் பறந்தவர்களுக்குக் கூட இது ஒரு பரபரப்பான புதுவித அனுபவம் தான். "வெளியிலை பாராதையப்பா தலை சுத்தும்" என்று தன் மனைவியைப் பார்த்து மிரட்டியது ஒரு மாறுகரை வேட்டி.

கந்தசஷ்டி கவசம் மனப்பாடம் செய்து கொண்டிருந்தாள் இன்னொரு அம்மணி. பயணிகள் முகங்களில் ஏதோ ஒரு விதமான அமைதி காணப்பட்டது. முன்சீட்டில் இருந்த ஒரு சிறுவன் மட்டும் மிகவும் குதூகலமாகக் காணப்பட்டான்.

இது முதல் பயணமாக இருந்தாலும் எந்தவித பரபரப்பும் இன்றி மிகவும் அமைதியாக இருந்தாள் தாரணி.

***

ஊரில் அந்தக் கோயிலின் முன்றலில் உள்ள வாசிகசாலை மாலைவேளைகளில் மிகவும் கலகலப்பாய் காணப்படும். பல இளைஞர்களுக்கு அதுதான் ஒரு பொழுது போக்கும் இடமும் கூட.

அவ்வப்போது வீதியால் போய்வரும் பெண்களைக் கேலியும் செய்வார்கள். மற்றும்படி இளைஞர்களுக்கே உரிய துடிப்பு, வேகம், விளையாட்டுப் புத்தி என்று எல்லாமே காணப்படும்.

அந்த வீதியால்தான் தினமும் டியூசனுக்கு சைக்கிளில் சென்று வருவாள் தாரணி. அவளும் பலதடவை அந்த இளைஞர்களது கணைகளுக்கு இலக்காகி இருக்கிறாள். அவர்களுக்குள் 'சந்திரன்' கொஞ்சம் வித்தியாசமானவன்.

அன்று ஒரு பெப்ரவரிமாதம் 14ஆம் திகதி. குளக்கரைச் சந்தியில் வந்து திரும்பிக்கொண்டு இருந்த சந்திரன் மீது சற்றுக் கவலையீனமாக வந்த தாரணியின் சைக்கிள் மோதுண்டது. இருவரும் விழுந்தார்கள்.

தன்மீது தவறு என்று தெரிந்தாலும் "கொஞ்சம் கண்ணைத்திறந்து பார்த்து சைக்கிள் ஓடினால் என்ன?" என்று வேறு கேட்டு வைத்தாள். அந்த மோதல் தான் அவர்களுக்கிடையேயான ஒரு ஆரம்பமாக இருந்தது.

அந்தச் சம்பவம் சந்திரனின் கண்களில் இருந்து மறையவே இல்லை. மீண்டும் மீண்டும் தாரணி அவன் சைக்கிளுடன் தெரிந்தாள். ஆனால் அவன் அப்படிப் பேசி இருக்கக்கூடாது என்று மனவருத்தமாகவும் இருந்தது.

எப்பொழுதுமே எங்களுக்கு யாரைப் பிடிக்கவில்லையோ? யாரோடு சண்டை போட்டோமோ? யார் மீது கோபம் கொண்டோமோ? அவர் மீதே இன்னொரு சந்தர்ப்பத்தில் அன்பு வைக்கிற ஒரு அதிசயம் இந்தக் காதல் உலகத்திற்கு மட்டுமே உரியது.

அடுத்தநாள் கந்தசுவாமி கோயில் சந்தியில் அவளுக்காக காத்து நின்றான்.

"தாரணி ஒரு நிமிசம்" என்றான் சைக்கிளின் பிரேக்கைப் பிடித்து இறங்கினாள்.

"ஐயாம் சொறி" நேற்று நடந்த சம்பவத்துக்கு என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ நானாவது கொஞ்சம் பார்த்து வந்திருக்கலாம். ஐயாம் சொறி" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அன்று இரவு தாரணியால் நித்திரை கொள்ள முடியவில்லை. "தவறு என் மீதுதான். சந்திரன் வந்து மன்னிப்புக்கேட்டு இருக்கிறாரே! நான் அப்படிப் பேசி இருக்கவே கூடாது..

அடுத்த நாள் பாலைதுறைவீதிச் சந்தியில் சந்திரன் வந்து கொண்டு இருந்தான்.

"சந்திரன் ஒரு நிமிசம் தவறு என் மீது தான். அன்டைக்கு நான் அப் படிப் பேசியிருக்கக்கூடாது. என்னை நீங்கள்தான் மன்னிக்க வேணும். மனதிலை எதையுமே வைச்சிருக்காதையுங்கோ" என்றாள்.

ஆனால் அன்றில் இருந்து அவளைத்தான் அவன் மனசிலை வைத்திருந்தான்.

அந்த சம்பவத்திற்குப் பிறகு சந்திரனைச் காணும் போதெல்லாம் ஒரு புன்சிரிப்பை உதிர்த்துக் கொள்வாள் தாரணி. அவனுடைய பார்வை! அந்தப்பார்வை ஏதோ ஒரு செய்தியை அவளுக்கு உணர்த்திக் கொண்டு இருந்தது.

"உடலுக்குள் இருந்து கொண்டே உடலை அரிக்கும்புற்று நோயை விடக் கொடியது இந்தக் காதல் நோய்"

இது எப்போது தோன்றியது? எப்போது தொற்றிக்கொண்டது? யாருக்கும் தெரியாது.

"இனிமேலும் ஒருவரையொருவர் ஏமாற்றிக்கொள்வதிலை அர்த்தம் இல்லை" என்ற நிலையில் காதலர் தினத்தில் நேரடியாகவே கேட்டும் விட்டான். அவளும் அதை ஏற்றுக்கொண்டாள்.

சினிமா, பார்க், பீச் என்று சுற்றித் திரிய இது ஒன்றும் நகரத்துக்காதல் அல்ல. கிராமத்துக்காதல். நாகரிகமாகவே நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக, கண்ணும் கண்ணும் வைத்தாற்போல், காதும் காதும் கேட்டால் போல் முன்னேறிக் கொண்டே வந்தது.

ஒவ்வொரு காதலர் தினத்திலும் அவர்கள் ரோஜா பரிமாறிக் கொள்ளமாட்டார்கள். ஆனால், கோயிலுக்குப் போவார்கள் கடவுளை வணங்குவார்கள்.


சந்திரனுடைய கல்வி நிறைவு பெற்று இருந்த போது கொழும்பில் இருந்து நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு ஒன்று வந்து இருந்தது.

"இதோ வருகிறேன்" என்று புறப்பட்டவன்தான் திரும்பி வரவே இல்லை. ஒரு வருடம் ஆகி விட்டது. அவனுடைய ஒரு அண்ணனும் கொஞ்ச நாட் கொழும்பில் அலைந்தார். காசு செலவு செய்ததுதான் மிச்சம். எந்தப் பிரயோசனமும் இல்லை.

***

தனது மணிக்கூட்டைப் பார்த்தாள் தாரணி. நேரம் ஒருமணி. "எவ்வளவு நேரத்திலை கொழும்புக்கு போய்சேருவம்". பக்கத்தில் இருந்தவரிடம் கேட்டாள்.

"ஒ ரு



மணிநேரத்திலை போய் சேர்ந்துவிடுவம் பிள்ளை" என்றார் அந்த நடுத்தர வயதுக்காரர். தன் கைப்பையில் இருந்து ஒரு கடிதத்தை எடுத்துப் பிரித்து படிக்க தொடங்கினாள் தாரணி. ஏதோ சொல்ல முடியாத சோகம் அவள் முகத்தில்.

"ஐயா நீங்கள் புறக்கோட்டை பக்க மாவா போவீர்கள்?"

"ஏன் பிள்ளை"

"என்னை ஒருக்கால் இந்த விலாசத்திலைவிட்டுவிட முடியுமா?" கையில் உள்ள பேப்பரை நீட்டினாள். அந்தப் பேப்பரை வாங்கிப்பார்த்தார். அது ஒரு லொட்ஜின் விலாசம். அவருக்கு ஆச்சரியமாய் இருந்தது.

"தனியாகவா கொழும்புக்கு வாறாய்?"

"ஓம் ஐயா நீங்கள்?"

"நான் இங்கைதான் வேலை செய்யிறன். நீர் ஏதாவது இன்ரவியூக்கா வருகிறீர்?"

"இல்லை"

"அப்படியென்றால் வெளிநாட்டுக்குப் போகப் போகிறீரா?"

"அதொண்டும் இல்லை: தடுப்புக்காவலில் இருக்கிற ஒருத்தரை வெளியிலை கொண்டுவரவேண்டும். அது விசயமாகத்தான் வாறன்." தன் கைக்குட்டையை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அது அவருக்கு தர்மசங்கடமாய் இருந்தது.

"அது சரிபிள்ளை பிடியட்டு இருக்கிறது சகோதரனோ?"

"இல்லை"

"அப்ப வேறை யாராவது சொந்தக்காரரோ?"

"இல்லையய்யா நான் விரும்பி இருக்கிறவர்."

விமானம் ஒரு தடவை குலுங்கியது.

இரண்டாவது தடவையாக ஆச்சரியமாகப் பார்த்தார் அந்தப் பெரியவர். அன்று கணவனுக்காக அரசனிடமே நீதி கேட்டுப் புறப்பட்டாள் கண்ணகி. ஆனால்! இன்றோ காதலனுக்காகவே அரசிடம் நீதி கேட்டுப்புறப்பட்டு விட்டாள் ஒருத்தி. சரித்திரம் மீட்கப்படுகிறது. தாரணியை, அவளுடைய துணிவை அவரால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

மீண்டும் ஒரு தடவை தன் கையில் இருக்கும் கடதாசியை விரித்துப் பார்த்தாள். அது அவளுக்காகவே சந்திரன் எழுதியது.

"சாந்தி
நான் பயங்கரவாதியாம்.
ஒரு வேளை உன்னை நேசித்ததால்
நான் பயங்கரவாதியோ!
காதல் இன்னும் இந்த நாட்டில்
தடை செய்யப்படவில்லையே!
காலம் ஒரு நாள் மாறும் அதுவரை
காற்றோடு பேசு என் கண்மணி.

இவ்வாறு கவிதைவடிவில் எழுதப்பட்டு இருந்தது அந்தக் கடிதம். கண்களில் கண்ணீர் முட்டியது. அவளின் நிலையைப் பார்க்க அந்தப் பெரியவருக்குக் கஷ்டமாக இருந்தது. ஆதரவோடு அழைத்தார் "பிள்ளை கவலைப்படாதை. இப்பெல்லாம் முந்திய மாதிரி இல்லை கைது செய்யப்பட்ட வர்கள் காவலில் வைக்கப்பட்டவர்கள் பற்றி எல்லாம் ஆராய அவையின்ரை பிரச்சினை பற்றி கதைக்கிறதிற்கெல்லாம் தொல்லை தவிர்க்கிறது, அது இது என்றெல்லாம் நிறையவே குழுக்கள் இருக்கு அதாலை வேலை சுலபமாக இருக்கும் என்ன!...." என்றார்.

"அந்த நம்பிக்கையிலைதான் நானும் இருக்கிறன்" என்றபடி கண்களைத் துடைத்துக் கொண்டாள் தாரணி.

விமானத்தின் வேகம் குறையத் தொடங்கியது. தரையை விமானம் முத்தமிட்டபோதுதான் பலருக்கு மூச்சே வந்தது. முகத்தில் ஒரு பிரகாசம். தாரணி குறிப்பிட்ட அந்த லொட்ஜில் அவளைப் பெரியவர் சேர்ப்பித்த போது நேரம் மாலை 4.00 மணி

"பிள்ளை ஒண்டுக்கும் யோசியாதையும். என்னாலை முடிஞ்ச உதவியைச் செய்யிறன்". என்று அவர் கூறியபோது அவளுடைய கண்களில் நன்றி தெரிந்தது. அவளை நினைக்க அந்தப் பெரியவருக்குப் பாவமாய் இருந்தது. ஏதாவது தன்னால் ஆன உதவியைச் செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்:

"பிள்ளை அப்ப நான் வாறன். எதுக்கும் நாளைக்கு வந்து சந்திக்கிறன். எனக்குத் தெரிஞ்ச சட்டத்தரணி ஒருத்தர் இருக்கிறார். அவரைப்போய் சந்திப்பம். நிச்சயமாய் ஏதாவது உதவி செய்வார். நீ தைரியமாய் இரு" என்று கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டார்.

அடுத்த நாட்காலை அந்த விடுதிக்கு வந்தவர் அங்கே ஒலி வாங்கியோடு உட்கார்ந்து இருந்த வரவேற்பாளரிடம் "தம்பி பிள்ளையின்ரை பெயர் தாரணி. நேற்று மாலையிலைதான் புதிதாக இங்கை வந்து சேர்ந்தவ. அந்தப் பிள்ளையை கொஞ்சம் சந்திக்க வேணும்" என்று கேட்டார்.

"ஓம் ஓம் நேற்றுப் பின்னேரம் வந்தவ பெயர் தாரணி அவ உங்களுக்கு வேண்டியவரா?"

"ஓம் ஓம் தம்பி" தலையை அசைத்தார்.

"ராத்திரி இஞ்சை சோதனைக்கு வந்தவர்கள் அந்தப் பிள்ளையை விசாரிக்க வேணும் என்டு சந்தேகத்தின் பேரிலை கூட்டிக்கொண்டு போட்டினம்" லொட்ஜ் வரவேற்பாளர் கூறினார்.

மூன்றாவது தடவையாக அதிர்ச்சிக்குள்ளானார் அந்தப் பெரியவர். ஆனால் விடுதி வழமைபோல் இயங்கிக்கொண்டிருந்தது.

அத்துடன் காதலுக்குத் தடைகள் ஜாதி, மதம் மாத்திரம் அல்ல. பெற்றோரும் அல்லர். பயங்கரவாதத் தடைச்சட்டந்தான் என்பது அதிசயமான ஒரு விடயம்தான்.

கொழும்பு லொட்ஜுகளில் யாழ்ப்பாண அகதிகளுக்குக் குறைவில்லை. அதே நேரத்தில் தொல்லைகளும் அவர்களுக்குக் குறைவில்லை. திடீர் சோதனைகளும் குறைவில்லை. எனவே சந்திரன் – தாரணி போன்றவர்கள் சிறைக்கம்பிகளை எண்ணுவதுதவிர்க்க முடியாதது. இவை லொட்ஜுகளில் சாதாரண நிகழ்ச்சிகள்.

— சு.பரமேஸ்வரம்


# நாட்டின் சுதந்திர தினத்தில் அரசுக்கு எதிரான யாத்திரை

## வடக்கு கிழக்கில் கொடிய போர் தொடர்கிறது

இலங்கை தனது 53ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறது. பலத்த பாதுகாப்பு கட்டுக் காவல்களுடன் பிரதான நிகழ்ச்சி நாடாளுமன்றம் அருகே நடைபெறும். முன்னரைப் போலன்றி பொதுமக்கள் தள்ளியிருந்து பார்க்கும் ஒரு நிகழ்ச்சியாகவே சுதந்திர தினக் கொண்டாட்டம் இப்பொழுது அமைந்துள்ளது.


ஒரு நாட்டின் சாதனைகளை எடை போடும் ஒரு தினமாகவே இத்தினம் அமைவது வழமை. அரசியல், பொருளாதாரத் துறைகளில் ஈட்டிய பெருமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் இந்நாளில் இலங்கையின் கடந்தகால, நிகழ்கால பிரச்சினைகளையே அலசி ஆராய்ந்து பார்க்க முடியும்.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி



யுத்தத்தின் கோரம்: குழந்தைக்குப் பசிக் கொடுமை

இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் தேசபிதா டி.எஸ்.சேனாநாயக தொடங்கி இன்றைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வரை பத்துத் தலைவர்கள் ஆட்சியில் இருந்துள்ளனர். இந்த



எல்லா ஆட்சிகளும் ஒவ்வொரு கால கட்டத்திலும் வெவ்வேறான அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளைச் சந்தித்திருப்பதைக் காண முடியும்.

ஆனால் நாடு முன்னர் காணாத ஒரு புதிய பிரச்சினையை – அதாவது இளைஞர்களின் ஒரு கிளர்ச்சியை முதன் முதலாக 1971ஆம் ஆண்டில் கண்டது. ஜே.வி.பி என்ற மக்கள் விடுதலை முன்னணியின் வழிகாட்டலில் தென்பகுதி இளைஞர்கள் அன்று ஆயுதமேந்தி அரசுக்கு எதிராகப் போராடினர்.

பின்னர் 1974ஆம் ஆண்டளவில் மற்றொரு இளைஞர் கிளர்ச்சி வடபகுதியிலிருந்து ஆரம்பமானது. மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சி அச்சமயம் ஆயுத பலத்தால் அடக்கப்பட்டது. ஆனால் அது மீண்டும் 1987ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெடித்து பெரும் உயிரிழப்புகளின் பின்னர் அடக்கி ஒடுக்கப்பட்டது.

வடபகுதிக் கிளர்ச்சியோ படிப்படியாக வளர்ந்து இன்றைய நிலையை அடைந்துள்ளது. இலங்கை அரசியல் தனது 53 வருட சுதந்திர வரலாற்றில் எதிர்நோக்கும் மிகப் பெரிய சவாலாக இப் போரே இருந்து வருகிறது.

இப் போரால் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அளவே இல்லை. வடக்கு. கிழக்கில் மிகப் பெரும் அகதிகள் பிரச்சினை. வெளிநாடுகளில் பல இலட்சம் இலங்கை அகதிகள், உள்நாட்டில் இடப் பெயர்வுகள், தனி மனித சுதந்திரங்களுக்கு கட்டுப்பாடுகள், "ஒரு பெரும் திறந்த வெளிச் சிறை" என்று யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை சமீப நாட்களில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி சுதந்திரத்தைக் கொண்டாடும் நிலை என்று ஏற்படும்? தெற்கில் கூட அவ்வாறான ஒரு நிலை இல்லாத போது யாரும் இதற்கு ஹேஷ்யம் கூற முடியாது.

அரசுக்கு எதிரான 'பாதயாத்திரை' ஒன்றைப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி கண்டியில் இருந்து சுதந்திர தினத்தன்று ஆரம்பிக்கவிருக்கிறது. 9ஆம் திகதியளவில் பாத யாத்திரை நாடாளுமன்றத்தை வந்தடையத் திட்டமிடப் பட்டுள்ளது.

சுதந்திர தினத்தைக் கொண்டாடும் மனபோக்கு இல்லாத ஒரு நிலை இன்று இருப்பதையே உணர முடிகிறது. சுதந்திர தினத்தைக் கொண்டாடும் நிலை மக்களிடையே தானாக ஏற்படும் போது தான் சுதந்திரம் அர்த்த முள்ளதாக இருக்க முடியும்.



யுத்தத்தால் உயிருக்குப் பயந்து பேரப்பிள்ளைகளுடன் இந்த வயதிலும் இடம் பெயர்வு



யுத்தத்தால் ஏற்பட்ட அகதி வாழ்க்கை


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 01 | | 15 |
| – | | – |
| 09 | | 02 |
| – | | – |
| 1943 | | 2000 |



**அமரர் தம்பிஐயா சண்முகநாதன்**

(மின்மாணி வாசிப்பாளர், இலங்கை மின்சார சபை)

திதி: 04-02-2001

ஆண்டொன்று சென்றாலும் உங்கள்
ஆதரவு இல்லாமல் அலைகின்றோம்
காலம்தான் போனாலும் உங்கள் நினைவு
எம் கண்களை கண்ணீரால் கரைக்கின்றன
எம் கண்கள் இமைப்பதற்குள் – ஆண்டவன்
உனை தன்பாதம் அழைத்ததன் காரணமேதோ!

No.1, AV 3rd Lane,
Ariyalai, Jaffna.

*93 2/9, Peterson Court,
Peterson Lane,
Colombo - 06.*

உம் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

# காலபந்தாட்ட வீரர்களுக்கு ஆயுட்காலத் தடை?

நடுவரைத் தாக்கிய குற்றத்திற்காக 4 கால்பந்தாட்ட வீரர்களுக்கு ஆயுட்காலத் தடை விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது நடைபெற்றுவரும் முதன்மைக் கால்பந்து லீக் சுற்றுப் போட்டியொன்றின்போதே நடுவரைத் தாக்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த 27ஆம் திகதி சுகததாஸ அரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் பிரபல கழகங்களான ரட்ணம், சோன்டர்ஸ் அணிகள் மோதின.

இப்போட்டியின்போது சோன்டர்ஸ் கழக வீரரொருவரின் கையில் பந்துபட்ட போதும் அதற்கு 'ஹேண்ட்போல்' அறிவிக்கப்படவில்லையெனக் கூறி ரட்ணம் கழக வீரர்கள் நடுவரைத் தாக்கமுற்பட்டுள்ளனர். அதனால் அவ்வணியின் வீரர் எம். அமானுல்லாவுக்கு சிவப்பு அட்டை காட்டப்பட்டது.

இதனால் ஆத்திரமுற்ற ரட்ணம் கழக வீரர்களான எம். அமானுல்லா, ஆர். மொஹிதீன், ரி. ஜீவந்த பிரசாத், எம். இஸ்மாயிர் அலி ஆகியோர் நடுவர் ஏ.எம். யாப்பாவை மோசமாகத் தாக்கியுள்ளனர். இதனால் தலையிலும் காலிலும் காயத்திற்குள்ளானர் நடுவர். கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்ட நடுவர் யாப்பாவுக்கு முகத்தில் 6 தையல்கள் போடப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தையடுத்து குறித்த நான்கு வீரர்களுக்கும் தற்காலிக தடை விதிக்கப்பட்டது.

அத்துடன் விசாரணைகளின்பின் இவர்களுக்கு ஆயுட்காலத் தடை விதிக்கப்படலாம் எனவும் கால்பந்தாட்டச் சம்மேளன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

'இம்முறை கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அமைச்சர்களிடம் முறையிட்டாலும் பரவாயில்லை' என ஆசிய கால்பந்தாட்டச் சம்மேளன உபதலைவரும் இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளன நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான மணிலால் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

இது தொடர்பாக பெப்ரவரி 2ஆம் திகதி இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனம் முடிவுவெடுக்கத் தீர்மானித்திருந்தது. அத்துடன் ரட்ணம் கழகத்திற்கு இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றவும் தடைவிதிக்கப்பட்டது. ரட்ணம் கழகம் இத்தொடரில் 18 போட்டிகளில் பங்குபற்றி 10 போட்டிகளில் வெற்றியும், 4 தோல்விகளையும் பெற்றிருந்தது. கு

சிலாபம் பாடசாலையொன்றில் ஆசிரியராகப் பணியாற்றும் நடுவர் ஏ.எம். யாப்பா இலங்கையின் முன்னணி கால்பந்தாட்ட நடுவர்களில் ஒருவராவார். ''அமானுல்லா முதலான வீரர்கள் கால்பந்தாட்ட அரங்கிற்கு வரும் முன்பிருந்தே நான் நடுவராகப் பணியாற்றுகிறேன். எனது 22 வருட கால நடுவர் பணியின் போது இவ்வாறான சம்பவத்திற்கு முகம்கொடுக்க நேர்ந்தது இதுவே முதல் தடவை'' என்று 'சுடர் ஒளி' க்குக் கூறினார் நடுவர் ஏ.எம். யாப்பா.

குற்றஞ்சாட்டப்பட்ட வீரர்களில் ஒருவரான அமானுல்லா இலங்கைத் தேசிய அணியின் முன்னாள் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னணிக் கழக வீரர்களிடமும் ஒழுங்கீனங்கள் அதிகரித்துள்ளன.

ஏற்கனவே ஜாவாலேன் வீரர்கள் இருவருக்கு இதேபோன்ற குற்றத்திற்காகத் தடைவிதிக்கப்பட்டது. சோன்டர்ஸ்-கடற்படை, விமானப்படை -நீர் கொழும்பு யூத் கழகங்களுக்கிடையிலான போட்டிகள் ஏற்கனவே கைவிடப்பட்டன.

சோன்டர்ஸ் கழகத்தின் பயிற்றுனர் பி.டி. சிறிசேன இலங்கை அணியின் முன்னாள் பயிற்றுனர் ஆவார். தற்போது இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தொழில் நுட்பக் குழு இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர்கூட தனது மகன் மஞ்சுள சிறிசேனவுக்கு எதிராக அளித்த தீர்ப்பொன்றின் காரணமாக நடுவரை அச்சுறுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சோன்டாஸ், ஜுபிட்டர்ஸ், ஜாவாலேன் ஆகிய கழகங்களிடம் அவற்றின் சில நடத்தைகள் தொடர்பாக விளக்கம் கோரப்பட்டுள்ளது.



# ஆறு நாடுகளில் சுசந்திகா ஓடுகிறார்

இம்மாதம் ஏழு சர்வதேசப் போட்டிகளில் சுசந்திகா ஜயசிங்க பங்குபற்றவுள்ளார்.

கடந்த செப்டெம்பரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் பெற்றதன் பின்னர் சர்வதேசப் போட்டிகளில் சுசந்திகா பங்குபற்றுவது இதுவே முதல்தடவையாகும்.

பெப்ரவரி 4- 25 வரை 6 நாடுகளில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதில் பிரான்ஸில் 200 மீற்றர் ஓட்டத்தில் அவர் பங்கேற்பார். ஏனைய 6 போட்டிகளும் 60 மீற்றர் ஓட்டப்போட்டியாகும்.

கடந்த 31ஆம்திகதி இலங்கையிலிருந்து புறப்பட்ட சுசந்திகா பெப்ரவரி 27ஆம் திகதி மீண்டும் தாயகம் திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுசந்திகா பங்கேற்கவுள்ள போட்டிகளின் விபரம் பின்வருமாறு முறையே திகதி, போட்டி நடைபெறும் நாடு, நகரம்:

பெப். 4: ஜேர்மனி -ஸ்டுட்காட்
11: ஜேர்மனி -டோட்மன்
15: சுவீடன் -ஸ்டொக்ஹோம்
18: இங்கிலாந்து -பர்மிங்ஹம்
21: கிரீஸ்- ஏதென்ஸ்
23: பெல்ஜியம் -கென்ட்
25: பிரான்ஸ் -லீவிங்

# விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# அபராதமாக எதிரணிக்கு ஐந்து ஓட்டங்கள் அமுல்

கிரிக்கெட்டில் அபராதமாக எதிரணிக்கு ஐந்து ஓட்டங்கள் வழங்கப்பட்ட சம்பவம் 24ஆம் திகதி சிட்னியில் இடம்பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் கார்ல்ட்டன் அன்ட் யுனைட்டட் முக்கோணத் தொடரில் ஸிம்பாப்வே, மேற்கிந்திய அணிகளுக்கிடையிலான போட்டியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது. மேற்கிந்திய விக்கட் காப்பாளர் ரிட்லி ஜேக்கப்ஸ் பிடியொன்றை எடுப்பதற்காகத் தாவிய போது அவரது தொப்பி பந்தின் மீது விழுந்து விட்டது. இதனால் ஸிம்பாப்வே அணிக்கு 5 ஓட்டங்கள் வழங்கப்பட்டன.

கிரிக்கெட்டில் சில நிகழ்வுகளுக்கு அபராதமாக எதிரணிக்கு ஐந்து ஓட்டங்கள் வழங்கும் விதிகள் கடந்த அக்டோபரில் அறிமுகப்படுத்தப்பட்டமை தெரிந்ததே.

இவ்விதியின்படி தண்டனை ஓட்டங் கள் வழங்கப்பட்ட முதலாவது சர்வதேச போட்டி இதுவாகும்.

அண்மையில் நடைபெற்ற ஆஸி. மேற்கிந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியின் போதும் இத்தகைய தண்டனை ஓட்டங்கள் வழங்கப்பட வாய்ப்பிருந்தது.

அடிலெய்ட்டில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விக்கட் காப்பாளர் அடம் கில்கிறிஸ்ட்டுக்கு பின்னால் வைக்கப்பட்டிருந்த ஹெல்மட் ஒன்றின் மீது பந்துமோதியது. இதன்படி மேற்கிந்திய அணிக்கு 5 ஓட்டங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தவறுதலாக அதற்கு 'பை ரன்' மட்டுமே வழங்கினார் நடுவர்.

ஸிம்பாப்வேயுடனான போட்டியில் குறித்த பந்தை ஜேக்கப்ஸ் பிடித்திருந்தால் அது புதிய உலக சாதனையொன்றுக்கு சமனாக இருந்திருக்கும். இப்போட்டியில்அவர் 5 பிடிகளைப் பிடித்திருந்தார்.

ஆறவாது பிடிக்காகத் தாவிய போதே பந்தின்மீது தொப்பி விழுந்தது. டெஸ்ட் போட்டியில் 7 பிடிகளை எடுத்து உலக சாதனையைச் சமப்படுத்தியவர் ஜேக்கப்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

# நோபல் பரிசுக்கு கால்பந்தாட்டம் சிபாரிசு

கால்பந்தாட்டத்திற்கு நோபல் சமாதானப் பரிசு வழங்குமாறு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

சுவீடன் அரசியல் பிரமுகரான லார்ஸ் குஸ்டாஃப்ஸன் நோபல் பரிசுக் குழுவினருக்கு இச்சிபாரிசை அனுப்பியுள்ளார்.

சர்வதேச ரீதியாக நாடுகளுக்கிடையிலான புரிந்துணர்வையும் நல்லுறவையும் வளர்க்க கால்பந்தாட்டம் உதவுவதால் இவ்விளையாட்டு நோபல் சமாதானப் பரிசுக்குத் தகுதியானது என அவர் தெரிவித்துள்ளார்.


கடந்த வருடம் கால்பந்தாட்ட அரங்குகளில் ஏற்பட்ட சனநெரிசல், ரசிகர்களுக்கிடையிலான கலகங்கள் காரணமாக பத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஆனாலும் நோர்வேயிலுள்ள நோபல் பரிசுத் தேர்வுக் குழுவினருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் ''சர்வதேச உறவுகளை வளர்ப்பதில் கால்பந்தாட்டம் முக்கிய பங்கு வகித்து வந்துள்ளது. இனியும் அது தொடரும்.

வேறு துறைகளில் பரஸ்பரம் மோசமான உறவுகளைக் கொண்டுள்ள நாடுகளும் கால்பந்தாட்டப் போட்டிகளில் விளையாடியுள்ளன. 1998 உலகக்கிண்ணப் போட்டிகளில் அமெரிக்காவும் ஈரானும் ஒரே போட்டியில் விளையாடியமை குறிப்பிடத்தக்கது'' எனத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கால்பந்தாட்டச் சங்கங்களின் சம்மேளனம் கால்பந்தாட்டத்தின் சார்பில் இவ்விருதைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வருட நோபல் சமாதானப் பரிசுக்கான சிபாரிசுகளை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினம் பெப்ரவரி 1ஆம் திகதி முடிவடைந்தது. கடந்த வருடம் சமாதானத்திற்கான நோபல் பரிசுக்கு சுமார் 150 சிபாரிசுகள் அனுப்பப்பட்டன. தென்கொரிய ஜனாதிபதி கிம் டே-ஜுங்கிற்கு இப் பரிசு கிடைத்தது.

# சஹாரா கிண்ணம் யூகோஸ்லாவியாவுக்கு



வெற்றிக் கிண்ணத்துடன் யூகோஸ்லாவிய வீராகள்

இந்தியாவில் நடைபெற்ற சஹாரா மில்லேனியம் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டியில் யூகோஸ்லாவியா அணி சாம்பியனாகியது.

கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற இறுதிப்போட்டியில் பொஸ்னியா ஹேர்ஸகோவினா அணியை 2-0 விகிதத்தில் யூகோஸ்லாவியா அணி வெற்றிகொண்டது.

இரு வருடங்களுக்கு முன்புவரை யூகோஸ்லாவிய நாட்டின் ஒரு பகுதியாக பொஸ்னியா இருந்தமை குறிப்பிடத்தக்கது.

யூகோஸ்லாவிய அணி காலிறுதியில் ருமேனியாவையும் அரையிறுதியில் ஜப்பானையும் வெற்றி கொண்டது.

பொஸ்னிய அணி காலிறுதியில் உருகுவே அணியையும் அரையிறுதியில் சிலி அணியையும் வெற்றி கொண்டது. ஜோர்டான், ஐஸ்லாந்து அணிகளும் காலிறுதியில் முறையே ஜப்பான், சிலி அணிகளை எதிர்த்தாடின.

இந்தியாவில் நடைபெற்ற மிகப் பெரிய சர்வதேச கால்பந்தாட்டப் போட்டி இதுவே. ஆனால் 16 அணிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் இறுதி நேரத்தில் ஈராக், கெமரூன் அணிகள் போட்டியிலிருந்து வாபஸ் பெற்றுக்கொண்டன.

இந்தோனேஷிய அணியே முதலில் இந்தியாவுக்கு வந்தது. ஆனால் அவ்வணியில் 7 வெளிநாட்டு வீரர்களும் இடம்பெற்றிருந்தனர். அதை போட்டி ஏற்பாட்டாளர்கள் ஆட்சேபித்தபோது குறித்த வீரர்களை விலக்கமறுத்து இந்தோனேஷிய அணி திரும்பிச் சென்றது.

இதனால் போட்டிகளின் எண்ணிக்கை குறைவடைந்ததன் காரணமாக போட்டி ஏற்பாட்டாளர்களுக்கு 18 கோடி இந்திய ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மூன்றாம், நான்காம் இடங்களுக்குரிய அணிகளைத் தெரிவுசெய்யும் போட்டியும் நிதிவசதியின்மையால் ரத்துச்செய்யப்பட்டது.

# கிரிக்கெட் ரசிகர்களுக்கு நடமாடும் கழிவறைகள்

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டிகளைப் பார்வையிட 5000க்கும் மேற்பட்ட வெளிநாட்டு ரசிகர்கள் இலங்கை வரவுள்ளனர்.

இவர்களுக்குத் தேவையானளவு நவீன கழிவறைகளை சகல அரங்குகளிலும் உடனடியாக அமைக்க முடியாததால் நடமாடும் கழிவறைகளை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சகல வசதிகளும் அடங்கிய 20க்கும் மேற்பட்ட நடமாடும் கழிவறைகள் போட்டி நடைபெறும் அரங்குகளுக்கு சமீபமாக வைக்கப்படவுள்ளன.

கடந்த 31ஆம் திகதி இங்கிலாந்து அணி இலங்கைக்கு வந்தது. இலங்கை அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டி பெப்ரவரி 22ஆம் திகதி காலியில் நடைபெறவுள்ளது. இதே வேளை கண்டியில் நடைபெறவுள்ள மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான பிரதான அரங்கிலுள்ள 1000 ஆசனங்களும் பதிவு செய்யப்பட்டுவிட்டன.

இதில் ஒரு ஆசனத்திற்குரிய கட்டணம் நாளொன்றுக்கு 1250 ரூபாவாகும். போட்டியின் 5 நாட்களுக்குமுரிய டிக்கட்டுகளும் ஏற்கனவே விற்கப்பட்டுவிட்டன.

வெளிநாட்டு ரசிகர்களைக் கருத்திற்கொண்டு குளிரூட்டி வசதி தொலைக்காட்சி, 'இயர்போன்கள்', ஐரோப்பிய உணவுவகைகள் ஆகிய வற்றிற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# மட்டக்களப்பில் அருகருகே அரசு, புலிகள் நிர்வாகங்கள்

மட்டக்களப்பில் அருகருகே இரண்டு நிர்வாகங்கள் நடைபெற்று வருகின்றன.

ஒன்று அரசின் நிர்வாகம், மற்றது புலிகளின் நிர்வாகம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுவிக்கப்பட்ட பிரதேசம், விடுவிக்கப்படாத பிரதேசம் என்று இரண்டு பிரதேசங்கள் உள்ளன.

எழுவான்கரைப் பிரதேசம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.



சமாதானப் பிரார்த்தனையில் பௌத்த, கிறிஸ்தவ குருமார்

இங்கேநாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைய அரசாங்க நிர்வாகம் நடைபெற்று வருகிறது.

படுவான்கரைப் பிரதேசம் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்கே அனைத்துச் செயற்பாடுகளும் புலிகளின் கண்காணிப்பிலேயே நடைபெறுகின்றன.

இப்பிரதேசத்தில் உள்ள மக்களின் பிரச்சினைகள் புலிகளின் காவல் துறையூடாகவும், அவர்களின் நீதி மன்றம் மூலமும் தீர்க்கப்பட்டு வந்தன. ஆனால் சுமார் இரண்டுவருடங்களாக காவல்துறையும், நீதி மன்றமும் இயங்கவில்லை.

தற்போது இங்கே "நியாய நடுவர் சபை" ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சபையில் உள்ளவர்கள் அப்பகுதி மக்களால் தெரிவு செய்யப்படுகின்றனர். விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினரால் நியாய நடுவர் சபையினருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

அண்மையில் நியாய நடுவர் சபையினரின் பதவியேற்கும் நிகழ்வு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் தலைமைச் செயலகம் அமைந்துள்ள கரடியனாற்றில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட விடுதலைப்புலிகளின் சிறப்புத் தளபதி ரமேஷ், மாவட்டத் தளபதி நாகேஷ் ஆகியோரின் முன்னிலையில் நியாய நடுவர் சபை உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் எடுத்துத் தமது உத்தியோகபூர்வ பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் நிஷாம் தலைமையில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு நிர்வாகங்களுக்கும் முகம் கொடுத்தே இங்குள்ள மக்களும் அரச திணைக்கள கூட்டுத்தாபன அதிகாரிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் கடமைகளைச் செய்ய வேண்டிய நிலையுள்ளது.

## சமாதானத்துக்குப் பிரார்த்தனை

யுத்தத்தை நிறுத்துங்கள், சமாதானப் பேச்சை ஆரம்பியுங்கள் என்று வற்புறுத்தி மட்டக்களப்பு புனிதசாணிக்கை மாதா ஆலயவளவில் சமாதானப் பிரார்த்தனை சமீபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு சர்வமதங்களுக்கிடையிலான அமைப்பு இந்த சமாதானப் பிரார்த்தனையை ஏற்பாடு செய்திருந்தது.

மட்டக்களப்புப் பகுதியில் உள்ள கிறிஸ்தவ பாதிரிமாரும் கொழும்பிலிருந்து வந்த சில பௌத்த பிக்குகளும், பௌத்தர்களும், மட்டக்களப்பு இந்து மன்றங்களைச் சேர்ந்த சிலரும் பாடசாலை மாணவ மாணவிகளும் பிரார்த்தனையில் கலந்து கொண்டனர்.

பிரார்த்தனையின் போது வண. கந்தேரத்ன சார மகாதேரர் உரை நிகழ்த்துகையில் பின்வருமாறு கூறினார்:-

பெரும்பான்மையினருக்குள்ள உரிமைகள் சிறுபான்மையினருக்கும் இருக்கவேண்டும்.

எமக்குள் ஒற்றுமை இல்லாததினால் நாடு இன்று பாரிய பிரச்சினையை எதிர் நோக்கியுள்ளது. தமிழ், முஸ்லிம், சிங்களவர்களாகிய நாம் முற்காலத்தில் ஒற்றுமையாகவே வாழ்ந்திருக்கிறோம்.

இனங்கள் வேறுபட்டாலும் மனிதர்களிடையே உடல் ரீதியில் வேறுபாடுகள் இல்லை.

பௌத்தர்கள் மனிதரில் மனிதத்தைக் காண வேண்டும்.

இந்தப் பூமி தனியொருவருக்குச் சொந்தமானதல்ல.

தெற்கில் வாழ்பவர்கள் இனத்துவேஷிகள் என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் தெற்கில் வாழும் பௌத்த பிக்குகளாகிய நாம் விரும்புவது எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதைத்தான். இப்படி அவர் கூறினார்.

மட்டக்களப்பு திருமலை மாவட்டங்களுக்குப் பொறுப்பான ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை பேசுகையில் பின்வருமாறு கூறினார்:-

"வடக்குக்கிழக்கில் எப்போது சமாதானம் வரும் என்று பெரும்பான்மை மக்கள் ஆவலாக இருக்கிறார்கள். பெரும்பான்மை மக்கள் அனைத்து மதங்களைச் சேர்ந்தவர்களும் ஒருமித்துக்கூடியிருப்பது வரவேற்கத்தக்கது. நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அனைவரும் பாடுபட வேண்டும். இன்று என்றுமில்லாதவாறு மக்களுக்கு சமாதான தாகம் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது" இப்படி அவர் கூறினார்.

ஜே சுசபையின் பிதா ஜோசப்மேரியும், மற்றும் சிலரும் உரையாற்றினர்.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும் அமைதி, சமாதானம் வேண்டிப் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களின் தலைமை ஒன்றியத்தினால் பிரார்த்தனையோடு விசேட அபிஷேகம், பூசை, பொதுக்கூட்டம் ஆகியவைவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

ஆலயத்தின் பிரதமகுருக்கள் சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்தக்குருக்கள் தலைமையில் இவை இடம்பெற்றன.

சுமார் 2000 க்கு மேற்பட்ட பொதுமக்கள் இந் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

## பாடசாலை விழா.

மட்டக்களப்பு கல்லடி உப்போடை விவேகானந்த மகளிர் மகா வித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவுவிழா கல்லூரி அதிபர் ச. தர்மராஜன் தலைமையில் புது முறையில் இடம் பெற்றது. கல்லடி உப்போடை மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் ஆரம்பித்த ஊர்வலம் புதுமையாக இருந்தது.

ஒளிபெருக்கி பூட்டப்பட்ட ஆட்டோ முன்னே செல்ல, மாணவிகள் துவிச்சக்கர வண்டி அணி, பேண்ட் வாத்திய அணி, மாணவத் தலைவிகளின் அணி, கனிஷ்ட மாணவர்கள் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் துறவிகளைப் போல் உடை அணிந்தவர்களின் அணி, தமிழ்ப்பாரம்பரிய உடை அணி, மலர் மாலை நடனம், குடை நடனம், ஆசிரியர்கள் பவனி முதலானவை பின் தொடர்ந்து பாடசாலை வளாகத்தைச் சென்றடைந்தன.

இவ்விழாவில் சிறப்பு அதிதியாக கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணானந்த ஜீ மகராஜ் வருகை தந்திருந்தார்.

கௌரவ அதிதியாக பிராந்திய ஆணையாளர், கே.தியாகராசா, வலயக்கல்விப் பணிப்பாளர் ஆர். மாணிக்கராஜா ஆகியோர் சமுகம் தந்திருந்தனர். இப்பாடசாலை விழாவினையொட்டி மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய சுமார் 40 பாடசாலைகளுக்கு முதலுதவிச் சிகிச்சைப் பெட்டி அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இப்பாடசாலை நினைவுச் சின்னங்கள் சுமார் 25 பிரமுகர்களுக்கு வழங்கப்பட்டன. பாடசாலைக் கட்டடங்களை அன்பளிப்பு செய்தவர்கள், பாடசாலைக்கு உதவிகளைச் செய்தவர்கள், பத்திரிகையாளர்கள் எனப் பல்வேறுபட்டவர்கள் நினைவுச்



மாணவ மாணவிகளின் சமாதானப் பிரார்த்தனை

சின்னங்களைப்பெற்றனர்.

90ஆவது ஆண்டு சிறப்பு மலராக "விவேகா" எனும் பெயரில் மலர் வெளியீடும் இடம் பெற்றது.

இவ்விழா விளையாட்டு பாடசாலை மாணவிகளே தொகுத்து வழங்கியமை ஒரு சிறப்பம்சமாகும். விழாவினைப் பார்த்து ரசித்தவர்களுக்கு அலுப்புத்தட்டாத விதத்தில் மாணவிகளின் பாட்டு, குழு நடனம், தனிநடனம் என்பவைகளும் அமைந்து, மிகவும் திறம்பட இருந்தமை குறிப்பிடத்தக்கது.

விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு மட்டக்களப்புப் பாரம்பரிய சைவ உணவு வாழை இலையில் தயிர், சோறுடன் வழங்கப்பட்டு நிகழ்வுகள் இனிது முடிவுற்றன.

## வாகரையில் பேரணி

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசு யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என்று கோரி தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வாகரையில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

பெருந்திரளானோர் பேரணியில் கலந்து கொண்டனர். பெருமழை பெய்த போதும் குடைகளைப் பிடிக்காமல் எல்லோரும் முழுமையாக நனைந்து சென்றமை பார்ப்போர் மனதில் உணர்வுகளைத் தூண்டியது.

வாகரை வெருகலில் இருந்து ஓர் ஊர்வலமும் பனிச்சங்கேணியில் இருந்து இன்னோர் ஊர்வலமும் இடம் பெற்றன. இரண்டு ஊர்வலங்களிலும் சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## சட்டம் இல்லாத ஊரடங்கு

மட்டக்களப்பில் ஊரடங்குச் சட்டம் இல்லை.

பயமின்றி மக்கள் பிரயாணம் செய்யலாம்.

பாதுகாப்புப்படையினர் மக்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருகின்றனர்

மக்கள் இரவில் வீட்டிற்குள் முடங்கிக்கிடக்கத் தேவையில்லை.

இப்படிக் கூறியவர் வேறுயாருமல்லர். மட்டக்களப்பு இராணுவக் கட்டளை அதிகாரி கேணல் அன்ரனிஸ் தான்.

இணைப்பதிகாரி கூறிய விடயங்கள் ஆச்சரியம் அளிப்பவையாக இருக்கின்றன. ஏனெனில்

மட்டக்களப்பில் ஊரடங்குச் சட்டம் உண்மையில் இல்லைத்தான். ஆனால் இரவு நேரங்களில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குச் செல்லும்பாதை (சிறைச்சாலைக்கு அண்மையில்) இரவு 7 மணிக்கு மூடப்படுகின்றது.

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குட்பட்ட பிள்ளையாரடிப் பாதை இரவு 8 மணிக்கு மூடப்படுகிறது.

மட்டக்களப்பு திருமலை வீதி, பஸ்டிப்போ வீதி, பொலிஸ் நிலைய முன் பிரதான வீதிகள் யாவும் 7 மணிக்கு அடைக்கப்பட்டிருக்கும்.

ஆரையம்பதி, கல்லடி வீதிகளும் முட்கம்பி போடப்பட்டு மின்சார வயர் இணைப்புக் கொடுக்கப்படும்.

தினமும் மட்டக்களப்பு இரவு வேளைகளில் இப்படி இருக்கும் போது எப்படி மக்கள் சுதந்திரமாக நடமாட முடியும்?.

கடந்த வருடம் அரிக்கன் லாம்புடன் ஆறுமுகத்தான் குடியிருப்பில் வைத்தியசாலைக்குச் சென்றவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆட்டோவில் கூட மட்டுநகரில் இரவு வேளைகளில் பிரயாணம் செய்ய முடியாது. அதற்கு அனுமதி இன்னும் இல்லை.

– நேரன்

# டீன்-ஏஜ் பிள்ளைகள் மீது தேவை அதிக சிரத்தை

டீன்-ஏஜ் பருவத்தில் உள்ள பிள்ளைகளைப் பராமரிப்பதில் பெற்றோர் அதிக சிரத்தை எடுப்பது அவசியம்.

இந்த அரும்புகள் பருவத்தை "ஓர் அமைதியற்ற சிக்கல்கள் நிறைந்த பருவம்" என "ஸ்டான்லி ஹால்" என்ற உளவியலறிஞர் கூறியுள்ளார்.

இப்பருவத்தில் உடல் வளர்ச்சி மிக வேகமாக நடைபெறுகின்றது. உடல் உறுப்புகளில் வளர்ச்சி ஏற்பட்டாலும், அவற்றிடையே ஒருங்கிணைந்த வளர்ச்சி இல்லாததால் அவை ஒன்று பட்டுச் செயற்படுவதில் தடுமாற்றங்கள் ஏற்படுகின்றன. இப்பருவத்தில் உள்ளவர்களின் செயற்பாடுகளில் தடுமாற்றம் ஏற்படுவதற்கும் இதுவே காரணம்.

இப்பருவத்தில் உள்ளவர்கள் தமது ஆடை, அணிகலன்களில் அதிக அக்கறை காட்டி மணிக்கணக்கில் நேரத்தைச் செலவிடுகின்றனர்.

காதல் உணர்வு இவர்களுடைய மனதில் இயற்கையாகவே தோன்றுகின்றது.

இவர்களுடைய மனதில் மகிழ்ச்சி - துயரம், ஆக்கிரமிக்கும் இயல்பு, கோழைத்தனம் உற்சாகம் - ஊக்கமின்மை போன்ற பல எண்ணங்கள் மாறி, மாறி ஏற்படும்.

இதனைப் பெற்றோர்கள் உணர்ந்து அவர்களை உரிய முறையில் வழி நடத்த வேண்டுமேயன்றிக் கடுமையாகக் கூறி அவர்களின் நடத்தையை மேலும் சிக்கலாக்கி விடக்கூடாது.

உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் இப்பருவத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு உரிய மதிப்புக் கொடுங்கள்.



அதிகாரமுள்ள பெற்றோர்களாக இருக்காமல் நட்புடனும், அரவணைப்புடனும், சந்தேகம் கொள்ளாத பண்புடனும் பிள்ளைகளுக்கு மாற்றங்கள் குறித்துப் புரிய வையுங்கள்.

பாலியல் தொடர்பான விடயங்களைப் பிள்ளைகளுக்கு விளங்க வைக்க அவர்களுக்கு பாலியல் கல்வி (Sex Education) அளியுங்கள்.

அவர்கள் செய்கின்ற நல்ல செயல்களை மனம் திறந்து பாராட்டி ஊக்கமளியுங்கள். அதேசமயம் அவர்களின் தவறுகளையும் கண்டியுங்கள். அவர்களுடைய தவறான செயற்பாடுகள் மற்றவர்களை எந்தளவிற்குப் பாதிக்கின்றது என்பதை அவர்களுக்கு உணர்த்துங்கள்.

அவர்களுக்கு ஈடுபாடுள்ள துறைகளில் அவர்கள் ஈடுபட ஊக்கமளியுங்கள். குடும்பப் பிரச்சினைகளை பிள்ளைகளிடம் மறைக்க வேண்டாம். அவர்களுடன் கலந்தாலோசித்தால் அது அவர்களுக்கு தன்னம்பிக்கையை ஊட்டுவதோடு பெற்றோர்கள் மீது மதிப்பையும் ஏற்படுத்தும்.

பெற்றோர்களின் அறிவுரையை விட அவர்களது செயல்களையே பிள்ளைகள் அவதானிப்பதால் எல்லா விடயங்களிலும் நீங்கள் எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும்.

இப்பருவத்தில் பிள்ளைகளுடன் சேர்ந்திருக்கும் நேரம் பொன்னானது என்ற எண்ணம் எப்போதும் உங்கள் மனதில் இருக்க வேண்டும்.

எனவே பெற்றோர்களே தகுந்த கண்காணிப்புடன் பிள்ளைகளது சுதந்திரமான செயற்பாட்டை உறுதி செய்யுங்கள்.

# உடலுக்கு எண்ணெய் என்ன செய்து விடும்?

உணவு சமைக்கும் போது அதிகமாக எண்ணெய்யைச் சேர்க்கக் கூடாது என்பதை அடிக்கடி கேட்டிருப்பீர்கள்.

எண்ணெய் உணவுகள் தொடர்பான சில தவறான கருத்துக்களும் அவற்றிற்கான சரியான விளக்கங்களும் இதோ:—

* எண்ணெய் உள்ள உணவுகள் உடலைப் பருக்கச் செய்யும். கொழுப்புச் சத்து அதிகரித்து இருதய நோயை ஏற்படுத்தும். மிக அதிகமாக எண்ணெயைப் பாவித்தால் மட்டுமே உடல் பருக்கும். மாமிச வகைகளில் கொலஸ்ரோல் சதவீதம் அதிகம். ஆய்வுகளின் படி மீன் எண்ணெய் இருதய கோளாறுகளுக்குத் தடுப்பு மருந்தாகப் பயன்படக் கூடியது.
* ஓரளவு கொழுப்புச் சத்து கட்டாயம் உடலுக்குத் தேவை. அப்போதுதான் உயிர்சத்துக்களான A.D.E.K ஆகியவை உடலுக்குள் உறிஞ்சப்படும்.
* குடற் புண் உள்ளவர்கள் எண்ணெய் உள்ள உணவுகளை உண்ணக் கூடாது. வயிற்றில் உணவுகள் சமிபாடடைவதைத் துரிதப்படுத்தவும், கஸ்ட்ரிக் அமிலம் வயிற்றின் சுவர்களைத் தாக்காமல் இருக்கவும் எண்ணெய் உதவுகிறது.



பிரதீபா — பசீனா

## பெண்

# படுக்கையில் வீழ்ந்து விட்ட முதியோர் பராமரிப்பு

படுக்கையில் வீழ்ந்த முதியவர்களை மிகவும் அவதானமாகப் பராமரிக்க வேண்டும். ஏனெனில் இவர்களை அதிகம் தாக்கும் பிரச்சினை படுக்கைப் புண் (Pressure Sore) ஆகும்.

உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ள முதியவர்களுக்கு எளிதில் படுக்கைப் புண் வர வாய்ப்புண்டு. படுக்கைப் புண் தொடர்ந்து ஏற்படும் அழுத்தத்தினால் உண்டாகின்றது.

முதலில் தோலில் நிறமாற்றம் ஏற்படும். பிறகு புண்கள் ஏற்படும். இது பெரும்பாலும் உடலில் எலும்புகள் புடைத்துக் கொண்டிருக்கும் பகுதிகளிலேயே ஏற்படும்.

பொதுவாகப் படுக்கைப் புண் முதுகின் கீழ்ப்புறம், இடுப்பின் இரு பக்கங்கள், தோற்பட்டை எலும்புகள், முதுகு எலும்புகள், தலையின் பின்புறம், முழங்கால்கள், முழங்கைகள், குதிக்கால்கள் ஆகிய பகுதிகளிலே அதிகம் ஏற்படுகின்றது.

பல முதியவர்கள் இறப்பதற்குப் படுக்கைப் புண் காரணமாக அமைவதால் படுக்கைப் புண் ஏற்படாதவாறு அவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

படுக்கைப் புண் ஏற்படுவதைத் தவிர்க்க பின்வரும் முறைகளைக் கடைப்பிடியுங்கள்.

* 2 மணித்தியாலங்களுக்கு ஒருமுறை படுத்திருக்கும் நிலையை மாற்ற வேண்டும்.
* முதுகையும், படுக்கையில் அழுத்தப்படுகின்ற பக்கங்களையும் அடிக்கடி துடைத்து பௌடர் போட்டுப் படுக்க வைக்க வேண்டும்.
* படுக்கை விரிப்பை மாற்றும் போது முதியவர்களை இழுக்காமலும், உடலில் உராய்வு ஏற்படாமலும் மெதுவாகக் கையாள வேண்டும்.
* முதியவர்கள் மலம் கழிக்கும் தொட்டி உடையாமல் கீறல் இல்லாமல் இருக்கிறதா எனப்பார்த்துக் காயம் ஏற்படாதவாறு உபயோகப் படுத்த வேண்டும்.
* தோலில் ஏதாவது மாற்றம் தென்பட்டால் முக்கியத்துவம் கொடுத்து கவனிக்க வேண்டும்.

முதியோர்களைக் கவனிப்பதில் பொதுக் கவனிப்பும், அடிப்படை வசதிகளுமே மிகவும் முக்கியம்.

எனவே இவற்றைக் கடைப்பிடித்தால் பல தொல்லைகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.



# விவாகரத்துதான் ஒரே தீர்வு அல்ல!

இன்று பெண்கள் எவ்வளவுதான் படித்தவர்களாக இருந்தாலும், தமக்கென்று வாழ்க்கையை அமைத்துக் கொண்டவுடன் சின்னச் சின்னப் பிரச்சினைகளைக் கூட எதிர் கொள்ள முடியாதவர்களாகி விடுகின்றனர்.

சில பெண்கள் கணவனுடனும், குடும்பத்திலும் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் "விவாகரத்து"த்தான் ஒரே தீர்வு என்று எண்ணிவிடுகின்றனர்.

இதனால் ஒழுக்கம் பண்பாடு, மிகுந்த நம் நாடுகளில் மேலை நாடுகளைப் போன்று விவாகரத்துக் கலாசாரம் மிக வேகமாகப் பரவி வருவதுதான் கொடுமை!

பெண்கள் சின்ன விஷயத்திற்கு எல்லாம் விவாகரத்து என்ற அம்பை எய்வது ஒருபுறம் இருக்கட்டும், ஆனால் பிரிந்த பின் என்ன செய்வது? அதைப்பற்றிப் பெண்கள் யோசித்துப் பார்க்கிறார்களா?

கணவன் பெரிய தவறு செய்தால் அதனைத் தட்டிக் கேட்பது ஒரு மனைவியின் கடமை. அப்படிக் கேட்டும் கணவன் திருந்தாவிடில் அவனைப் பிரிந்து செல்ல முடிவு செய்வது அவள் உரிமை.

சேர்ந்து வாழும் காலத்தில் தன்னைத் தைரியப்படுத்திக் கொண்டு தன் காலில் நிற்கக் கூடிய அளவிற்கு ஒவ்வொரு பெண்ணும் தன்னைத் தயார்படுத்திக் கொள்வது அவசியம். அது அவளைத் தைரியமாக நிற்கச் செய்யும்.

தைரியமாகவும், உறுதியாகவும் இருக்கும் மனைவிமேல் கணவனுக்கு மரியாதை இருக்கும். பிரச்சினைகளைப் பேச மனம் வரும்.

குடும்ப வாழ்க்கையில் தெரிந்து, அறிந்து கொள்ள எத்தனையோ விடயங்கள் உள்ளன.

வெறும் புடைவை, நகை வாங்குவதிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதிலும், வீண் கதைகள் பேசுவதிலும் நேரத்தை வீணடிக்காது, தன்னை மேம்படுத்திக் கொள்ள ஒவ்வொரு பெண்ணும் முயல வேண்டும்.

முயன்றால் பலன் நிச்சயம் உண்டு.





# வரிசையாக நின்று புல் மேயும் அழகு

வேகமாக ஓடும் குதிரைகளைப் பந்தயத்தில் ஈடுபடுத்திப் பணம் சேர்க்கிறது ஒரு கூட்டம். சில பந்தயக் குதிரைகளுக்குப் போதைப்பொருள்களை ஏற்றி அவை மூர்க்கத்தனமாக ஓடுவதற்குத் தூண்டுவோரும் இருக்கிறார்கள். ஆனால், வரிக்குதிரைகளோ புல்மேயும் போதும் வரிசையாக நின்று புல்மேயும் காட்சி அழகுதான்.

# காலணிகளுக்கு மலர் அலங்காரம்



காலணிகளுக்கு விதம்விதமான அலங்காரங்களைக் கொடுத்து அவற்றை அணிந்து கொள்வதில் சிலருக்கு மோகம் இருக்கிறது. இந்துக் கடவுள்களின் படங்களைக் காலணிகளில் பொறித்து அணியும் மோகம் மேல்நாடுகளில் இருக்கிறது. ஆனால், இங்கோ இரு காலணிகளுக்கு மலர் அலங்காரம் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

# கைரேகை நன்றாக இருந்தால் அதிஷ்டம்

கைரேகை எமக்கு நன்றாக அமைந்தால்தான் நல்ல காலம் பிறக்கும் என்பார்கள். எமது கைரேகைகளைக் கவனமாக ஆராய்ந்து பலன் சொல்லும் ஆற்றல் சில ஜோதிடர்களுக்குத்தான் இருக்கிறது. ஆனால் இந்த அழகியோ தனது கைரேகைகளை எவருமே வாசித்து அறிந்து கொள்வதற்கு வசதி செய்து கொடுத்திருக்கிறார்.



மசாலா மிக்ஸ்

# மரவுரி தரித்தாலும் மங்காத புன்னகை

ஆதிவாசிகள் மரவுரி தரித்திருப்பார்கள் என்று கூறுவார்கள். மரப்பட்டை வைக்கோல், இலை என்று அனைத்துமே அவர்களின் மானத்தைக் காத்திருக்கின்றன. இந்த நவீன உலகில் இந்த நங்கையும் மரவுரிதரித்த காரணம் என்னவாக இருக்கும்? மரவுரிதரித்தாலும் புன்னகை மங்கவில்லை.



# ஒளிந்திருக்கும் முகம் எது?



ஜனவரி 21 சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் விஜயகாந்தினுடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து ''சுடர் ஒளி''க்கு எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. ஜீ.ரஞ்சன், பதுளை
2. ப.த.ஷில்மியா, தம்பலகமம்
3. பீ. செந்தூரன், வவுனியா

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய அனைவரையும் பாராட்டுகிறோம். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (28—01—2001) மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகை யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் பெயர் விவரம் அடுத்த வாரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் முகம் தெரியாத உருவம் யாருடையது? வங்க மண்ணிலிருந்து தமிழகம் வந்த நடிகை. இவரது மாநிலத்தின் தலைநகருக்கு அண்மையில் பெயர் மாற்றம் நடந்தது. ஆனால் இவர் தனது பெயரை மாற்றிக் கொள்ளவில்லை. யார் இவர்?



இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டு பிடித்து அவருடைய பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

''சுடர் ஒளி''
36/2, பிரெட்ரிகா வீதி,
கொழும்பு —06

# ஓயாது இசை வழங்கி சாதனை புரியலாம்

ஓயாமல் ஒரு கருமத்தைச் செய்து அதில் உலக சாதனை நிலை நாட்டும் ஆர்வம் சிலபேருக்கு இருக்கிறது. அதற்குக் காரணம் அவர்கள் ஏற்படுத்தும் சாதனையைப் பதிவு செய்துகொள்ள ஒரு கின்னஸ் பதிவேடு இருப்பதுதான். இந்திய இசைக்கலைஞர் ஹேமந்த் சௌலா ஹிட்டார் வாத்தியம் இசைப்பதில் உலக சாதனை நிலை நாட்டும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறாரா?



# 'சிங்களத் தேசியவாதத்தை கை விட்டுவிடுங்கள்'

## இலங்கைத் தலைவர்களுக்கு விக்டர் ஐவன் வேண்டுகோள்


விக்டர் ஐவன்

இலங்கைத் தலைவர்கள், சிங்களத் தேசியத்தைக் கைவிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார் ''ராவய'' சிங்களப் பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன்.

"இலங்கையில் இன்று நடப்பது ஒரு இனத்துக்கு எதிரான போர். இது நிறுத்தப்பட வேண்டும். இதற்கு பல உயிர்கள் பலிக்கடாக்களாக்கப்பட்டு விட்டன. அதன் ஒரு அங்கமே பத்திரிகையாளர் நிமலராஜனின் கொலை'' என்றார் கொழும்பு பல்கலைக் கழக சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன்.

பத்திரிகையாளர் நிமலராஜன் கொலைசெய்யப்பட்டு 90 நாட்களானதை நினைவு கூருமுகமாக தமிழ் ஊடகவியலாளர் சங்கம் கூட்டம் நடத்தியது. அதில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

''ஒரு நாட்டில் யுத்தம் நடக்கும் போது பல்வேறுபட்ட ஆயுதக் குழுக்கள் தோன்றுவது தடுக்க முடியாதது. யார் கொலை செய்தார்கள் என்று ஆராய்வது தற்போது அவசியமில்லை.

நாட்டில் நடப்பவற்றை மக்கள் தெரிந்துகொள்ள உரிமையுண்டு, அதேபோல் செய்திகளை மக்களுக்குத் தெரியப்படுத்த பத்திரிகையாளர்களுக்கும் உரிமையுண்டு. இதனைத் தடுக்க முனைவது வாழும் உரிமையைப் பறிப்பதாகும்.

யுத்தம் செய்வதற்கும் சட்ட வரையறைகள் உண்டு. இதனை மீறுவோரைத் தண்டிப்பதற் காகவே சர்வதேச நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் கைச்சாத்திடவும் இலங்கை அரசு மறுத்துவிட்டது.'' இப்படி அவர் குறிப்பிட்டார்.

ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் பேசுகையில் கூறியதாவது; சிங்களவர்கள்– தமிழர்களிடமும், தமிழர்கள்–சிங்களவர்களிடமும் மன்னிப்புக் கேட்கும் ஒரு நாள் வரும். அன்றுதான் எமது நாட்டில் இனப்பிரச்சினை தீரும். உடனடியாக இப்பிரச்சினை தீரப்போவதில்லை

பிரதான இரண்டு இனங்களும் தமக்குள் ஒரு வட்டத்தை அமைத்துத் தொடர்பில்லாமல் வாழ்ந்ததாலேயே நம் நாட்டில் இந்தத் துர்ப்பாக்கிய நிலை தோன்றியது.

அயர்லாந்து, தென் ஆபிரிக்க நாடுகளில் பிரச்சினைகள் தீருவதற்கு முக்கிய காரணம் அரசாங்கங்களினதும், போராளிகளினதும் மனோபாவ மாற்றமே. அவர்கள் பிரச்சினைக்குப் புத்திசாலித்தனமாக முடிவு கண்டனர்.

ஆனால் இங்கு ஒருவர் கைது செய்யப்பட்டால் அவர் உயிரோடு திரும்பி வருவதில்லையே.


நிமலராஜன்

இந்நிலையில் யார் யோசிப்பார்கள்? யார் முடிவு காண்பார்கள்?

பல தசாப்தங்களாக வன்முறையில் சிக்கித் தவிப்பவர்கள் தமிழர்கள். எனவே சமாதானத்தின் மேல் அவர்களுக்குத் தான் அக்கறை அதிகம். அந்த அக்கறையை செய்திகளாக இன மத பேதமின்றி நாட்டிலுள்ள சகல ஊடகங்களின் மூலம் வெளியிட்டவர் நிமலராஜன். நாட்டின் எல்லையைக் கடந்து சர்வதேச ரீதியில் செய்திகளைத் தெரியப்படுத்திய வல்லமைமிக்க பத்திரிகையாளராகத் திகழ்ந்தவர் நிமலராஜன். அவரின் வெற்றிடம் நிரப்பப்பட முடியாதது.

இலங்கைத் தலைவர்கள் சிங்கள தேசியத்தைக் கைவிட்டு, தென் ஆபிரிக்காவின் கிளார்க்–மண்டேலா போன்ற தலைவர்கள் போல் மாற வேண்டும்.'' இப்படி விக்டர் ஐவன் மேலும் தெரிவித்தார்.

– ப.பன்னீர் செல்வம்

# சுவையோடு சத்தும் உள்ளது பேரீச்சம் பழம்

பல வருடங்களுக்கு முன்பு சீனி தட்டுப்பாடாக இருந்த காலங்களில் பேரீச்சம் பழத்திற்கு நமது நாட்டில் பெரும் கிராக்கி ஏற்பட்டது. நோன்பு காலங்களில் எப்பொழுதும் பேரீச்சம் பழத்திற்கு மதிப்புத்தான்.

சீனிக்குப் பதிலாகப் பேரீச்சம் பழத்தினைப் பயன்படுத்தி பலர் தேநீர் அருந்தினார்கள்.

அரபு நாடுகள் என்றாலே நமக்கு முதலில் ஞாபகம் வருவது எண்ணெய்தான். அதற்கு அடுத்த படியாக அரபு நாடுகளுக்கு ஆதாயமும், புகழும் தேடித் தருகின்ற பொருள் பேரீச்சம் பழம்தான்.

பேரீச்சம் மரங்கள் பொதுவாக நதிக்கரைகளில் பயிராகின்றன. ஃபரஹ் நதிக்கரையிலும் தஜலா நதிக்கரையிலிருந்து தெற்கு அரபுக்கடல் வரையிலும் பேரீச்சை மரங்கள் பரவலாக இருக்கின்றன.

அரபு நாடுகள் முழுவதும் சுமார் மூன்றரைக் கோடி பேரீச்சை மரங்கள் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். பேரீச்சம் பழத்தில் 450 வகைகள் இருக்கின்றன.

தென் பகுதியில் விளையும் பேரீச்சை வகைகளே தரம், சுவையில் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன. 'ஹலாலி' (சதைப்பற்று மிக்க பொன்னிறம் கலந்த பழம்) 'சுத்ராவி' (சிறிய அளவுள்ள செம்மை கலந்த பழம்) 'சுக்கரி' (பழுப்பு நிறப்பழம்) இவற்றில் சிலவாகும். மத்திய பகுதியில் 'ஜாஹதி' என்னும் தரமான வகைப் பழம் பயிராகிறது.

வரட்சியான பகுதிகளில் பேரீச்சை ஜீவாதாரமான பல சத்துக்கள் நிறைந்த உணவாகக் கொள்ளப்படுகிறது.

ஒரு இறாத்தல் பேரீச்சையில் 2,375 கலோரிச் சத்துக்கள் இருக்கின்றன. இதே அளவு ரொட்டியிலும் உருளைக்கிழங்கிலும் இருக்கின்றன. இறைச்சி, முட்டை, மீன் வகைகளில் கூட இல்லாத அளவு உணவுச் சத்துக்கள் பேரீச்சம் பழத்தில் இருக்கின்றன.

பேரீச்சை மரங்களுக்கு வெயிலும் நல்ல தண்ணீரும் இன்றியமையாதவை. தண்ணீர் உப்பாக இருந்தால் பேரீச்சை பயிரிட முடியாது. ஈராக்கின் தென்பகுதியில் ஏற்ற நிலப்பகுதியும், வெப்ப நிலையும் அனுகூலமாக இருக்கின்றன. பாஸராப் பகுதியில் ஷாத்–அல்–அரப் நதியிலிருந்து எழுபதுக்கும் அதிகமான கால்வாய்கள் மூலமும், அவற்றின் கிளைக்கால்வாய்கள் மூலமும் பேரீச்சை மரத் தோப்புகளுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படுகின்றது.

அந்தக் கால்வாய்கள் மூலமே பேரீச்சம்பழங்களைத் தோணிகளில் பல்வேறு பகுதிகளுக்குக் கொண்டு செல்கிறார்கள்.

செப்டெம்பர் மாதத்தில் பேரீச்சை பழுக்கிறது. கொத்துக் கொத்தாகப் பழங்களைப் பறித்து, பிறகு தனித்தனியாகப் பிரித்தெடுக்கின்றார்கள். அவற்றை உலர்த்தி சுத்தப்படுத்தி பங்கீடு செய்கிறார்கள். பழங்கள் கெடாமல் இருக்க இரசாயன முறையில் பதனிடுகிறார்கள்.

பேரீச்சம்பழத்திலிருந்து மதுவகையும் செய்கிறார்கள். இதை மருத்துவப் பொருளாகவும் பயன்படுத்துகிறார்கள்.

சாதாரண ரகப் பேரீச்சம்பழத்தையும், பொடியாக்கிய பழக் கொட்டைகளையும் கால் நடைகளுக்கு உணவாகக் கொடுக்கிறார்கள்.

– முஹம்மது ஹஸனி

# தூக்கத்தில் சிலர் நடப்பது ஏன்?

தூக்கத்தில் நடப்பது என்பது ஒருவிதமான நோயாகக் கருதப்படுகிறது. இது அபாயகரமான விஷயமும்கூட.

மனமும், உடலும் சோர்வடையும்போது தான் நாம் உறங்குகிறோம். நமது மூளையில் உள்ள தூக்கத்தைக் கட்டுப்படுத்தும் நரம்பு செல்கள் மனமும் உடலும் தூங்குவதையும், விழிப்பதையும் செயலாக்குகின்றன. இந்தக் குறிப்பிட்டபகுதி கல்சியம் சத்தின் மூலம் செயற்படுகிறது.

கல்சியம் சத்து ரத்தத்தில் கலந்து இந்தப் பகுதிக்கு வருகிறது. கல்சியம் சத்தைப்பெற்று இந்த மூளையின் தூக்கப்பகுதி இரண்டு விதமான செயல்களைச் செய்கிறது.

மூளையின் ஒருபகுதியைச் செயலிழக்கச் செய்து நம்மை நினைவிழக்கச்செய்கிறது. இதற்கு "மூளை உறக்கம்' என்று பெயர்.

பிறகு மூளையிலிருந்து கிளம்பும் பல நரம்புகளைச் செயலிழக்கச்செய்கிறது.

அதன் மூலமாக நமது உடல் செயற்பாடுகள், கை, கால்களை அசைப்பது நிறுத்தப்படுகிறது.

இதற்கு 'மனது உறக்கம்' என்று பெயர்.

இந்த இரண்டு உறக்கங்களுமே ஒருங்கிணைந்தால்தான் நாம் நிம்மதியான தூக்கத்தில் ஆழ்ந்து விடுவோம்.

ஆனால், நரம்பு மண்டலம் சரியாக இயங்கா விட்டால், அதில் ஏதேனும் பிரச்சினை இருந்தால் அவை மூளையின் தூக்க மண்டலத்தின் ஆணைப் படி இயங்காது. தங்கள் இஷ்டத்திற்கு செயற்படும்.

அப்போது மூளை உறங்கிவிடும். ஆனால், உடல் சம்பந்தப்பட்ட நரம்புகள் உறங்காது.

இதனால்தான் இந்தப் பிரச்சினை உள்ளவர்கள் தூக்கத்திலேயே எழுந்து நடக்க ஆரம்பித்து விடுகின்றனர்.

இப்படிப்பட்டவர்களை மாடிப் படி, பால்கனி போன்ற பகுதிகள் இல்லாமல் பாதுகாப்பான பகுதிகளில் உறங்க வைக்க வேண்டும்.

மற்றப்படி இது ஒன்றும் பெரிய ஆபத்தான நோய் அல்ல என்று மருத்துவ வல்லுனர்கள் கூறியுள்ளனர்.

நரம்பியல் டாக்டர்களைச் சந்தித்து இதற்குத் தகுந்த ஆலோசனைகளைப் பெறலாம்.

# அரசியல் அம்பலம்



கட்சியொன்றில் இருந்து பிரிந்து தனித்து இயங்கிவரும் ஒரு தலைவருக்குப் பெரிய பதவி ஒன்று கிடைக்கப்போகிறதாம். (ஆ...!)

பதவி கிடைக்கப்போகிறது என்று அத்தலைவரின் சில பிரதான சிஷ்யர்களே பிரசார வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இந்தப் பிரசாரத்தினால் அம்பாறை காரைதீவுப் பகுதியிலும், மட்டக்களப்பு லேக் ரோட்டிலும் பொதுமக்கள் வேலைவாய்ப்புக்காக அலைமோதத் தொடங்கியிருக்கிறார்களாம்.

விண்ணப்பப்படிவங்களை விநியோகித்து, 'வேலை வேண்டுமானால் இவற்றை நிரப்பிக் கொடுங்கள்' என்று சிஷ்யர்கள் உஷாராக நின்றார்களாம். விளைவு என்ன தெரியுமா? தலைவருக்குக் கிடைக்கவுள்ள பதவி பெரிய பதவியாக இருந்தபோதிலும் அது என்ன பதவி என்று வெளிப்படையாகத் தெரிவிக்கப்படவில்லை. அதனால் விண்ணப்பப்படிவங்களை நிரப்பிக் கொடுத்தவர்களும் சந்தேகத்துடனேயே அதைச் செய்தார்களாம்.

****

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்புக்கும் அவர்களது நடவடிக்கைகளுக்கும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வரவேற்புக்கிடைத்திருக்கிற நிலையில், ஆயுதம் தாங்கிய இயக்கங்களின் சில செயல்களினால் கூட்டமைப்பிலுள்ள சில தலைவர்கள் கலங்கிப் போயிருக்கிறார்கள்.

கன்னாதிட்டி, ஸ்ரான்லி வீதிப் பகுதியில் காசு சேகரிப்பு முயற்சிகள் நடைபெறுவதே இக் கலவரத்துக்குக் காரணமாம். "நல்ல நோக்கத்துக்காகக் கூட்டமைப்பை உருவாக்கினாலும் எங்கள் கட்சிக் கௌரவத்தை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் நாங்கள் தான் கவனமாக இருக்க வேண்டும்" என்று ஜனநாயக வழியில் நம்பிக்கை கொண்ட கட்சித் தலைவர்கள் சிலர் தீர்மானித்திருக்கிறார்களாம்.

ஆனைமுகத் தலைவர் "தமிழ் மக்கள் எங்களை எந்தக் கோணத்தில் பார்க்கப் போகிறார்களோ என்று பயமாயிருக்கிறது" எனப் புலம்பியிருப்பது கலக்கத்தின் உச்சக் கட்டம்.

தவிர கூட்டமைப்புக்கு ஒரு சீர்படுத்தல் (FORMULATION) தான் வேண்டுமே ஒழிய அதனை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றும் போர்க்கொடி உயர்த்தப்பட்டிருக்கிறது.

"தேர்தல் நோக்கத்துக்காகத்தான் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டிய தேவை ஏற்படும். அப்படி ஒரு நோக்கமே இல்லாத நிலையில் பதிவு செய்ய எடுக்கப்பட்ட முயற்சி முற்றாகவே கைவிடப்பட்டுவிட்டது" என்று ஒரு செயலர் எரிச்சல் கலந்த குரலில் தெரிவிக்கிறார்.

****

வர்த்தகர்களிடமும், பொது மக்களிடமும் கப்பமும், வரியும் வசூலிப்பதில் நாங்கள் ஈடுபடவில்லை என்று அநேகமாக எல்லாத் தமிழ் இயக்கங்களுமே பல்லவி பாடுகின்றன. என்றாலும் கண்டும் காணாமலும் நடக்க வேண்டியது நடந்து கொண்டு தான் இருக்கிறது.

வடக்கில் இரண்டு இயக்கங்களுக்கும் அரசாங்கநிர்வாக மேலிடம் அழைப்புவிடுத்து அப்படிச் செயற்பட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டது. இது பலருக்குத் தெரிந்திருக்கலாம்.

இதனால் இன்னொரு இயக்கத்தின் செயல் நாயகருக்குத் தான் ஆத்திரமும் அதோடு ரோசமும் வந்திருக்கிறது. '1990ஆம் ஆண்டு தொடக்கம் கப்பம், வரி வசூலிக்காமல் எனது கட்சியைத் தலைமை தாங்கி வழிநடத்தினேன்' என்று கூறும் அந்த இயக்கத்தின் செயலர் 'தார்மீக உரிமை' பற்றிக் கேள்வி எழுப்பினார்.

"கொழும்பில் யூ.என்.பிக்கும், எஸ்.எல்.எப்.பி, எஸ்.எல்.எம்.சி போன்ற கட்சிகளுக்கும், அவர்களது நடவடிக்கைகளுக்கும் காசு கொடுப்பவர்கள் யார்? வர்த்தகர்களும், அவர்களது சமூகமும் தான்.

ஜே.வி.பி கூட கட்சிச் செலவுகளுக்குப் பொது மக்களிடம் தான் உண்டியல் குலுக்கிக் காசு சேர்க்கிறது.

அரசாங்கம் கூடச் சில தமிழ் இயக்கங்களுக்கு மட்டும் காசு கொடுத்து விட்டு மற்ற இயக்கங்களைக் கைவிட்டிருக்கிறது. ஒரு இடத்தில் கப்பம் அறவிட அனுமதித்து விட்டு மற்ற இடங்களில் அறவிட விடாது தடுப்பது நியாயமா?

அரசாங்கத்தின் செயல்களும், பிரதான கட்சிகளின் செயற்பாடுகளும் இப்படியிருக்கையில் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் யாழ் நிர்வாக மேல் மட்டம் "காசு திரட்ட வேண்டாம்" என்று இயக்கங்களுக்கு உபதேசம் செய்திருக்கிறது.

'எந்த இயக்கமாவது காசு, வரி என்று வந்தால் எம்மிடம் சொல்லுங்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்' என்று மக்களிடம் உயர் மட்டம் கூறியிருக்கிறது.

இப்படிக்கூறுவதற்கு அதற்கு என்ன தார்மீக உரிமை இருக்கிறது? எமது கட்சிச் செயற்பாடுகளைத் தடை செய்ய இவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது.

இப்படி அந்தத் தலைவர் கேட்டிருக்கிறார். காரணம் என்ன?

சோழியன் குடுமி சும்மா ஆடுமோ?

****

தமிழ்கட்சிக்கூட்டமைப்பினர் ஒன்றாகத் தூதுவர்களைச் சந்திக்கச் சென்ற ஆரம்ப காலத்தில், அதனை அதிகாரத்தரப்பினர், 'ஏதோ சிறுபிள்ளைத்தனமாகச் செய்யப் போகிறார்கள்' என்றே கருதினார்களாம்.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதைப் பின்னர் தான் புரிந்து கொண்டார்கள். இதனை அதிகாரத்தரப்பார் விடுத்த அறிக்கை வெளிக்காட்டியிருப்பதாக அரசியல் அவதானிகள் பலர் கூறுகிறார்கள்.

தமிழ்க் கட்சிக் காரர்களின் நடவடிக்கைகள், அதிகாரத்தரப்புக்கு 'நெகடிவ்'வான விளைவுகளை ஏற்படுத்தி விட்டன. அதனால் அவர்கள் வெளியிட்ட அறிக்கை "நோ" வினால் எழுந்த கூக்குரல்' என்கிறார் ஒரு தலைவர்.

# பித்தன் பதில்கள்

வி. பொத்தான், கொழும்பு
கே : ஆண்டுக்கு ஒரு தடவை உரையாற்றுபவருக்கும் அடிக்கடி அறிக்கை விடுபவருக்கும் இடையில் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?.
ப : அதிகம் பேசாதவர்கள் புத்திசாலிகள், அடிக்கடி அறிக்கை விடுபவர்கள் தாமும் குழம்பி மக்களையும் குழப்பி விடுவார்கள். இப்போது நடப்பது அதுதான்


பி. சர்மிளா், கைதடி
கே : பெண் அடிமையாவது எப்போது?



ப : ஆண்களின் பசப்பு வார்த்தையைக் கேட்கும்போது.

எச்.எம். மௌலானா, மருதானை
கே : விலைவாசி உயர்வைக் கண்டித்து ஐக்கியதேசியக் கட்சி பாத யாத்திரை நடத்தத் திட்டமிடுகிறதாமே....!
ப : சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கண்டிக்குப் பாதயாத்திரை புறப்பட்டார். அன்று பாதயாத்திரை நடத்தி இருக்கா விட்டால் இன்றும் பாதயாத்திரை தேவைப்பட்டிருக்காது. இனயுத்தத்தினால் ஏற்பட்டதுதான் இந்த விலைவாசி உயர்வு என்பது உமக்குத் தெரியாதா?.

எஸ்.எம்.அஹமட், ஏறாவூர்
கே : நல்லவர்கள் போன்று நடிப்போர் பற்றியும் தீமை செய்வோர் பற்றியும் உங்கள் கருத்து என்ன?
ப : புற்றுக்குள் இருக்கும் பாம்பைவிட



பூஞ்சோலைக்குள் இருக்கும் பாம்பு ஆபத்தானது என்பார்கள். அது போன்று நல்லவர்கள் போல நடிப்பவர்கள் ஆபத்தானவர்கள்.


கே.எச்.அப்துல்லா, மருதானை
கே : பித்தனே...! சர்வதேச பயங்கரவாத அமைப்புக்களின் பெயர்ப்பட்டியலை பிரிட்டிஷ் அரசு வெளியிடும்போது அதில் விடுதலைப் புலிகளின் பெயரும் உள்ளடக்கப்படுமா?
ப : இலங்கையின் இனப்பிரச்சினைத்தீர்வில் வேறு எந்த நாட்டையும் விட பிரிட்டிஷுக்கே பெரும் கடமைப்பாடு உண்டு. விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக பிரிட்டிஷ் அரசு அறிவிக்குமானால் அதன் பிரித்தாளும் தந்திரம் தற்பொழுது மற்றொரு வடிவில் நீடிக்கிறது என்பதே அர்த்தம் ஆகும்.

கே.பி. சர்மிளா, கொட்டாஞ்சேனை
கே : பித்தனே...! சிவாஜிகணேசனின் மகன் நடிகர் பிரபு அரசியலில் இறங்குவாரா?
ப : எம்.ஜி.ஆரைப் பார்த்து சிவாஜி அரசியலில் இறங்கினார். ஆனால் அது எடுபடவில்லை. இப்பொழுது மகன் முயற்சிக்கிறார். அதுவும் எடுபடும் என்றில்லை.

என்.செல்வராணி, தெமட்டக்கொடை
கே : குஜராத்தில் பிறந்த குழந்தை ஒன்றுக்கு 'பூகம்பம்' என்று பெயரிட்டிருக்கிறார்களாமே...! அப்படி என்றால் நம் நாட்டில்?
ப : 'வன்செயல்' என்று பெயர் வைக்கலாம். பூகம்பம் குஜராத்தை மட்டுமே நாசமாக்கியது. இங்கே நாடு முழுவதையுமே வன்செயல்கள் ஆளுகை செய்கின்றன.

ப. செந்தாமரை, சுன்னாகம்
கே : தென்மராட்சியின் முகமாலைப் பகுதியை சத்தமில்லாது (Silent Operation) மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை மூலம் கைப்பற்றி இருப்பதாக யாழ்மாவட்ட இராணுவத் தளபதி கூறிஇருக்கிறாரே...!
ப : ஒருகைத்தாளம் ஓசை எழுப்பாது. அது தான் இப்ப நடக்குது. எப்படிச் சத்தம் வரும்?

கே. ரூபவதனி, ஜா-எல.
கே : பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்களே...! இப்பொழுது?



ப : பெண் என்றால் பேயும் ஓடும். கொழும்பு நகரைச் சுற்றி வந்தால் அது தெரியும்.

கு.யோகராஜா, வத்தளை
கே : ஒருபுறம் வரி விதிப்பு. மறுபுறம் விலைவாசி உயர்வு. என்ன செய்யலாம் பித்தனே...!
ப : இப்ப ஜன'**வரி**', பெப்ர'**வரி**' மாதங்கள் என்பதை மறந்து விட்டீர் போலும்...!

வையாபுரி- தியாகராஜா, பண்டாரவளை
கே : தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காக, அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் பேச்சு நடத்துகிறாராமே...? இது சாத்தியமாகுமா...?
ப : அரசுடன் மோதுவதைவிட, அரசுடன் பேசி உரிமை பெறுவதில் இ.தொ.கா. தலைவர்கள் கைதேர்ந்தவர்கள். அதனைத்தான் ஆறுமுகம் தொண்டமானும் செய்கிறார். தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இது எவ்வளவு தூரம் சாத்தியமாகுமோ தெரியாது.

க. சின்னப்பு, குருநாகல்
கே : இந்த யுத்தம் தமிழரின் இயல்பான குணங்களை மாற்றி இருக்குமா?
ப : மாற்றவில்லை. யாழ்ப்பாணத்தில் அதனை நேரில் காணலாம்.

ஆர். குமணன், கொழும்பு
கே : பித்தனே...! பூகம்பத்தில் இருந்து தப்ப என்ன செய்யலாம்?



ப : கொழும்பில் உள்ள மாடிக்குடியிருப்பு ஒன்றில் வசிக்கிறீர் போலும். பயம் யாரைத்தான் விட்டுது?

பா. கோபி கிருஷ்ணா, நமுனுகுல
கே : இந்த நாட்டின் அரசியல் நிலை பற்றி...?
ப : நோர்வேதான் பாவம். ஆப்பிழுத்த குரங்கின் நிலையில்.

ரா. சேகர், கம்பளை
கே : பித்தனே...! இவ்வளவு காலமும் நம் தலைவர்கள் பறக்க விட்ட வெண் புறாக்களின் தொகை எத்தனை? அவற்றில் ஒன்றாவது சமாதானம் கொண்டு வரவில்லையே?
ப : தம்பி சேகர்...! சமாதானம் மக்களுக்கு அல்ல. புறாக்களுக்குத்தான். மனிதனின் கொடிய கைகளில் இருந்து விடுபட்டு அவை சுதந்திரமாகப் பறந்து செல்கின்றன.

# இந்தியாவுக்கு இலங்கை அடிமையாகும் நிலை வரும்

## புதிய நாணயக் கொள்கையின் தவிர்க்க முடியாத விளைவு இது

என்ன சின்னாச்சி, டொலர் விலை கூடிப்போச்சாம். அப்ப கடலை விலையைக் கூட்டியாச்சோ?

சிரிப்புடன் கேட்டபடி வந்து அமர்ந்தார் விநாசியர். அவருடன் நிழல் போல் தொடர்ந்து வந்த பரமலிங்கம் மாஸ்டரும் அமர்ந்தார்.

பெரிசுகள் இருவரும் வந்துவிட்டதைக் கண்டு கோவில் வாசலில் 'தரிசனத்துக்காக' நின்றுகொண்டிருந்த செக்கியூரிட்டி டானியலும் கொம்யுனிகேஷன் லோகனும் விரைந்து வந்தனர்.

தேரடியில் அரட்டை ஆரம்பமானது.

வியாபாரத்தில் மும்முரமாக இருந்ததால் விநாசியரின் கேள்விக்குத் தாமதமாகப் பதில் சொன்னாள் சின்னாச்சி.

''இது முந்தி வாங்கின கடலை. பிறகு ஏன் டொலர் விலை ஏறிப்போச்சென்று இதுக்கு விலையைக் கூட்டவேணும்?''

''சின்னாச்சிக்கு இருக்கிற மனம் நாட்டிலை நிறையப் பேருக்கு இருந்தால் சனத்தின்ரை கஷ்டம் கொஞ்சம் குறைஞ்சிருக்கும்'' என்றான் லோகன்.

ஓம் தம்பி, டொலர் விலை கூடினதுதான் தாமதம். பழைய விலைக்கு ஏற்கனவே வாங்கிவைத்திருந்த எல்லாச் சாமான்களின் விலையையும் வியாபாரிகள் கூட்டிப்போட்டினம்'' என்று கூறினார் மாஸ்டர்.

யாழ்ப்பாணத்திலை கூட்டுறவை நோக்கமாகக் கொண்டவையே எப்பவோ வந்த சீனிக்கு கிலோவுக்கு 5 ரூபா கூட்டி வித்தவை. அதுக்குப் பிறகுதானே தனியாரும் விலை கூட்டினவை. மக்களுடைய இலாபத்துக்காகக் கூட்டுறவாக ஆரம்பிக்கப்பட்ட சங்கமே சுயலாபத்தைக் கருதும் போது மற்றவையைக் குறைசொல்ல ஏலுமே'' கூறினான் டானியல்.

இருந்த சீனியைப் பங்கீட்டு அட்டைக்கு இத்தனை கிலோ என்று பழைய விலைக்கே விநியோகித்திருக்கலாம். அதைவிட்டுட்டு கொள்ளை லாபம் அடிக்கினம்.

எல்லாம் இந்த டொலர் விலை கூடினதாலை வந்த வினை'' அலுத்துக்கொண்டாள் சின்னாச்சி.

அதுவும் நல்லதுக்குத்தானே, உள்ளூர் உற்பத்தி கூடுமாம், சுற்றுலாப் பயணிகள் நிறையப் பேர் வருவினமாம். அதாலை வருமானம் வருமாம், ஏற்றுமதி அதிகரிக்குமாம்.....'' அடுக்கிக் கொண்டே போனார் விநாசியர்.

''கேட்கிறவன் பேயன் என்றால் எருமை மாடு ஏரோப்பிளேன் ஓட்டினது என்றும் சொல்லுவினம்''இடைமறித்தார் மாஸ்டர்.

''ஏன் மாஸ்டர், இப்பிடி கன நன்மைகள் வரும் என்றுதான் சொல்லுகினம். அது பொய்யோ?'' விநாசியருக்குப் பதில் சொல்லாமல் ''தம்பிமாருக்கு இந்தப் பிரச்சினை விளங்குதோ?'' என்று கேட்டார் மாஸ்டர்.

அதாவது மாஸ்டர், ஒரு அமெரிக்க டொலருக்கு இவ்வளவு இலங்கை ரூபா சமம் என்று இவ்வளவு நாளும் இலங்கை மத்திய வங்கி தீர்மானித்தது. அதன்படியே வர்த்தக வங்கிகள் டொலருக்கு சமமான ரூபாவைக் கணக்கிட்டன.

''ஆனால் இனிமேல் மத்திய வங்கி இதில் தலையிடாது. வர்த்தக வங்கிகளே அன்றன்று டொலருக்கு ஏற்படும் தேவையைப் பொறுத்து அதற்கு ஏற்றபடி ரூபாவின் மதிப்பைத் தீர்மானிக்கும்'' தனக்கும் விஷயம் தெரியும் என்று நிரூபித்த திருப்தியில் லோகன் மணலில் சாய்ந்தான்.

''உதாரணத்துக்கு, மண்ணெண்ணெய்க்குக் கட்டுப்பாட்டு விலையை அரசாங்கம் தீர்மானித்து வருகிறது. அதுக்குப் பதிலா வியாபாரிகளே மண்ணெண்ணெய்யின்ரை விலையைத் தீர்மானியுங்கோ என்று சொல்லுற மாதிரி'' தனக்குப் புரிந்ததை கூறினாள் சின்னாச்சி.

''கிட்டத்தட்ட அப்படித்தான், வியாபாரிகள் மண்ணெண்ணெய்யின்ரை விலையைத் தீர்மானிச்சா என்ன நடக்கும்? தேவை கூடுதலாயிருக்கும்போது விலை கூடும். பாவனை குறைஞ்சா விலை குறையும். சந்தையிலை இருக்கிற 'டிமாண்டை' வைச்சுத்தான் விலை கூடிக்குறையும்.

அது மாதிரித்தான் இறக்குமதி செய்யிறதுக்கு வெளிநாடுகளுக்கு நாங்கள் எங்கடை ரூபாவை டொலரா மாத்தித்தானே கொடுக்கிறம். அதனால இறக்குமதி அதிகரித்தால் டொலரின் தேவை கூடும்''

நீண்ட நாள்களுக்குப் பின்னர் பாடசாலையில் படிப்பித்தது போன்ற திருப்தி மாஸ்டரின் முகத்தில் தெரிந்தது.

''அப்ப அவை சாதகமான விஷயங்களைப் பற்றிச் சொன்னது.....' 'இழுத்தார் விநாசியர்.

மாஸ்டர் தொண்டையைச் செருமிக் கொண்டே ஆரம்பித்தார்.

77ஆம் ஆண்டிலேயே இப்படி ஒரு நிலைமை வரும் என்று எச்சரிக்கப்பட்டது. அப்ப அதைக் கவனத்தில் எடுக்காததுதான் இன்றைய நிலைக்குக் காரணம். அது தெரியுமோ?''

''என்ன எழுபத்தேழிலிலேயே சிக்கல் தொடங்கிட்டுதோ?'' விழி விரியக் கேட்டாள் சின்னாச்சி.

''77 வரைக்கும் பிரிட்டிஷ் நாணயமான ஸ்ரேலிங் பவுண்ஸை அடிப்படையா வைத்து வெளிநாட்டு வர்த்தகம் நடந்தது. 77இல் தாராள இறக்குமதிக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. அப்பத்தான் வெளிநாட்டு வர்த்தகம் டொலரில் நடைபெறத் தொடங்கியது''

அதுக்கும் பிரச்சினைக்கும் என்ன சம்பந்தம் மாஸ்டர்? பொறுமையின்றிக் கேட்டான் டானியல்.

''அதுக்குத்தானே வாறன் தம்பி. டொலரிலை வர்த்தகம் நடக்கும்போது இலங்கைக்கு ஏற்றுமதியாலை வருமானம் டொலரிலை வந்தால்தான் இறக்குமதி செய்யிறதுக்கும் டொலராகக் கொடுக்கலாம்.



### தேரடி அரட்டை

''ஆனால் ஏற்றுமதியாலை வந்த வருமானத்தை இறக்குமதிக்கு கொடுத்த செலவோட ஒப்பிட்டால் யானைப் பசிக்கு சோளப்பொரி போலத்தான் இருந்து வருகிறது. ஆனால் இதுக்கு நாங்களும் ஒருவிதத்தில் காரணம்'' சொல்லி நிறுத்தினார் மாஸ்டர்.

''டொலரை நாங்கள் கண்ணாலைக்கூடப் பார்க்கேல்லை. நாங்கள் எப்படி இதுக்கு?'' காரணம் கேட்டாள் சின்னாச்சி.

''அங்கதான் சின்னாச்சி விஷயம் இருக்கு. வெளிநாட்டுப் பொருள்களை நாங்கள் அதிகமாகப் பயன்படுத்தத் தொடங்கினதாலைதானே இறக்குமதி அதிகரித்தது. ஆடம்பரப் பொருள்களாக இருந்த டி.வியும், டெக்கும் எங்களுக்கு இப்ப அத்தியாவசியப் பொருள்களாகப் போட்டுது.

''அவ்வளவு ஏன், உள்ளூரிலை விளையிற உருளைக்கிழங்கை விட்டுட்டு இறக்குமதிக் கிழங்குக்கு நாங்கள் அலைஞ்சால் இறக்குமதி கூடும்தானே. இதனால்தான் டொலரின் தேவை அதிகரித்தது. ரூபாவின் விலை வீழ்ச்சியடைந்தது''

''என்ன மாஸ்டர், பழியை எங்களின்ரை தலையிலை போடுறியள். நாங்களே கோடி கோடியாய் ஆயுதத்துக்குச் செலவு செய்து இறக்குமதி செய்தனாங்கள். இளநீர் குடிச்சவனை விட்டுட்டு கோம்பை சூப்பினவனைப் பிடிச்ச மாதிரிக் கதைக்கிறியள்'' சீறினாள் சின்னாச்சி. சின்னாச்சியின் சீற்றத்தால் நெளிந்தார் மாஸ்டர்.

''விடு சின்னாச்சி. மாஸ்டர் பயந்த சுபாவம். உப்பிடி சில உண்மைகளை உடைச்சுச் சொல்லப் பயப்படுவார். நாங்கள்தான் விளக்கவேணும்'' நிலைமையைச் சுமுகமாக்கினான் லோகன்.

''நான் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் வரேல்லை மாஸ்டர்'' ஞாபகப்படுத்தினார் விநாசியர்.

''அவை சொன்ன சாதகமான விஷயங்களைச் சொல்லும் பார்ப்பம்'' சுதாகரித்த மாஸ்டர் பழைய நிலைக்குத் திரும்பினார்.

விநாசியர் கூறினார், ''உள்ளூர் உற்பத்திகள் பெருகுமாம்''

''பெருகும்தான் விநாசியர். ஆனால் சிக்கல் தீராது. விவசாயத்தை எடுத்துக்கொண்டால் விதைகளில் இருந்து உரம் வரைக்கும் எல்லாம் இறக்குமதி செய்யத்தான் வேணும். அதனாலை இறக்குமதி மேலும் பெருகத்தான் போகுது.

''யுத்தத்தாலை பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையும் மூடியாச்சு'' இது சின்னாச்சியின் குரல்.

''டொலர் மதிப்புக்கூடியதாலை சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்து வெகுவாகச் செலவழிப்பினம். அதாலை அந்நியச் செலாவணி கூடும் என்று அவை சொல்லுறது?'' கேட்டார் விநாசியர்.

''வெளிநாட்டுக்காரர் கொஞ்சக் காசு கொடுத்தால் அதிக இலங்கை ரூபாக்களைப் பெறும் நிலை இருப்பதால் அவர்கள் சுற்றுலாவுக்கு வருவார்கள் என்று சொல்லுகினம்.

ஆனால் ஒரு விஷயத்தை மறந்திட்டினம். வெளிநாட்டிலை இருந்து வாறவைக்கு உணவிலை இருந்து குளிர்சாதனப் பெட்டி போன்ற வசதிகள்வரை எல்லாமே இறக்குமதி செய்யிற நிலையிலைதானே இருக்கிறம். அப்பவும் இறக்குமதி அதிகரிக்கத்தானே போகுது?'' மாஸ்டர் கேட்டு நிறுத்தினார்.

''யுத்தம், யுத்தம் என்று மார்தட்டிக் கொண்டு அதிலேயே கண்ணாக இருந்ததால் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளைப் பெருக்க அரசாங்கங்கள் முயற்சி எடுக்காததாலை வந்த வினை இது என்று சொல்லுறியள்?'' என்றான் டானியல்.

''அது மட்டுமில்லைத் தம்பி, வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்கும் என்றும் வேலைவாய்ப்புக் கூடும் என்றும் அவை கதைவிடுகினம். அதுவும் நடக்கிற மாதிரித் தெரியேல்லை.

அவை எப்பதான் நேர்மையாய் உண்மையைச் சொல்லியிருக்கினம்'' இதுவும் சின்னாச்சியின் குரல்தான்.

''இப்ப வெளிநாட்டு முதலீடுகள் இங்கை வரவேணுமென்றால் வெளிநாட்டுக்காரர் தொழிற்சாலைகளைத் தொடங்கவேணும். முந்தி உடுப்புக்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் வெளிநாட்டினரால் தொடங்கப்பட்டன. வேலை வாய்ப்பும்கூடியது உண்மைதான்.

ஆனால், டொலரின் விலை ஏற்றத்தால் அத்தியாவசியப் பொருட்கள் ஆனை விலை குதிரை விலை விற்கேக்கை தொழிலாளர்களின் சம்பளமும் கூடும் எல்லோ. அப்ப ஒரு பொருளை உற்பத்தி செய்யிற செலவும் கூடும். பிறகு அதை எப்படி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து இலாபம் பெறுவது. இந்த நிலையிலை எந்த வெளிநாட்டுக்காரன் இங்கை தொழில் தொடங்குவான்.

''ஷெல்'' செய்யிறவன் இங்கை தொழிற்சாலை தொடங்கினா நல்லா லாபம் கிடைக்கும் சந்தேகம் வேண்டாம்'' சின்னாச்சியின் குரல் தான்.

''இப்பிடி அவை சொல்ற காரணங்கள் எல்லாமே வெறும் சப்பைக்கட்டுத்தான்'' விநாசியர்.

மாஸ்டர் சொல்றதைப் பார்த்தால் ''தென்னிலங்கை ஆட்கள் யுத்தத்தாலே நேர்ந்திருக்கிற கொடுமையை இனித்தான் நல்லா உணருவினம் போலை'' என்றான் லோகன்.

''கட்டாயம் தம்பி, சொல்லப்போனா அரிசியிலை இருந்து சீனி வரைக்கும் வெளியிலை இருந்து வருகுது. டொலர் விலை கூடினதாலை அவற்றின் விலை ஏறப்போகுது ஆனால், அதுக்கு ஈடாக மக்களின்ரை வருமானம் உயராது.

இப்பவே பெரும்பான்மையான தென்னிலங்கை மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ்தான் வாழுகினம். அவை இனி வீதிக்கு வந்து பிச்சை எடுக்கும் நிலை வந்தாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை.

''அப்பதான் வன்னி நிலைமை தெரியும்'' வேறு யார் சின்னாச்சி சொன்ன கருத்துத் தான் இது.

''அங்கை மட்டுமில்லை சின்னாச்சி, வடக்கு கிழக்கிலை பெரிய சமுதாயச் சிக்கல் ஒன்று உருவாகும் என்றும் சொல்லுகினம்.

''என்ன எங்களுக்குப் பிரச்சினையோ?'' திகைப்புடன் கேட்டார் விநாசியர்.

''ஓம், வடக்கு - கிழக்கிலை மூன்றில் ஒரு குடும்பத்தினர் வெளிநாட்டிலை இருந்து காசு வாறதாகச் சொல்லுகினம்.

இப்ப டொலர் விலை கூடினதாலை வெளிநாட்டிலை இருந்து கொஞ்சக் காசு அனுப்பினா போதும் இங்கை ரூபாயிலை வாங்கேக்கை அது கூடுதலாய்க் கிடைக்கும். ஆனால், வெளிநாட்டுத் தொடர்பில்லாத ஆள்கள் ஒரு வேளை சாப்பாட்டுக்கே திண்டாடும் நிலை வரக்கூடும்.

அப்ப வசதியுள்ளவைக்கும் வசதியில்லாதவைக்கும் இடையிலை பெரிய இடைவெளி உருவாகும் என்றார் மாஸ்டர்.

''என்ன மாஸ்டர் பயமுறுத்துறியள்'' கேட்டான் லோகன்.

இல்லைத்தம்பி இப்ப நான் சொன்னதெல்லாம் நானாகச் சொல்லேல்லை. சூடான், எதியோப்பியா போன்ற நாடுகளிலை அரசியல்வாதிகள் சுயநலத்திற்காக உள்நாட்டுப் போரை நடத்தினதாலை நடந்ததுகளை உதாரணமாய் வைச்சு பொருளாதார நிபுணர்கள் சொன்னதைத்தான் சொன்னனான்.

''இன்னுமொன்று தெரியுமா, நிலைமை இப்படியே போனா இலங்கை பொருளாதார ரீதியாக இந்தியாவுக்கு அடிமையாகும் நிலைமைவரும்.

''என்ன மாஸ்டர் குண்டைத் தூக்கிப் போடுறியள்'' கேட்டது டானியல்.

''இல்லைத்தம்பி யதார்த்தத்தைச் சொல்லுறன். இலங்கைக்கு இந்தியாவிலை இருந்துதான் அதிகமான பொருள்கள் இறக்குமதியாகுது. அதனாலை இலங்கை ரூபாவின் பெறுமதியை நிர்ணயிக்கிற இடத்துக்கு இந்தியா வரப்போகுதாம். அதோட 'சொனி', 'பெப்சி', 'லிவர் பிரதர்ஸ்' போன்ற கொம்பனிகளும் எங்கடை பொருளாதாரத்தை ஆட்டி வைக்கப் போகுதுகள்''.

ஆசிரியர் தொழிலை ஒரு சேவையாகச் செய்து ஓய்வு பெற்றிருந்த மாஸ்டர் உண்மையைப் புரிய வைத்த திருப்தியுடன் எழுந்தார்.

யுத்த வெறி பிடிச்சு அடுத்தவனை அழிக்க நினைச்சவைக்கு இப்பவும் கவலை இல்லை. நாட்டை இந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டுட்டு, அவை வெளிநாடுகளிலை போய் தங்கிடுவினம். மக்கள் தான் பாவம்'' என்றபடி விநாசியரும் எழுந்தார்.

இளம் வயதினரான லோகனும் டானியலும் தங்கள் எதிர்காலத்தை நினைத்து முகம் கறுத்தபடி மௌனமாக எழுந்து நடந்தனர்.

தமிழரை அடிமைப்படுத்த நினைச்சு, கடைசியிலை நாட்டையே பிச்சை எடுக்கிற நிலைக்கு கொண்டு வந்ததுதான் அவையின்ரை சாதனை. டொலர் விலை கூடினதாலை ஆயுதம் வாங்கிறதிலை கொமிஷனும் கூடக்கிடைக்கும் என்றுதான் இன்னமும் யுத்தத்தை நடத்தத் துடிக்கினம் போலை''.

தனக்குள் முணுமுணுத்தபடியே கடலைக் கடையைக் கட்டத் தொடங்கினாள் சின்னாச்சி.

—ஏகலைவன்.

# ராசி பலன்

பொ.சந்திரன்

04–02–2001 இருந்து 10–02–2001 வரை



### மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

இராசிநாதன் செவ்வாய் வாரமத்தியில் தன் சொந்த வீட்டுக்கு வருவதும் மற்றும் குருவின் பார்வை கிடைப்பதும் விசேஷ அம்சம். கொடுக்கல் வாங்கல் சீராக இருக்கும். கல்வி முன்னேற்றம் இருக்கும். சகோதரர்கள் உதவத் தயாராயிருப்பர். வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார் உறவினர் விசுவாசமாக இருப்பர். மனம் சாந்த சொரூப நிலையில் இருக்கும். உண்மையாய் இருக்க உந்து சக்தியாக விளங்கும். எதிரிகள் சிதறிப்போவர். குடும்பம் ஒற்றுமையாயும் அமைதியாயும் இருக்கும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். இதுவரை இருந்த நோய் விலகும். காதலர்கள் இதய அன்பைப்புரிந்து கொள்வர். தொழிலில் விருத்தியும் மதிப்பும் உண்டு.




### இடபம்: கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2.

இராசிநாதன் சுக்கிரன் இலாபத் தானத்தில் உச்சம் அடைந்திருப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். பொருளாதாரம் தடைப்பட வாய்ப்புண்டு. கல்வியில் ஆர்வம் குறையலாம். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். மனதில் கற்பனை பொங்கும். ஆரோக்கிய எண்ணங்கள் தோன்றும். கற்பனையில் சுகம்காணும். எதிரிகள் மனம்மாறி நட்புப்பாராட்டவும் கூடும். குடும்பத்தில் ஆண், பெண் சமநிலை இருக்கும். சில சமயம் பெண்களின் கை ஓங்கவும் கூடும். காதலர்கள் தீர்க்கதரிசனத்துடன் நடந்து கொள்வர். தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில் செய்யும் இடத்தில் சில தலையீடு இருக்கும். சமாளிப்பீர்கள்.



### மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

பெரும்பாலும் எட்டுக் கிரகங்கள் இராசியோடும் இராசி நாதனோடும் சம்பந்தப்படுவதால் குறிப்பிடத்தக்க நல்ல பல காரியங்கள் செய்ய வாய்ப்பு உருவாகும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்களுக்கு உங்கள் உதவி தேவைப்படும். வீடு, வாகனம் இலாபம் தரும். பிரயாணம் அமையும். சொந்தக்காரர் உறவு பாராட்டுவர். மனம் இன்பத்தையும் துன்பத்தையும் தானாக வரவழைக்கும். கற்பனை எல்லைமீறிப் பாயும். எதிரிகள் புதுப்பலம் பெற்றுள்ளனர். அவதானமாக நடக்கவும். குடும்ப அமைதி குன்றும். மூன்றாமவர் குடும்பத்தைக் குலைக்க முயல்வர். அவதானம் வேண்டும். காதலர் வாழ்வில் இலேசான புயல் வீசும். தொழில் யோகம் உண்டு.



### கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.

இராசிநாதன் இவ்வாரம்தன் சொந்த வீட்டில் இருப்பதும் சூரியன், புதனின் பார்வை பெறுவதும் யோகமே. பொருளாதாரம் நன்றாக இருக்கும். கல்வியில் ஆர்வம் உண்டாகும். சகோதர விசுவாசம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினர் அன்பு பாராட்டுவர். மனம் அமைதிப்படும். மனம் தனக்குள்ள சக்தியை உணரும். யதார்த்த நிலையில் செயல்படும். பழைய பகை நட்பாகும். புதுப்பகை தோன்றும். குடும்ப விசுவாசம் இருக்கும். ஒற்றுமையுடன் செயல்படுவர். காதலருக்குள் இருந்த பயம் விலகி சந்தோசமாக உலா வருவர். தேக சுகம் நன்றாக இருக்கும். இது வரை இருந்த தடை நீங்கி தொழில் துறை பிரகாசமாகும்.



### சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1.

இராசிநாதனுக்குக் குருவின் பார்வை கிடைப்பதும் இராசிக்கு சுக்கிரனின் பார்வை கிட்டுவதும் சிறப்பான அம்சமே. பொருளாதாரம் தாராளமாக இருக்கும். கல்வியில் ஆர்வம் வரும். சகோதர உதவி உண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். புதிய வாகனச் சேர்க்கைக்குப் பலன் உண்டு. உற்றார் உறவினர் அன்பாய் இருப்பர். வீண் பயம் தோன்றும். மனதில் தெய்வீக பக்தி இருக்கும். பணத்தைப் பற்றிய கவலை இருக்கும். எதிரிகள் பலம் பெற்று அணி திரள்வர். அவதானம் வேண்டும். பிரயாணம் அமையும். குடும்ப விசுவாசம் இருக்கும். குடும்பப் பணிகளை ஒருமித்து செய்து முடிப்பீர்கள். காதலருக்குப் பொற்காலம். தொழில் சிறப்புண்டு.




### கன்னி: உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2.

இராசிக்கும் இராசி நாதனுக்கும் குருவின் பார்வை கிடைப்பது பாக்கியமே. சுக்கிர கடாட்சமும் உண்டு. பணத் தட்டுப்பாடு வர வாய்ப்பில்லை. கல்வி முன்னேற்றம் உண்டு. சகோதர உதவியை எப்போதும் எதிர்பார்க்கலாம். உறவினருக்குள் உட்பகை இருப்பினும் வெளியில் காட்டாமல் நடந்துகொள்வார்கள். மனத் தெளிவு இருந்தாலும் வரம்பு மீறி வீண் கற்பனையில் காலம் தள்ளுவர். எதிரிகள் பலம் கெட்டு இடம் மாறிப் போவர். குடும்பத்தில் இளமை திரும்பி இன்ப சுகம் காணுவர். காதலர் பசுஞ் சோலையில் தேவகானம் இசைப்பர். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில்போட்டி இருப்பினும் வெற்றி உங்களுக்கு உண்டு.



### துலாம்: சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1, 2,3.

இராசிநாதன் உச்ச பலம் பெற்றபோதிலும் சனி, சூரியனின் செல்வாக்கு இராசிக்கு இருப்பதால் மத்திமமான பலனே. கையில் பணம் இருக்கும். கல்வி முன்னேற்றம் உண்டு. சகோதரருக்குள் மனக்கசப்பு உருவாகலாம். வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார் உறவினர் விசுவாசமாக இருப்பர். மனம் உலகியல் இன்பத்தை சாசுவதமானதென எண்ணி இன்பக் கற்பனையில் மூழ்கும். எதிரிகளால் தற்போதைக்கு ஆபத்தில்லை. குடும்பத்தில் அமைதி இல்லை. எச்சரிக்கையுடன் கூடிய நட்புறவு நிலவும். காதலர் வாழ்வும் மேடும் பள்ளமுமாக இருக்கும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் அமைதியும் முன்னேற்றமும் உண்டு.



### விருச்சிகம்: விசாகம் 4, அனுஷம், கேட்டை.

இராசிநாதன் தன் சொந்த வீட்டுக்கு வருகிறார். குருவின் பார்வையும் பெறுவதால் நினைத்த காரியத்தைச் செய்து முடிக்கும் ஆற்றல் உண்டு. பணத் தட்டுப்பாடு நிலவினாலும் சமாளிக்க முடியும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரங்களிடம் மட்டுப்படுத்தப்பட்ட உதவி கிடைக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். உற்றார் உறவினர் விலகியே இருப்பர். உறவினருக்குள் பகை உண்டாக வாய்ப்புண்டு. மனம் சந்தோசமாக இருக்கும். கற்பனையில் கோட்டை கட்டி வாழும். எதிரிகளை விட உங்கள் பலம் கூடியிருப்பதால் பணிந்து போவர். குடும்பத்தில் பூரண அமைதியுண்டு. காதல் வாழ்வு யோக மயம். தொழில் விருத்தி இருக்கும்.



### தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.

இராசியிலும், இராசிக்கு இருபுறமும் கெட்ட கிரகங்கள் இருப்பது முன்னேற்றத்துக்குத் தடை தான். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் முன்னேற்றம் இருக்கும். சகோதரர்கள் உதவி செய்ய முடியாத நிலை. வீடு, வாகனங்களால் இலாபம் உண்டு. உறவினர் ஓடும் புளியம்பழமும் போல இருப்பர். மனம் ஒருகால் உலகப்பற்றுடனும், மறுகால் வெறுப்புடனும் செயல்படும். மனம் அமைதி இல்லை. எதிரிகள் பலம் பொருந்தியவர்கள் விலகி இருப்பது நலம். குடும்பத்தில் வாக்கு வாதம் இருக்கும். விட்டுக் கொடுத்து நடப்பீர்கள். காதலரும் சோதனைக்கு ஆட்படநேரிடும். தேக சுகம் நன்று. தொழில் முன்னேற்றம் இருக்கும்.



### மகரம்: உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2.

இராசியில் குருபார்வை பெற்று சூரியனும் புதனும் இருப்பது நலம். இருப்பினும் சனியின் பார்வையும் உண்டு. பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வி முன்னேற்றம் உண்டு. சகோதர உதவியுண்டு. பிரயாணம் அமையும். வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்தக்காரர் பெருந்தன்மையுடன் நடந்து கொள்வர். உறவு விருத்தியடையும். மனம் ஆனந்த பரவசநிலையில் இருக்கும். சாதகமான எண்ணங்களில் தோய்ந்து இருக்கும். எதிரிகள் உங்களுக்குக் கிட்டவரமாட்டார்கள். எட்ட நின்று சத்தம் போடுவார்கள். குடும்பத்தில் பூரண அமைதி நிலை இருக்கும். காதலர் வாழ்வு ஆனந்தமயம். தொழில் சிறப்பு உண்டு.



### கும்பம்: அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3.

இராசிநாதன் வீரியஸ்தானத்தில் பலவீனம் அடைந்தாலும் புதன், சுக்கிரன் போன்ற சுபக் கிரகம் இருபுறமும் அரணாக இருப்பது சிறப்பு. பணத்தட்டுப்பாடு இல்லை. கல்வியில் ஆர்வம் உண்டு. சகோதர உதவி உண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார் உறவினர் விசுவாசமாக இருப்பர். மனம் அமைதிப்படாது. மனச்சஞ்சலம் உண்டு. வீண் பயம் தோன்றும். எதிரிகளின் பலம் கூடும். இருப்பினும் உடனடி ஆபத்தில்லை. குடும்ப விசுவாசம் உண்டு. அன்பைப் பரிமாறிக் கொள்வர். காதலர் வாழ்வில் தேன் சிந்தும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும். புது உத்தியைக் கையாண்டு வெற்றி வெறுவீர்.



### மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இராசியில் சுக்கிரன் பூரண பலத்துடன் இருப்பது நன்மையைத் தரும். இரண்டாம் வீட்டில் சனி பலவீனமாக இருப்பது சற்றுப் பின்னடைவுதான். கையில் காசு இருக்கும். கல்வி முன்னேற்றம் உண்டு. சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார் உறவினர் அன்பு பாராட்டுவர். மனம் அதிவேகமாக இயங்கும். களைப்படைந்து சாந்த நிலைக்கு வரும். கற்பனையில் இன்பம் காணும். எதிரிகள் பகையை மறந்து நட்புக் கொள்வர். குடும்பத்தில் அமைதி நிலவும். காதலர் வாழ்வு களைகட்டும். கொண்டாட்டம் தான். தேகசுகம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் போட்டி இருப்பினும் வெற்றியுண்டு.

# நாய்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு



*மனிதனுக்கு மாத்திரமல்ல நாய்களுக்கும் குடும்பக்கட்டுப்பாடு செய்யப்படுகிறது. வீட்டுப் பாதுகாவலன் நாய் ஆயினும் நாய்கள் சரிவரப் பராமரிக்கப்படாமல்தான் உள்ளன.*

*சென்னை வேளச்சேரி விலங்குகள் பராமரிப்பு மையத்தில் உள்ளவர்கள் தினமும் காலையில் கிளம்பி அயல்பகுதிகளில் அலைந்து திரியும் நாய்களைப் பிடித்துக் கொண்டு வருகின்றனர்.*

*அவைகளைச் சுத்தப்படுத்தி மறுநாள் அவைகளுக்கு குடும்பக்கட்டுப்பாடு செய்து 7 நாட்கள் பராமரிக்கிறார்கள். பின்னர் பிடித்த இடத்திலே நாய்களை விடுவதுதான் இந்த மையத்தின் வேலை.*

*மேலும் தெருவில் அநாதையாகக் கிடக்கும் குட்டி நாய்களை மையத்திற்குக் கொண்டு வந்து அவைகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்வார்கள். நல்ல போஷாக்குடன் அவை வளர்க்கப்படும். பின்னர் கேட்பவர்களுக்குத் தத்துக் கொடுக்கப்படுகிறது.*

*நிர்வாகி பத்மாவதி கூறியதாவது:–*

*எங்கள் மையத்தில் இருந்து தினமும் கிளம்பி நாய்கள் அதிகம் உள்ள பகுதிகளுக்குச் சென்று நாய்களைப் பிடித்து வந்து அவைகளுக்குக் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டுவந்த இடத்திலேயே விட்டுவிடுவோம்.*

*இது தவிர தெருவில் சுற்றித் திரியும் நாய்க் குட்டிகளைப் பிடித்து வந்து அவைகளுக்கு மருத்துவம் பார்த்து நல்ல போஷாக்குடன் வளர்த்து, வளர்க்கப் பிரியப்படுபவர்களிடம் ஒப்படைப்போம்.*

*இந்த மையத்தின் சார்பில் இதுவரை 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட நாய்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, இந்த மையத்தில் 3 மருத்துவர்கள், 2 செவிலியர்கள் உட்பட மொத்தம் பத்துப் பேர் வேலை செய்கின்றனர்.*


*ஒவ்வொரு வாரத்திற்கும் 70 நாய்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு செய்யப்படுகிறது.*

*அவற்றை இனங்காண கழுத்தில் அடையாளத் தகடு கட்டப்படுகிறது.*

*மேலும் நாயின் காதில் அடையாளத்திற்கு சற்றுக் கிழிக்கப்பட்டு விடப்படுகிறது. இதனால் குடும்பக்கட்டுப்பாடு செய்த நாய்களைக் கண்டுபிடித்துவிட முடியும்.*

*இந்த சேவையைப் பொது மக்களும் அதிகம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவரவர் வீட்டில் உள்ள செல்லப் பிராணிகளுக்கும் நாங்கள் இலவசமாக குடும்பக் கட்டுப்பாடு செய்கிறோம்.*

*இவ்வாறு அவர் கூறினார்.*



## கல்முனை தமிழ்ப்பிரிவு உப பிரதேச செயலக விவகாரம்:

# தமிழருக்குத் துரோகம்! எதிர்த்து உண்ணாவிரதம்!!

### பிந்தியவை எல்லாம் தரம் உயர்வு; ஆக முந்தியது புறக்கணிப்பா?

முழுமையான பிரதேச செயலகம் ஒன்று கல்முனை தமிழ்ப் பிரிவுக்குக் கிடைக்குமென எதிர்பார்த்து இலவுகாத்தகிளியான நிலையில் கொதித்தெழுந்திருக்கிறார்கள் கல்முனைப் பிரதேசத் தமிழ் மக்கள்!

இந்த மனக்கொதிப்பு உண்ணாவிரதப் போராட்டமாக வெளிப்பட்டிருக்கிறது.

கல்முனை தமிழ்ப்பிரிவு உபபிரதேச செயலகத்தை முழுமை வாய்ந்த பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துமாறுகோரி கல்முனைப் பிரதேச தமிழ் மக்கள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர்.

கல்முனை தமிழ் பிரிவு கிராமஅபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளன ஏற்பாட்டில் கடந்த மாதம் 24ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஒன்றியத்தலைவர் எஸ்.காந்தரூபன், உபதலைவர் எம்.ராஜேஸ்வரன் ஆகியோர் தலைமையில் கல்முனை தமிழ்ப் பிரிவு உபபிரதேச செயலகம் முன்பாக நடைபெற்ற இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பெருந்தொகையான ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர்.

ஒன்றிய முக்கியஸ்தர்களான செயலாளர் ஆர்.சதாசிவம், உபசெயலாளர் பீ.சாமித்தம்பி, பொருளாளர் நந்தபால, தமிழர் விடுதலைக்கூட்டணி கல்முனைக்கிளைத் தலைவர் எம்.மயில்வாகனம், கூட்டணி அம்பாறை மாவட்ட மகளிர் அணித்தலைவி திருமதி அன்னம்மா செளந்தர்ராஜன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் டி.எம்.சுனில் விமலரத்தன, உட்படப் பல பிரமுகர்கள் இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.



தமிழர் விடுதலைக்கூட்டணியின் அம்பாறை மாவட்ட மாதர் அணித் தலைவி திருமதி அன்னம்மா செளந்தராஜன் உட்பட பல பெண்கள் உண்ணாவிரம் இருக்கிறார்கள்

''மந்திரிசபை அங்கீகரித்த கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை உடன் நடைமுறைப் படுத்து''-

''தமிழர் நிர்வாகம் இரண்டாம் தரமானதல்ல''-

''தமிழ் விவகார அமைச்சே தமிழ்ப் பிரிவைத் தரமுயர்த்து''-

''கல்முனைத் தமிழரை அந்நியப் படுத்தாதீர்''-

''தமிழர் பிரதேச செயலகத்தைத் தவிடு பொடியாக்காதே''-

''தவித்த முயல்அடிப்பதை நிறுத்து'' என்பன போன்ற வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளை உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டோர் ஏந்தியிருந்தனர்.

கல்முனைத் தமிழ் மக்களின் இப்போராட்டத்திற்கு பல்வேறு தமிழ்க் கட்சிகளும், அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்திருந்தன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான குணசேகரம் சங்கர், மாவை சேனாதிராஜா, பொன் செல்வராசா முதலானோர் பிரதேச செயலக அந்தஸ்து கோரிக்கை தொடர்பில் சம்பந்தப்பட்ட பொதுநிர்வாக அமைச்சருடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாக ஒன்றியத்தினருக்கு அறிவித்துள்ளனர்.

ரெலோ அமைப்பின் உபதலைவர் கு.மகேந்திரன் (கென்றி) இது தொடர்பான அவசர மகஜர் ஒன்றை ஜனாதிபதிக்கும், பொது நிர்வாக அமைச்சருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

கல்முனை தமிழ்ப்பிரிவு உபபிரதேச செயலகம் கல்முனைப் பிரதேச தமிழ் மக்களின் நீண்ட கால கோரிக்கையின் பேரில் 12.04.1989ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.

28-07-1993 இல் கூடிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி இந்த உபபிரதேச செயலகத்தை நிரந்தரமாக்குவதற்கான (பிரதேச செயலகமாக) ஒழுங்குகளைச் செய்யுமாறு உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சின் செயலாளரினால் அனுப்பப்பட்ட HA/DA/2/2 இலக்கமும் 09-08-1993ஆம் திகதியுமிடப்பட்டதுமான கடிதத்தின்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரையும் இந்த உபபிரதேச செயலகம் பிரதேச செயலகமாக நிரந்தரமாக்கப் படவில்லை.

ஆனால் குறுகிய காலங்களுக்குள் ஸ்தாபிக்கப்பட்ட சில உபபிரதேச செயலகங்கள் ஏற்கனவே பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன. மற்றும் சில உபபிரதேச செயலகங்கள் தரமுயர்த்தப்படவுள்ளன.

இந்நிலையில் கல்முனை தமிழ்ப் பிரிவு உபபிரதேச செயலகம் 1989ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப் பட்டிருந்தும் முழுமையான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துவதில் ஏன் புறக்கணிப்புக் காட்டப்படுகின்றது என கல்முனை வாழ் தமிழ் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இனி போராட்டக்களத்தில் குதிப்பதைத்தவிர வேறு வழியில்லையெனத் தீர்மானித்து அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர்.


உண்ணாவிரதம் இருந்த பெண்களில் ஒரு பகுதியினர்.

சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியேனும் தமது இந்த உரிமைப் போராட்டத்தை வெல்ல அவர்கள் தயார் நிலையிலுள்ளனர்.

—ஏ.எல்.எம்.சலீம்


சிவஸ்ரீ க.ஐ.யோகராஜா ஐயர், சிவஸ்ரீ குணசீல சர்மா ஐயர் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைக்கின்றனர்.


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




டிக்கோயா
ஒட்றி எஸ்டேட்டைச் சேர்ந்த
சிவகுமார் — மஞ்சுளா
தம்பதிகளின் அன்புப் புதல்வன்
யுரேஷன் தனது முதலாவது
பிறந்தநாளை இன்று 4.02.2001
வெகுவிமரிசையாக
தனதில்லத்தில்
கொண்டாடுகிறார். இவரை
பெற்றோர், உறவினர் வளமோடு
பல்லாண்டு வாழ
வாழ்த்துகிறார்கள்.



15 வருடங்களில் செலுத்தக்கூடிய
METROவின் நீண்டகால கடன் வசதித் திட்டம்
கொட்டாஞ்சேனையில் சொகுசு மாடி வீடுகள்



விலைகள் 21 ஆயிரம் US $

METRO COURT

வீடமைப்புத் திட்டத்தில் புதியதோர் சகாப்தம்
8 மாதங்களில் வீட்டில் குடிபுகலாம்
15 வருட தவணையில் பணத்தைச் செலுத்தலாம்
58A, Mayfield Roadல் அமைந்த
நவீன தொடர்மாடி வீடுகள்

சாதாரண அம்சங்கள்
- 2 மற்றும் 3 படுக்கை அறைகள் கொண்ட வீடுகள்
- Tiles பதிக்கப்பட்ட தரைகள்
- பிளாஸ்ரிக்கிலான (P.V.C.) குளியலறைக் கதவுகள்
- சகல மாடிகளுக்குமான மின்னுயர்த்தி (Lift) வசதி

விசேட அம்சங்கள்
- Geyser மூலம் சுடுநீர்
- இன்டர் (Intercom) வசதி
- செய்மதி தொலைக்காட்சி இணைப்புக்கள்
- மேல்மாடியில் விசேட வைபவங்களுக்கான வசதி
- வாகனத் தரிப்பிட வசதி

நிரந்தரத்தொழில் புரிவோருக்கு கடன் வசதியில் முன்னுரிமை
வெள்ளவத்தையில் METROவின் மற்றைய வீடமைப்பு திட்டங்கள்
Millennium Court No.5, Perera Lane, Wellawatte.
வீடுகள் கையளிக்கப்பட்டுவிட்டன
Majestic Court No.25, E.S.Fernando Mw., Wellawatte.
வீடுகள் குடிபுக தயார் நிலையில் உள்ளன

பதிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும்:
METRO CONSTRUCTIONS (PVT) LTD
25, E.S.Fernando Mawatha Colombo-6.
58A, Mayfield Road, Colombo-13.
Tel: 504406, 321302 Fax:074-513841
Mobile: 077-360708, 077-306304



நியூ திவ்யா ஜுவலர்ஸ்



உங்கள் கனவில் மின்னிய
தங்க நகைகள்
நனவாகும் வேளையில்
உங்கள் அங்கங்கள்
எங்கள் தங்கங்களால் மின்னட்டும்.....
NEW DHIVIYA JEWELLERS
42-C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 508501, 505065
Specialist in 22kt. Gold Jewellery



மிருனாஸ் சுப்பர்




வீட்டிற்கு தேவையான சகல விதமான
மளிகைப் பொருட்கள்,
இறைச்சி வகைகள், ஐஸ்கிறீம்,
சொக்லெட், பால்மா, சமையலுக்கான
அனைத்து தேவைகளுக்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்



MIRUNA'S SUPER
342, Aluthmawatha Road, Colombo-15.
Tel: 525147 Fax: 075-364298
E-mail: miruna@stl.lk



நியூ திவ்யா ஜுவலர்ஸ்



உங்கள் கனவில் மின்னிய
தங்க நகைகள்
நனவாகும் வேளையில்
உங்கள் அங்கங்கள்
எங்கள் தங்கங்களால் மின்னட்டும்.....
NEW DHIVIYA JEWELLERS
42-C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 508501, 505065
Specialist in 22kt. Gold Jewellery


இப்பத்திரிகை கொழும்பு 06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 பெப்ரவரி 4 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.